The Journal of
The Thanjavur Maharaja Serfoji's

SARASVATI MAHAL LIBRARY.

EDITED BY

C. BALASUBRAMANIAN,
Administrative Officer
SARASVATI MAHAL LIBRARY
THANJAVUR.

Vol. XLIV   Nos. 1, 2, 3 & 4

PUBLISHED ON BEHALF OF

THE SARASVATI MAHAL LIBRARY
THANJAVUR.

ANNUAL SUBSCRIPTION Rs. 50/-

A. D. 1998

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XLIV A. D. 1998 Saka 1919 No. 1, 2, 3 & 4

முகவுரை

சரசுவதி மகால் நூலகத்தின் ஆராய்ச்சிப் பருவ இதழ்த் தொகுதி 44ஐத் தற்பொழுது ஆய்வாளர்கள், அறிஞர்கள் மற்றும் வாசகர்கள் முன் வைப்பதில் பெருமகிழ்ச்சியுறுகின்றேன்.

இவ்விதழில் சுவடியியல், பதிப்பியல் நோக்கிலான தமிழ், வடமொழி ஆகிய மொழிப்படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

வடமொழிக் குறுஞ்சுவடிப் பதிப்புகள் மூன்றும், வடமொழிச்சுவடிகளின் (சமண சமயம் சார்ந்தவை) விவர அட்டவணைத் தொகுப்பு ஒன்றும், வட மொழிக் கட்டுரையாக்கம் ஒன்றும், தமிழ்ச்சுவடிகள்—அச்சு நூல்களில் காணப் படும் பாடவேறுபாடுகளுள் ஒன்றினைக் குறித்த பாடவேறுபாட்டு ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றும் இவ்விதழினை அணிசெய்கின்றன.

இந்தப் பருவ இதழின் படைப்பாக்கங்களுள் 'அகநானூற்றுப் பாடலில்... கூர்வளியா? கூர்உளியா?' என்னும் கட்டுரை சுவடியியல் சார்ந்த பாடவேறு பாட்டு ஆராய்ச்சிக் கட்டுரையாகவும், 'இராட்சச காவியம்'. 'கோணேச்வர மாஹாத்மியம்' 'காவேரீ சதகம்' ஆகியன வடமொழிக் குறுஞ்சுவடிப் பதிப்புக் களாகவும், 'A Catalogue of Sanskrit Manuscripts of Jainism in the Sarasvati Mahal Library' என்னும் படைப்பு இந்நூலக வடமொழித் துறையில் உள்ள சமண சமயச் சுவடிகளின் விவர அட்டவணையாகவும், 'தச மஹா வித்யா சங்க்ரஹ:' என்பது வடமொழிக் கட்டுரையாக்கமாகவும் அமைந்துள்ளன.

இப்பருவ இதழில் இடம்பெற்றுள்ள வடமொழிப் படைப்புக்கள், தக்க தமிழ் முகவுரை, கருத்துரையுடன் விளக்கமுறப் பதிப்பிக்கப்பெற்றுள்ளன.

இவ்விதழினை ஏற்றமுறச் செய்யும் பதிப்பாக்கங்களும் கட்டுரையாக்கங்களும் ஆய்வுலகிற்குப் பயன்மிகு நல்கும் வண்ணம் அரிதின் முயன்றும் ஆழ்ந்து உழைத்தும் ஆக்கப்பெற்றுள்ளன. இவற்றைச் சிறப்பான முறையில் படைத்தளித்துள்ள நூலகப் பண்டிதர்களையும், நுண்படத்துறைக் காப்பாளரையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

இவ்விதழ் நன்முறையில் வெளிவர ஆவன்செய்துள்ள இப் பருவ இதழின் ஆசிரியரான நிருவாக அலுவலர், திரு சி. பாலசுப்ரமணியன் அவர்களுக்கும், இதழ் வெளியீட்டுப் பணிகளுக்குத் துணைநின்ற நூலகர் மற்றும் வெளியிட்டு மேலாளர் திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், இப் பருவ இதழ்ப் பதிப்புப் பணிகளுக்குத் துணைநின்ற தமிழ்ப் பண்டிதர் திரு ய. மணிகண்டன் அவர்களுக்கும், இப் பருவ இதழினைச் செம்மையாக அச்சிட்டுத் தந்துள்ள நூலக அச்சகப் பணியாளர்களுக்கும், இவ்விதழ் சிறக்க உதவிய ஏனையோருக்கும் என் பாராட்டுக்கள்.

இவ்விதழினை அறிஞர்களும், ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் வழக்கம் போலப் படித்துப் பயன்பெறுதல் திண்ணம்.

து. நா. இராமநாதன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
18—3—98.

பொருளடக்கம்

		பக்கம்
✳	முகவுரை	
1.	பருவ இதழ்ப் படைப்புகள் சுருக்க அறிமுகம் — திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர்.	*1—3*
2.	அகநானூற்றுப் பாடலில்……… கூர்வளியா……? கூர்உளியா……? — குடவாயில் பாலசுப்ரமணியன், எம். ஏ., காப்பாளர்—நுண்படப்பிரிவு.	*1—8*
3.	இராக்ஷஸ காவியம் — தேதியூர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், மேனிலை ஸம்ஸ்க்ருத பண்டிதர்.	i—iv & *1—44*
4.	காவேரீ சதகம் — நியாய சிரோமணி திரு. ஆ. வீரராகவன், எம். ஏ., பி. எட்., ஸம்ஸ்க்ருத பண்டிதர்.	*1—26*
5.	கோணேஸ்வர மாஹாத்மியம் — ஸாஹித்ய சிரோமணி திருமதி. எஸ். இராஜலக்ஷ்மி, ஸம்ஸ்க்ருத பண்டிதர்.	*1—24 & 1—23*
6.	A Catalogue of Sanskrit Manuscripts of Jainism in the Sarasvati Mahal Library, Thanjavur. — வேதாந்த சிரோமணி, தமிழ் வித்வான் திரு. என். ஸ்ரீநிவாஸன், ஸம்ஸ்க்ருத பண்டிதர்.	*1—54*
7.	தசமஹாவித்யா ஸங்க்ரஹ : — நியாய சிரோமணி திரு. எஸ். சுதர்சனன், எம்.ஏ., ஸம்ஸ்க்ருத பண்டிதர்.	*1—23*

பருவ இதழ்ப் படைப்புகள்–சுருக்க அறிமுகம்

அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்.,
வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர்.
சரசுவதி மகால் நூலகம்,

அகநானூற்றுப் பாடலில்.........
கூர்வளியா......? கூர்உளியா......?

சங்க இலக்கியங்களுள் ஒன்றான அகநானூற்றின் நித்திலக்கோவையில் நக்கீரனாரின் பாடலொன்றுள்ளது. (பாடல் எண் 340) சில பதிப்புகளில், அப்பாடலில் ' கூர்வளி ' என்னும் சொல்லாட்சியும் சில பதிப்புகளில் ' கூர்உளி ' என்னும் சொல்லாட்சியும் இடம்பெற்றுள்ளது. சுவடிகளிலும், அச்சுநூற் பதிப்புகளிலும் காணப்படுகின்ற இப்பாடங்களில் சரியான பாடம் எதுவென ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. அகநானூற்றின் பல பதிப்புகளையும், பிற சங்க இலக்கியச்செய்யுளடிகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்தும் பட்டீச்சுரத்து ஓவியமொன்றின் துணைகொண்டும் சரியான பாடம் 'கூர்உளி'யே என்பதை இக்கட்டுரை நிறுவுகின்றது.

சுவடியியல்—பதிப்பியல் துறைசார்ந்த இக்கட்டுரையை இந்நூலகத்தின் நுண்படத்துறைக் காப்பாளர் குடவாயில் திரு. எம். பாலசுப்ரமணியம் அவர்கள் இங்கு எழுதியுள்ளார்.

இராக்ஷஸ காவ்யம்

இந்நூலகத்தின் வடமொழித்துறையில் இடம்பெற்றுள்ள B 4781/ D. 3836ஆம் எண்ணிட்ட, வடமொழிச் சுவடியின் பதிப்பு நூலாகும் இது.

மகாகவி காளிதாசனால் இயற்றப்பட்ட இந்நூலில் இராட்சசன் யாரும் வருணிக்கப்படவில்லை. இராட்சசத்தனமான சொற்கள்கொண்டு அமைந்த நூல் என்பதால் இந்நூல் 'இராக்ஷஸ காவியம்' என்னும் பெயரினைப் பெற்றுள்ளது எனலாம்.

இந்த வடமொழி இலக்கியத்தை விரிவான தமிழ் மொழிபெயர்ப்புடனும், முன்னுரையுடனும் குறுநூலாக இந்நூலக மேனிலை வடமொழிப்பண்டிதர் தேதியூர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள் இங்குப் பதிப்பித்துள்ளார்.

காவேரீ சதகம்

இந்நூலகத்தின் வடமொழித் துறையில் இடம்பெற்றுள்ள, காசிநாதன் தொகுப்பு 3-50ஆம் எண்ணிட்ட, நாகரி எழுத்திலான காகிதச்சுவடியின் குறுஞ் சுவடிப்பதிப்பாக இவ்விலக்கியம் அமைந்துள்ளது.

சதக இலக்கியமாக விளங்குகின்ற இந்நூலின் சுவடியில் ஒருசில செய்யுள் கள் கிடைக்கப்பெறவில்லையாயினும், கிடைத்துள்ளவரை இந்நூலின் செய்யுள் கள் காவிரி ஆற்றின் பெருமைகளையும், நீரோட்ட வருணனைக் காட்சிகளையும் பல்வகையான சந்தங்களில் அழகுற எடுத்துரைக்கின்றன.

இந்நூலகத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ள இவ்வடமொழிச் சதக நூலினை இயற்றியர் சுவாமிமலை வேங்கடேசகவி என்னும் கவியாவார். இவ் விலக்கியத்தினைத் தமிழ்க் கருத்துரைச் சுருக்கத்துடன் இந்நூலக மேனிலை வடமொழிப் பண்டிதர் திரு ஆ. வீரராகவன் அவர்கள் இங்குப் பதிப்பித்துள்ளார்.

கோணேஸ்வர மாஹாத்மியம்

இந்நூலகத்தின் வடமொழித்துறையில் இடம்பெற்றுள்ள R. No. 11324, D. No. 9702ஆம் எண்ணிட்ட, கிரந்த எழுத்திலான ஓலைச்சுவடியின் பதிப்பு நூலாகும் இது.

'கோணேச்வரம்' என்ற குடவாயில் தலத்தின் சிறப்பினை எடுத்துரைக் கும் தலபுராண நூலாக இந்நூல் அமைந்துள்ளது.

இச்சிறு சுவடிநூலை விரிவான தமிழ் முகவுரையுடனும், தமிழாக்கச் சுருக்கத்துடனும் இந்நூலக வடமொழிப் பண்டிதர் திருமதி எஸ். இராஜலட்சுமி அவர்கள் இங்குப் பதிப்பித்துள்ளார்.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ள ஜைன சமய சம்ஸ்க்ருதச் சுவடிகளின் அகர வரிசைப்பட்டியல்

இந்நூலகத்தின் வடமொழித்துறையில் இடம்பெற்றுள்ள 314 ஜைன சமயச் சுவடிகளுக்கான அகரவரிசையிலான விவரப்பட்டியலாக இந்நூல் அமைந்துள்ளது.

சுவடிகளின் தலைப்பு வடமொழி மற்றும் ஆங்கிலத்திலும், ஏனைய விவரங்கள் ஆங்கிலத்திலும் இதில் அளிக்கப்பட்டுள்ளன. இவ்விவரப்பட்டியல் குறித்து விரிவான முகவுரை தமிழில் இடம்பெற்றுள்ளது.

இவ்விவரப்பட்டியல் நூலினை நூலக வடமொழிப் பண்டிதர் திரு ந. சீனிவாசன் அவர்கள் இங்கு உருவாக்கிப் பதிப்பித்துள்ளார்.

தசமஹாவித்யா ஸங்க்ரஹ :

இந்து சமய வழிபாடு சௌரம், சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம் என அறுபெரும் பிரிவுகளில் அடங்கும். இவைகளில் ஒன்றான சாக்த வழிபாடு வட இந்தியாவில் மிக அதிகமாக உள்ளது. இங்குக் குறைந்த அளவில் நடைமுறையிலுள்ளது. இப்பிரிவில் பத்து தேவியர்களைப் பற்றிக் கூறும் "சாக்தப்ரமோதம்" என்னும் நூல் ஒன்று நமது நூலகத்தில் காணக்கிடைக்கின்றது. அதிலிருந்து மிகவும் சுருக்கமாக நடைமுறைக்குத் தேவையான த்யானம், யந்த்ரோத்தாரம், மந்த்ரோத்தாரம், மந்த்ரம் ஆகிய அனைத்தும் இக்கட்டுரையில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது. அனைவரும் படித்துப் பயன்பெறும் பொருட்டு அம் மூலப்படைப்பினை இந்நூலகத்தின் வட மொழிப் பண்டிதர் திரு எஸ். சுதர்சனன் அவர்கள் தமிழ் ஒலிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்பு தந்து இங்கு பதிப்பித்துள்ளார்.

அகநானூற்றுப் பாடலில் ....
கூர்வளியா.....? கூர்உளியா.....?

குடவாயில் பாலசுப்ரமணியன்,
நுண்படப்பிரிவு,
சரசுவதி மகால் நூலகம்.

அகநானூற்று நித்திலக்கோவையில் நெய்தல் திணையில் பகற்குறிக் கண் தோழி தலைமகற்குச் சொல்லியது எனும் துறை அமைந்த நக்கீரனாரின் பாடலொன்றுள்ளது (பாடல் எண். 340) திரையன் என்பவனுக்கு உரியதான பவத்திரி எனும் ஊரின் சிறப்பை இப்பாடல் கூறுகின்றது. நெய்தல் நிலத்துத் தலைவன் ஒருவன், தான் காதல் கொண்ட தலைவி ஒருத்தியுடன் குறிப்பிட்ட ஓரிடத்தே நாளும் சந்தித்து இன்புற்று வருகிறான். இதற்குத் தோழியும் உறுதுணையாக விளங்கினாள். பகற்பொழுதில் கானற் சோலையில் கூடியிருந்து, இரவு நெருங்கவும் அவன் தன்னூர்க்குச் செல்லுதலை வழக்கமாகச் கொண்டிருந்தான். இந்நிலையில் அவர்களை மண உறவால் நிலையாக இணைக்க விரும்பிய தோழி தலைவியின் தனிமையான இரவு நேரத் துன்பத்தினைத் தலைவனுக்கு எடுத்துரைத்து அன்று அவர்கள் பாக்கத்தில் தங்கிச் செல்லுமாறு கூறுகிறாள். இதனை அகநானூற்று முதற்பதிப்பு நூல் (கம்பர் விலாசம்) பின்வருமாறு காட்டுகின்றது.

நித்திலக்கோவை—பாடல் எண். **340—நெய்தல்**

பன்னா ளெவ்வந் தீரப் பகல்வந்து
புன்னையம் பொதும்பி னின்னிழற் கழிப்பி
மாலை மால்கொள நோக்கிப் பண்ணாய்ந்து
வலவன் வண்டே ரியக்க நீயுஞ்
செலவிருப் புறுத லொழிகதில் லம்ம
செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
பல்பூங் கானற் பவத்திரி யன்னவிவ
ணல்லெழி லிளநலந் தொலைய வொல்லெனக்
கழியே யோத மல்கின்று வழியே.

வள்ளெயிற் றரவொடு வயமீன் கொட்குஞ்
சென்றோர் மன்ற மான்றின்று பொழுதென
நின்றிறத் தவலம் வீட வின்றிவட்
சேப்பி னெவனோ பூக்கேழ் புலம்ப
பசுமீ னொடுத்த வெண்ணொன் மாஅத்
தயிர்மிதி மிதவை வார்குவ நினக்கே
வடவர் தந்த வான்கேழ் வட்டங்
குடபுல வுறுப்பிற் கூட்டுபு நிகழ்த்திய
வண்டிமிர் நறுஞ்சாந் தணிகுவந் திண்டிமி
லெல்லுத்தொழின் மடுத்த வல்வினைப் பரதவர்
கூர்வளிக் கடுவிசை மண்டலிற் பாய்ந்துடன்
கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கட லசைவளி யெறிதொறும் வினைவிட்டு
முன்றிற் றாழைத் தூக்குந்
தெண்கடற் பரப்பினெம் முறைவி னூர்க்கே.

நக்கீரர்

என்பது: பகற்குறிக்கண் தோழி தலைமகற்குச் சொல்லியது.

பாடவேறுபாடு :

கூருளிக் கடுவிசை மாட்டலிற் பாய்புடன். (20)

இப்பாடலில் தோழி தனது ஊரின் அழகினைக் கூறுகின்றாள். அப்போது கடற்கரையில் அமைந்துள்ள அப்பாக்கத்தில் உள்ள மனைகளுக்கு முன்பாக விளங்கும் தாழை மரங்களின் மேற்கிடக்கும் மீனவர்களுடைய கிழிந்த வலைகள் காற்றினால் அசைந்து கொண்டிருக்கும் என்று அக்காட்சியினை எடுத்துரைக்கின்றாள். அம்மீன்பிடி வலைகள் எதனால் கிழிந்தன என்பதும் இப்பாடலில் பேசப்பெறுகின்றது. இதனை அகநானூற்று ஏட்டுச் சுவடிகள் இரண்டுவிதமாகக் கூறுகின்றன. இதுவரை வெளிவந்துள்ள அச்சுப்பதிப்புகள் வாயிலாக இதனைக் காண்போம்.

அகநானூற்றின் முதற்பதிப்பு:- (1920—கம்பர் விலாசம்)

திரு. ரா. இராகவய்யங்கார் பரிசோதித்து இராஜகோபாலார்யன் என்பவரால் பதிப்பிக்கப்பெற்ற அகநானூற்றுப் பதிப்பில் முந்நூற்று நாற்பதாம் பாடலில் (அடி எண். 18—21)

.................திண்டிமி
வெல்லுத் தொழின் மடுத்த வல்வினைப் பரதவர்
கூர்வளிக் கடுவிசை மாண்டலிற் பாய்ந்துடன்
கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை

என்று காணப்பெறுகின்றது. இப்பாடலுக்குரிய பாடபேதமாகக் "கூருளிக் கடுவிசை மாட்டலிற் பாய்புடன்" என்ற அடி அடிக்குறிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

சமாஜப்பதிப்பில்.........

1940 ஆம் ஆண்டு திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் "சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்)" எனும் நூல் சைவ சித்தாந்த சமாஜத்தினால் வெளியிடப்பெற்றது பின்னர் இதே நூல் பாரி நிலையத்தாரால் இரண்டாம் பதிப்பாக 1967இல் வெளிவந்துள்ளது. இந்நூலில் அகப்பாடல் முந்நூற்று நாற்பதில்

"......... .... திண்டிமில்
எல்லுத் தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்
கூருளிக் கடுவிசை மாட்டலிற் பாய்புடன்
கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை"

என்னும் அடிகளே காணப்பெறுகின்றன. (பக். 704)

சைவ சித்தாந்த நூற்பதிப்புகளில்.........

திருநெல்வேலிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நாவலர் ந. மு. வேங்கடசாமிநாட்டார் மற்றும் கவியரசு வேங்கடாசலம்பிள்ளை ஆகியவர்களின் உரையுடன் (*1944, 1951* மற்றும் *1957*ஆம் ஆண்டுகளில்) வெளியிட்டது. அதில் மேலே கண்ட அடிகளை

"...... .... திண்டிமில்
எல்லுத் தொழின் மடுத்த வல்வினைப் பரதவர்
கூர்வளிக் கடுவிசை மாண்டலிற் பாய்ந்துடன்
கோட்சுறா கிழித்த கொடுமுடி நெடுவலை"

எனப்பதிப்பித்த ஆசிரியர்கள், மூன்றாம் அடிக்குப் பாடவேறுபாடாக அடிக் குறிப்பில்,

" கடுவிசை மாட்டலின் பாய்புடன் " —என்றும் குறிப்பிட்டுள்ளனா.

இப்பாடல் அடிகளுக்கு உரை எழுதிய இவர்கள் " திண் திமில் எல்லு தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்—திண்ணிய படகுடன் சென்று பகலிலே மீன்பிடிக்கும் தொழிலை மேற்கொண்ட வலியசெயலை உடைய மீன்பிடிப்போர், கூர்வளி கடுவிசை மண்டலின்—கடிய காற்றின் மிக்க விசையுடன் செல்லுதற் கண், கோள்சுறா பாய்ந்து உடன் கிழித்த கொடுமுடி நெடுவலை—கொலைத் தொழிலை உடைய சுறாமீன்கள் ஒருங்கே பாய்ந்து கிழித்த வளைந்த முடி களைக் கொண்ட நீண்ட வலைகள் "—என்று கூறியுள்ளனர்.

இதே அடிகளுக்கு உரை எழுதிய பெருமழைப் புலவர் பொ. வே. சோம சுந்தரனார் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகப் பதிப்பில் (1970), " திண் திமில் எல்லுத் தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்-திண்ணிய படகுகளில் சென்று தமது பகற்பொழுதிற்குரிய தொழிலை மேற்கொண்ட கொடுந்தொழிலையுடைய நெய்தனில மாக்கள்: கூர்வளி கடுவிசை மண்டலின் பாய்ந்துடன் கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை—மிக்க காற்றினது விரைந்த விசையோடு செல்லுதலாலே ஒருங்கே பாய்ந்து கொல்லும் தொழிலை யுடைய சுறாமீன்களால் கிழிக்கப்பட்ட வளைந்த முடியையுடைய சுறாமீன் களால் கிழிக்கப்பட்ட வளைந்த முடியையுடைய நெடிய வலைகள் என்று பொருள் கூறியுள்ளார்.

மர்ரே பதிப்பில்.........

மர்ரே இராஜம் அவர்கள் 1958இல் பதிப்பித்த அகநானூறு நூலில் மேலே கண்ட பாடலின் அடிகளை

> "...... .... திண் திமில்
> எல்லுத் தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்
> கூர்உளி கடுவிசை மாட்டலின், பாய்புஉடன்,
> கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை"

என்றே பதிப்பித்துள்ளார்.

புலியூர் கேசிகன் பதிப்பில்.........

புலியூர் கேசிகனோ தனது பதிப்பில் " ......திண் திமில் எல்லுத் தொழில் மடுத்த வல்வினைப் பரதவர் கூர் உளி கடுவிசை மாட்டலின் பாய்புடன் கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை........." என்ற பாடலைப் பதிப் பித்து, பொருள் கூறும்போது, திண்மையான படகுகளுடன் பகலிற் கடன்மேற்

சென்று மீன் பிடிக்கும் தொழிலினை மேற்கொண்டு வலிய செயலினைச் செய்பவர் பரதவர்கள்: அவர்கள் அங்ஙனம் சென்றக்கால் கடுமையான காற்றானது மிக்க விசையுடனே வந்து மோதுதலினாலும், கொலைத் தொழிலினை உடைய சுறா மீன்கள் ஒருங்கே பாய்ந்து கிழித்ததனாலும் வளைந்த முடிகளைக் கொண்ட நெடிதான சிதைவுற்ற வலைகள்........" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் சொற்பொருள் கூறுமிடத்துக் கூர்வளி—கடுங்காற்று; புயற்காற்று என்றும் கோட்சுறா—கொல்லும் தன்மையுடைய கொடிய சுறா மீன் என்றும் கூறியுள்ளார், இப்பதிப்பை நோக்கும்போது இவர் பதிப்பித்துள்ள பாடல் அடிகளுக்கும் பொருளுக்கும் மிகுந்த வேறுபாடு காணப்பெறுகின்றது.

சாமிநாதய்யர் நூலகப்பதிப்பில்......

1990 ஆம் ஆண்டில் வித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன் அவர்களைப் பதிப்பாசிரியராகக்கொண்டு வெளிவந்துள்ள உ. வே. சாமிநாதய்யர் நூலகத்து அகநானூற்றுப் பதிப்பில் (மூலமும்—உரையும்) உள்ள 340 ஆம் பாடலில் முன்பு குறிப்பிடப்பெற்றுள்ள அடிகள் பின்வருமாறு உள்ளன.

"...... .... திண்டிமி
லெல்லுத் தொழிலுழந்த வல்வினைப் பரதவர்
கூருளிக் கடுவிசை மாட்டலிற் பாய்ந்துடன்
கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை......"

இதற்கு,

"திண்ணிய படகிற்சென்று பகலில் மீன்பிடிக்கும் தொழில் மேற்கொண்ட வலிய செயலையுடைய மீன்பிடிப்போர் கடிய காற்றின் மிக்க ஓசையுடன் செல்லுதற்கண் கொலைத் தொழிலையுடய சுறாமீன்கள் ஒருங்கே பாய்ந்து கிழித்த வளைந்த முடிகளைக்கொண்ட நீண்ட வளைகள்......" என்று உரை கூறப் பெற்றுள்ளது. அடிக்குறிப்பில் பாடவேறுபாடு காட்டுமிடத்து "கூர்வளி கடுவிசை"—என்று குறிக்கப்பெற்றுள்ளது. பதிப்பித்த பாடலில் "கூர்உளி" எனக்கொண்டும், உரையில் கூர்வளி எனக்கொண்டு உரை கூறியிருப்பதும் முரண்பாடுடையனவாகக் காணப்பெறுகின்றன. மேலும் "கூர்வளி" எனக் கூறும் பாடல்களில் "மண்டலிற் பாய்ந்துடன்" என்றுதான் உள்ளன. "கூர் உளி" என்று கூறும் மற்றைய பதிப்புகள் "மாட்டலின் பாய்புடன்" என்று கூறும்போது இப்பதிப்பில் (மயிலம் வே. சிவசுப்பிரமணியன்) "மாட்டலிற் பாய்ந்துடன்" என்று காணப்பெறுகின்றது.

ஆய்வுப்பார்வையில்......

இதுவரை கண்ட அகநானூற்றுப் பதிப்புகளில் பாடல் எண் 340இல் காணப்பெறும் பாடவேறுபாடு (பாடபேதம்)களாவன:-

1. "கூர் உளிக் கடுவிசை மாட்டலின் பாய்புடன்"

2. "கூர் வளிக் கடுவிசை மண்டலிற் பாய்ந்துடன்"

இவற்றை ஓர் அகநானூற்றுப்பாடல், நற்றிணைப்பாடல், குறுந்தொகைப் பாடல் ஆகியவற்றின் செய்யுளடிகளோடு ஒப்பிட்டு ஆராய்கையில், கிடைக்கும் இரு பாடங்களுள் உண்மையான-சரியான பாடம் எதுவென அறிய முடிகின்றது. பொருத்தமான—சரியான பாடத்தை உறுதிசெய்ய முடிகின்றது. மேலும் அச்செய்யுளடிகள் கூறும் செய்திகளைக் கி. பி. 16ஆம் நூற்றாண்டுத் தஞ்சை நாயக்கர் கால ஓவியம் ஒன்றுடன் ஒப்பிட்டு நோக்கித் தெளிவும் பெற முடிகின்றது.

அகநானூற்று மணிமிடை பவளத்தின் 210ஆம் பாடலில்,

"குறியிறைக் குரம்பை கொலைவெம் பரதவர்
எறியுளி பொருத ஏமுறு பெருமீன்
புண்ணுமிழ் குருதி புலவுக் கடல் மறுப்பட"

என்று கூறப்பெறும் அடிகளை நோக்கும்போது பரதவர் எனும் மீன் வேட்டையாடுவோர் கடலில் சென்று பெருமீன் ஒன்றினை "எறி உளி" எனும் கருவியால் தாக்கியபோது அது அம்மீனின் உடலில் பாய்ந்ததால் ஏற்பட்ட புண்ணிலிருந்து குருதி பெருகிக் கடற்பரப்பெங்கும் சிவந்தது என்பதறிகிறோம்.

இதுபோன்ற நிகழ்ச்சி ஒன்றினை நற்றிணையில் மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார் பாடியுள்ளார். (பாடல் எண். 388)

"...... ....நோன்புரிக்
கயிறு கடையாத்த கடுநடை எறியுளித்
திண்டிமிற் பரதவர் ஒண்சுடர்க் கொளீஇ
நடுநாள் வேட்டம் போகி வைகறைக்
கடன்மீன் தந்து கானற் குவைஇ.........."

இப்பாடலைப் பதிப்பித்த பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் அவர்கள் இதற்கு உரை கூறுமிடத்து "வன்மைமிக்க புரிகளான் முறுக்குண்ட கயிற்று நுனியிலே கட்டிய திமிங்கிலத்தின்மீது எறிகின்ற ஈட்டியையுடைய, நீரில் விரைந்து செல்ல வல்ல திண்ணிய மீன் படகிலே செல்கின்ற பரதவர். ஒள்ளிய விளக்கங்களைக் கொளுத்திக்கொண்டு இரவு நடுயாமத்து வேட்டை மேற்சென்று கடலிலே பிடித்த மீன்களை விடியற்காலையிற் கொண்டுவந்து கழிக்கரைச் சோலையின் கண்ணே குவிப்பர்........." என்று கூறியுள்ளார்.

இப்பாடல் வாயிலாகத் திண்டிமிற் பரதவர் (படகில் செல்லும் மீனவர்) எறியுளி எனும் கூரிய கருவியில் (ஈட்டியில்), நன்கு முறுக்கிய வலிமையுடைய கயிற்றைப் பிணைத்துப் பின்பு அதனைக்கொண்டு மீன் வேட்டையாடுவர் என்பதறிகிறோம்.

குறுந்தொகை எனும் அருந்தமிழ் இலக்கியம் தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதய்யர் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது. அப்பதிப்பின்கண் உள்ள 304ஆம் பாடலில்,

"கொல்வினைப் பொலிந்த கூர்வாய் எறியுளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்
தாங்கரு நீர்சுரத் தெறிந்து வாங்குவிசைக்
கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீன் எறிய......"

எனும் அடிகள் காணப்பெறுகின்றன. இதற்கு அய்யர் அவர்கள்,

"கொல்லுந் தொழிலில் பொலிவுபெற்ற கூரிய முகத்தையுடைய எறிகின்ற உளியைத் தன்னுடைய முகத்தின்கண் அமையும்படி பொருத்தப்பெற்ற உலர்ந்த மூங்கிலின் வலிய காம்பைத் தாங்குதற்கரிய நீரையுடைய வழியின்கண் எறிந்து கைக்கொள்ளும் வேகத்தையுடைய வளைந்த மீன் படகையுடைய பரதவர் கொம்பையுடைய சுறாமீனை எறிய.. ..." என்று உரை கூறியுள்ளார்.

இம்மூன்று பாடல்களையும் இணைத்து நோக்கும்போது, மீனவர்கள் படகில் சென்று, மூங்கில் கழியில் ஒருபுறம் கூரிய உளி இணைக்கப்பெற்றதும், மற்றொருபுறம் வலிய முறுக்கேறிய கயிறு இணைக்கப்பெற்றதுமாகிய "கூர் எறியுளி" கொண்டு பெருமீன்களாகிய கோட்சுறாமீனைத் தாக்கி மீன் வேட்டை. யாடுவர் என்பதறிகிறோம்.



பட்டீச்சரத்து ஓவியம்

பட்டீச்சரத்து ஓவியம்

சோழப்பெருமன்னர்களின் தலைநகராம் பழையாறை மாநகர், பழசை என்றும் பட்டீச்சரம் என்றும் அழைக்கப்பெறும். இங்குள்ள சிவாலயத்துச் சுற்றுமண்டப விதானத்தில் தஞ்சை நாயக்க மன்னர் காலத்து ஓவியங்கள் உள்ளன. அவற்றுள் ஒரு தொகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இக்காட்சி ஓவியத்தில் படகொன்றினை ஒருவன் துடுப்புக் கொண்டு வலிக்க மற்றொருவன் கையில் எறிஉளி ஏந்தி மீன் ஒன்றினைத் தாக்கு முற்படும் கோலத்தில் திகழ்கிறான். இவனே முன்னர்ப் படகுடன் கயிற்றால் இணைக்கப்பெற்ற எறிஉளி கொண்டு தாக்கிய மீன் ஒன்று நீரில் அவ்வெறியுளி யோடு நீந்துகின்றது. அவ்வுளியானது மீனின் உடம்பைத் துளைத்து மறுபுறம் வெளிவந்துள்ளது. மீனவனின் கையில் உள்ள கழி மூங்கிற்கழி என்பதையும் அதன் முனையில் எறிஉளி (கூரிய சுளுக்கி) இரும்பால் செய்யப்பெற்று இணைக்கப்பெற்றிருப்பதையும், மீனைத் தாக்கியுள்ள எறியுளியின் கழியில் வலி மையுள்ள முறுக்கேறிய கயிறு கட்டப்பெற்றிருப்பதையும் காண்கிறோம். இவ் வரிய ஓவியத்தில் காணப்பெறும் ஒவ்வொரு கூறும் இங்குக் குறிப்பிடப்பெற்ற அகநானூறு, நற்றிணை, குறுந்தொகைப் பாடல்களில் குறிக்கப்பெற்றுள்ள செய்திகளை விளக்கி நிற்கின்றமை நன்கு விளங்கும்.

எனவே குறுந்தொகைப் பாடல் கூறும் "கூர்வாய் எறியுளி", நற்றிணை கூறும் "கடுநடை எறியுளி", அகநானூற்றின் மணிமிடைபவளம் கூறும் "பரதவர் எறியுளி" என்ற சொல்லாட்சிகளையும், பட்டீச்சரத்து ஓவியக் காட்சியையும் துணையாகக் கொண்டு மீண்டும் நித்திலக்கோவையில் நக்கீரர் பாடிய பாடலை நோக்குவோமாயின்; "கூர்வளிக் கடுவிசை மண்டலிற் பாய்ந்து டன்" என்னும் அடியைவிட "கூர் உளிக் கடுவிசை மாட்டலின் பாய்புடன்"— என்னும் பாடமே சரியான பாடம் என்பது நன்கு விளங்கும்.

இராஜகோபாலார்யன் என்பார் பதிப்பித்த (கம்பர் புஸ்தகாலயம்—கம்பர் விலாசம் 1920) என்ற நூலினைக் கையிற்கொண்டு உ. வே. சாமிநாதய்யரிடம் பாடம் கேட்ட அவருடைய மாணவர் வி. மு. சுப்பிரமணியன் அவர்கள் தமது நூலின் மூந்நூற்று நாற்பதாம் பாடலில் கூர்வளி என்பதனை அடித்துக் கூர் உளி எனத் திருத்தம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க தகவலாகும். வி. மு. சுப்பிரமணியனாரின் நூல் தற்போது தஞ்சை, சேக்கிழார் அடிப்பொடி தி. ந. இராமச்சந்திரன் அவர்களிடம் உள்ளது.

ஓவியங்களின் துணைகொண்டு பழந்தமிழ் நூல்களை ஆராய முடியும் என்பதும், அறிஞர் பெருமக்களிடம் பாடம் கேட்ட பெரியவர்கள் எழுதிவைத்த குறிப்புகளும் மிகப்பயனுள்ளவை என்பதும் இக்கட்டுரையால் நன்கு விளங்கும்.

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ राक्षसकाव्यम् ॥

(कालिदासविरचितम्)

ராக்ஷஸ காவ்யம்

(மஹாகவி காளிதாஸன் இயற்றியது)

(தமிழ் மொழிபெயர்ப்புடன்)

பதிப்பாசிரியர் :

தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்

மேனிலை ஸம்ஸ்க்ருத பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்,

முன்னுரை

கல்வி அறிவு பெற்றவர் எவரும் காளிதாசனைப்பற்றி அறியாமல் இருப்பதற்கில்லை. காளிதாசன் தனது இணையற்ற கற்பனைத் திறனாலும், வருணனைச் சிறப்பினாலும் இலக்கிய உலகில் தனக்கென்று ஒரு அழியாத — உயர்ந்த இடத்தை அமைத்துக் கொண்டான்.

காளிதாசனைப் பற்றிய விபரங்கள்:— அவன் தோன்றிய காலம், இடம், பயிற்சி பெற்றுச் சிறப்புற்ற இடம், அவன் இன்ன காவியங்களைத்தான் இயற்றியுள்ளான் என்பது போன்ற விபரங்கள் பற்றி ஆராய்ச்சித்துறை ஆசிரியர்களின் ஆய்வு இன்னமும் முடிவுற்றதாகத் தெரியவில்லை. அவன் இயற்றியதாகத் தீர்மானமாகத் தெரியவருகிற இலக்கியங்களில், அக்கவி குறிப்பிடும் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு சில விபரங்களைத் தருகிறார்களே தவிர, இதுதான் என்று தீர்மானமான சான்றுகள் கொண்டு அக்கவி பற்றிய விபரங்களை உறுதி செய்யமுடியவில்லை.

தீர்மானமாகத் தெரியாத ஒரு பொருளைப் பற்றிப் பலரும் தத்தம் திறமைக்கும் — மனப்பாங்குக்கும் ஏற்றவாறு கற்பனையாகக் கூறுவதுதான் இயல்பாக இருக்கிறது. கண்களுக்குப் புலப்படாத கடவுளைப் பற்றித்தான் எத்தனை எத்தனை இலக்கியங்கள், துதிப்பாடல்கள், இதிஹாஸ புராணங்கள்!

இதனையனுசரித்து காளிதாஸ மஹாகவி போஜ மன்னரின் அவையினை அலங்கரித்த மஹா கவிஞருள் ஒருவர் என்று கற்பனையாக 'போஜ ப்ரபந்தம்' என்ற நூலும் தோன்றியுள்ளது. அதில் கூறப்பட்ட செய்திகளும் உண்மைச் செய்திகள் போல பரவலாகப் பேசப்பட்டும் வருகிறது.

"ப்ரபந்தம்" என்ற சொல்லுக்குச் சிறப்பாகக் கற்பனையாக அமைக்கப் பட்ட நூல். ஒரு உண்மை நிகழ்ச்சி. தலைவனை மையமாக ஆதாரமாகக் கொண்டு கற்பனையாக அமைக்கப்பட்ட நூல் என்று பொருள். (A work of of imagination founded on a substration of fact.)

"போஜப்ரபந்தம்" என்ற நூல் ஸம்ஸ்க்ருதம் அறிந்தோர் வேடிக்கையாக, நல்லவிதமாக இலக்கிய உணர்வுடன் பொழுது போக்குவதற்காகவே அமைக்கப்பட்ட நூல் எனலாம். பல காலகட்டங்களில் தோன்றிய கவிஞர்கள் ஸம்ஸ்க்ருதப் பேரறிஞரான போஜ மன்னரின் அவையில் அந்த அரசனின்

பேராதரவிற்கும் பெருமதிப்பிற்கும் பாத்திரமாகி விளங்கினார் என்பதாகக் கற்பனையாகப் புனையப்பட்டதே அந்த நூல். அது முக்கியமாக காளிதாஸ மஹா கவியின் பெருமையைப் பறைசாற்றும் நூல் என்று கூடச் சொல்லலாம்.

காளிதாசனின் உண்மையான காலம் இதுதான் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையில் அவர் பிற்காலத்திய போஜ மன்னரின் சமகாலத்தவர் போலவும் போஜ மன்னரின் வாயிலாக காளிதாஸனின் பெருமைகள், சிறப்புகள் பிரபலமாயின என்பது போலவும் அந்த "போஜப்ரபந்த" நூல் (அமைக்கப்பட்டது) கூறுகிறது.

உதாரணமாக: போஜ மன்னன் ஒருநாள் மாறுவேடமணிந்து நகர் வலம் வந்தபொழுது ஒரு வீட்டில் நடந்த நிகழ்ச்சி மன்னரின் கவனத்தைக் கவர்ந்தது. நண்பகல் நேரம், பகல் உணவு அருந்தும் நேரம். காக்கை களுக்கு பலியுணவு கொடுத்த பிறகுதான் உணவு உண்ண வேண்டும் என்ற மரபிற்கு ஏற்ப அவ்வீட்டின் தலைவர் காகங்களுக்கு பகலில் பகலுணவு வழங்கினார். காகங்கள் பல சத்தமிட்டவாறு அதனை உண்பதறகு அங்கு குழுமின. காக்கைகளின் ஒலியின் கொடூரத்தைக் கேட்டு பயந்த அவருடைய இளம் வயது மனைவி, ஐயோ! இந்தக் காகங்கள் என்னை நோக்கிக் கர்ணகொடூர மாகக் கத்துகின்றனவே என்று பயந்து பக்கத்தில் நின்ற புருஷனைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். அவ்வயோதிக புருஷனும் அதனை நம்பி அவளை அணைத்துத் தேறுதல் கூறினான். இதனைக் கண்ட மன்னன் போஜன் இந்த இளம்பெண் "பாசாங்குக்காரி, நேர்மையில்லாதவள்" என்று தீர்மானித்துக் கொண்டு அன்று முழுவதும் அது பற்றிய தீவிர விசாரணையில் இருந்தான்.

அப்பெண்பற்றிய உண்மையை அறிய போஜ மன்னன் ஆவல் கொண்டான். மாலை நேரம் வந்து இரவும் வந்தது. எங்கும் இருள் சூழ்ந்து அமைதி நிலவியது. நேரம் சென்றுகொண்டிருந்தது. முடிவில் மன்னனின் எண்ணத்தை உறுதி செய்வதுபோல் வீட்டின் பின்புறத்தில் ஒரு விளக்கு வெளிப்பட்டது. ஒரு உருவமும் வெளிப்பட்டது. அந்த உருவம் அன்றைக்குப் பகலில் காக்கைக்கு பயந்து கணவனைக் கட்டிப்பிடித்த பெண் என்பதை அறிந்து வியப்புற்றான். அவள் விளக்கை ஒரு கூடையின் உள்ளே வைத்துக் கொண்டு வேகமாகச் செல்வதைக் கண்ட போஜராஜனும் அவளைத் தொடர்ந்து சென்றான். வழியில் நர்மதை ஆறு குறுக்கிட்டது. இப்பெண் நர்மதையில் இறங்கப் போகிறாளா! அங்கு ஏராளமான முதலைகள் உண்டே என்று அரசன் எண்ணமிட்டபொழுது, அப்பெண் கூடையிலிருந்து விளக்கை எடுத்துக் கரை ஓரமாக வைத்துவிட்டு, ஏதேதோ துர்வாசனையுள்ள பொருள்களை வெளியில் எடுத்துப் போட்டாள். சற்று நேரத்தில் பல முதலைகள் அந்த இடம் நோக்கி வரலாயின. அப்பெண் பரபரப்புடன் சிறு தோணியைக் கொண்டு நர்மதை நதியைக் கடந்து சென்றாள்.

இரவு நேரத்தில் வயது முதிர்ந்த கிழவரின் மனைவி—இளம்பெண்ணின் இந்தச் செய்கை அவளது நேர்மையற்ற மனதைக் கூறுவதாக இருந்தது.

மறுநாள் அரச சபையில் காளிதாஸன் உள்பட பல கவிஞர்களும் குழுமியிருக்கும்பொழுது, போஜ மன்னன் ஒரு புதிர்போன்ற சொற்றொடரைக் கூறினான்.

दिवा काकरुताद्भीता

(திவா காகருதாத்பீதா)

[பகலில் காகத்தின் கரைதல் ஒலிகேட்டு பயந்த ஒரு பெண்]

இப்படி புதிர் போன்று போஜ மன்னன் கூறிய சொற்றொடர் கேட்ட அவையிலிருந்த கவிஞர்கள் பதில் கூறமுடியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது,

காளிதாஸன்:

रात्रौ तरति नर्मदाम् ।

(ராத்ரௌ தரதி நர்மதாம் ।)

[இரவில் நர்மதை ஆற்றைக் கடந்து செல்லக்கூடும்]

போஜன்: காளிதாஸன் நேரில் கண்டதுபோல் கூறுவது கேட்டு, மிகவும் வியப்புற்றான். மேலும் தொடர்ந்து

तत्र सन्ति जले ग्राहाः

(தத்ர ஸந்தி ஜலே க்ராஹா:)

[அந்த நர்மதை ஆற்றின் நீரில் முதலைகவ் பல இருக்கின்றன] (எனில்)

காளிதாஸன்:

मर्मज्ञा सैव सुन्दरी ॥

(மர்மக்ஞா ஸைவ ஸுந்தரீ ॥)

[அந்த முதலைகள் உள்ள நர்மதை ஆற்றையும் கடக்கிற விஷயத்தில் உள்ள ரகசியத்தை அந்த அழகி அறிவாள்] என்று காளிதாஸன் பதில் கூறினான்.

ஆராய்ச்சி வல்லுநர்கள் காளிதாஸனின் காலம் பற்றிக் கூறிய செய்தி ஒருபுறம் இருக்க, காளிதாஸனுக்குப் பிறகு பல நூற்றாண்டு சென்று தோன்றிய

கவியால் இயற்றப்பட்ட "போஜ ப்ரபந்த"த்தில் கூறப்படும் செய்திகள் காளிதாஸனையும், போஜ மன்னனையும், பிற கவிகளையும் இணைத்துக் கூறப்படும் செய்திகள் அனைத்தும் கற்பனையே.

பவபூதி கவியின் காலம் வேறு. காளிதாஸனின் காலம் வேறு. உண்மை அவ்வாறிருக்க இருவரும் சமகாலத்தவர் போல சித்தரிக்கும் "போஜப்ரபந்தம்" கற்பனைச் செய்திகள் அடங்கிய நூலேயாகும். ஆனால் படிக்கப்புகின் மெய்மறக்கச் செய்யும் கற்பனை சம்பவங்களும் வருணனைகளும் அவை உண்மைச் சம்பவங்கள் தாமோ என எண்ணச் செய்யும்.

இந்நாட்களில் பிறர் எழுதிய நல்ல நூல்களைத்தாம் எழுதியதாகச் சிலர் தம் பெயரில் வெளியிடுவது போல் முன்நாட்களில் சிறந்த கவிகளின் பெயர்களைத் தாம் இயற்றிய இலக்கியங்களின் கர்த்தாக்களாக அமைத்தனர், அமைத்திருக்கலாம்" என்று தெரிகிறது.

இந்த "ராக்ஷஸ காவியம்" நூலை காளிதாஸன்தான் இயற்றினானா ! அல்லது காளிதாஸன் பெயரில் வேறு யாரேனும் இயற்றியதா ! என்பது புதிராகவே உள்ளது. ஒன்று மட்டும் நிச்சயம். ஒரு ஸம்ஸ்க்ருத இலக்கியம் எப்படி இருக்கலாகாது என்பதற்கு இந்த ராக்ஷஸ காவியம், "ராதாவிநோத காவியம்" முதலானவை சான்றுகளாகும்.

இந்தச் சுவடியைச் சிறுநூலாகவும், நூலக மலரிலும் வெளியிட ஊக்கமளித்த நூலக இயக்குநரும் தஞ்சை மாவட்ட ஆட்சியருமான திரு. து. நா. இராமநாதன், இ. ஆ. ப., அவர்களுக்கு எனது நன்றி. அரிய நூல்களை நல்ல முறையில் வெளியிட ஊக்கமளித்த நூலக நிருவாக அலுவலர் திரு. பி. சுப்பிரமணியன் அவர்களுக்கும், நூலக நூல் வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர்களுக்கும் நன்றி.

நூலை நல்ல முறையில் அச்சிட்டளித்த நூலக அச்சகப் பிரிவினருக்கும் என் நன்றி.

தஞ்சாவூர்
21—8—97

தேதியூர் S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,
மேநிலை ஸம்ஸ்க்ருத பண்டிட்,
சரஸ்வதி மஹால் நூலகம்.

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ राक्षसकाव्यम् ॥

(कालिदासविरचितम्)

तेदियूर्. पण्डित कृष्णमूर्तिशास्त्री
सरस्वतीमहालयग्रन्थालयः, तञ्जावूर्.

कश्चिद्वनं बहुवनं विचरन् वयस्थो
वश्यां वनात्मवदनां वनितां वनार्द्राम् ।
तर्वर्यरिप्रदमुदीक्ष्य समुत्थितं खे
ना गामिमां मदकलः सकलां बभाषे ॥ १

पश्याब्जदृक् गिरितटेषु कुमातृसाह्वान्
भूदेवराजरिपुशत्रुसमावधूतान् ।
वैश्वानरारिजरिपुघ्नशराभिभूतैः
दृक्श्रोत्रशत्रुभिरुपाश्रितपुष्पशोभान् ॥ २

पश्याब्धिमारसदृशाभिरभू(मी)भिरद्भिः
आप्लावयत्यमरगुप् धरणीमहिघ्नः ।
अब्दः सिताभिरसितः शबलः खगाभिः
वार्जैः सितैरिव विभाति वनप्रबुद्धैः ॥ ३

गोष्ठं घृतं सुघृतवद्भिरमीभिरग्र्यं
गोभिः समुद्धरति यद् बहुधा हिमघ्नः ।
तद् गव्यमम्बरगतं शिखिजात्मसंस्थं
विस्यन्दमानं अभिवर्धयतीह गोजान् ॥ ४

अब्दुट्पलाशनिभदृक् घनजातमन्वक्त्रा
वार्चस्वरेभनिभदृक् गजदोःसमोरुः ।
सीरिध्वजप्रसन्नतुल्यविषाह्वदासौ
न्ना सङ्गता प्रमुदिता प्रसमीक्ष्य न्नार्दम् ॥ ५

सूर्यांशुनाम पतिरुन्नतदृप्तगामी
वाङ्नामभिः परिवृतो विषनामदाभिः ।
उस्राचरः प्रमुदितः प्रतिनानदीति
गर्जन्तमीक्षणहितोच्चयतुल्यरूपम् ॥ ६

एतं पयोदपतिरुन्नमितं पयोदं
खस्थं महीतलगतः प्रतिगर्जतीव ।
भित्त्वाऽवनिं वनरुहाक्षि शिरोरुहाभ्यां
सम्प्रस्थितोऽमृतधरैरभिषिच्यमानः ॥ ७

स्रोतोजविक्षतजभूधरधातुरूपाः
खस्थाः पयोजदलदृक् शुचिशुक्रभासोः ।
मासोर्नभस्यनभसोरति सम्पतन्तः
तीव्रं विषं विषधराः परिनिर्वपन्ति ॥ ८

स्वयोनिभक्षध्वजसम्भवानां
श्रुत्वा निनादं गिरिगह्वरस्थः ।
तमोऽरिबिम्बप्रतिबिम्बधारी
विरौति कान्ते पवनाशनाशः ॥ ९

गोष्ठश्च कुङ्कुमवपुः प्रतिराजतेऽसौ
सप्त्यद्रिदैत्यभुजगोत्तमशत्रुगोपः ।
उर्वीधराभ्रमचिरोत्थितमम्बरं खे
दृष्ट्वा हि हा प्रमुदितो हि महाह्वयानः ॥ १०

कृष्णाम्बरः क्षरति तोयमसावजस्रं
अन्याविमौ रणगताविव वेभराजौ ।
अन्ये त्वमी द्विरदवृन्दनिभाः क्षरन्तः
प्रच्छादयन्त्यमरसिद्धविमानमार्गम् ॥ ११

वार्गाः खगाः क्षितिधरागमनप्रकाशा
नेमीभरासभतुरङ्गमतुल्यघोषाः ।
वार्धारिताः खमवतत्य वनं क्षरन्तो
वार्भिः क्षितिं घृतशराः परिनिर्वपन्ति ॥ १२

एषोऽङ्घ्रिपाशनरिपुप्रसुतारिसाह्व-
मारुह्य तिष्ठति सुगात्रि भुजङ्गमारिः ।
यस्य स्वनैः प्रमुदितस्य ममाद्य बाले(देहे)
तालध्वजावरजसूनुशराः पतन्ति ॥ १३

उस्राविषं स्थलगतोऽस्ति तथैव वाभ्यो
वार्जो द्विजः स्वपितृभीरुविषप्रहीनः ।
वाताशनः खशयनः स्मरति स्थलस्य
चक्षुःश्रवा वनभयात्सुरशत्रुनामा ॥ १४

पश्यश्वमेधतुरगप्रतिमोऽष्टवर्णो
वार्दं नवं त्विति समाह्वयति ह्यहिघ्नः ।
भेकस्तथैव खशयाशयवेद्यवाणिः
शब्दं करोत्यतिभृशं विषराशिमग्नः ॥ १५

ना विष्टिरा वनमुपेत्य कुमातृसाह्व-
माक्रीडने मधुकलो तनयासमेतः ।
अन्यः स्वयं मणिवराभमुपेत्य गोजं
ना रामया सह पयःपतिजां वृणीते ॥ १६

स्यूतं महत् क्षतजवर्णनिभं वरोऽसौ
बर्भर्ति(र्त्य)अमूनि च भिनत्ति सरोरुहाणि ।
तज्जेन वापि रजसा वनितां वयस्थो-
ऽप्यभ्युद्धरत्यवकिरत्यभिषिच्यमानः ॥ १७

पङ्के निमग्नमिभवृन्दमदः भवारि
गर्जत्तिमी(मि)क्षयदवृन्दमिवावभाति ।
वार्यात्मनः शतविचित्रतनुः सुपर्णो
योषिद्वृतः समदनः प्रतिरोरवीति ॥ १८

विस्फोटिताम्बररवेण रिरंसुरेव
सन्त्रासितो हरिरनोकहनिष्कुटीषु ।
संलीयते ह्यभिमुखीं तडितं च दृष्ट्वा
खात् खं महत्तरमसौ समनुप्रविष्टः ॥ १९

एतावदुत्तमवचः सुमनाः स उक्त्वा
रन्त्वा दिनं सह तया प्रियया ह्यदीनः ।
युक्तं चतुर्भिरनडुद्भिरदीनवद्भि-
रारुह्य यानमथ स प्रययौ स्वगेहम् ॥ २०

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ राक्षसकाव्यम् ॥

(कालिदासविरचितम्)

ராக்ஷஸகாவ்யம்

(மஹாகவி காளிதாஸன் இயற்றியது)

कश्चिद्वनं बहुवनं विचरन् वयस्थो
वश्यां वनात्मवदनां वनितां वनार्द्राम् ।
तर्वर्यरिप्रदमुदीक्ष्य समुत्थितं खे
ना गामिमां मदकलः सकलां बभाषे ॥ १

व्याख्या : कश्चित् अनिर्दिष्टनामा ना पुरुषः—इमां प्रत्यक्षां सकलां समस्तां गां वाचं, वनितां स्त्रियं प्रति बभाषे अब्रवीत् । किं कुर्वन् । वनं काननं विचरन् भ्रमन् । किं भूतं वनम् । बहुवनं बहूदकम् ॥ " वनं सलिलकानने " इति अमरः । किम्भूतो ना । वयःस्थः वयसि तिष्ठतीति वयःस्थः युवा इत्यर्थः । पुनः किंविधः । मदकलः हर्षयुक्तः । अथवा मदेन मद्येन अश्राव्यवाक् । अथवा मदस्य मदनस्य कला विद्यते यस्मिन् इति ॥ किं कृत्वा । तरवः वृक्षाः तेषां अरिः शत्रुः अग्निः, तस्यारिः उदकं, तत् प्रददातीति असौ मेघः । तं खे आकाशे समुत्थितं समुत्पन्नं उद्वीक्ष्य दृष्ट्वा । किं भूतां वश्यां, स्वाधीनां, पुनः किंविधां (वनात्मवदनां) वनं उदकं तत् आत्मा यस्यासौ चन्द्रः, उदधिमथनोत्पत्तेः । तद्वत् वदनं यस्यास्तां । पुनः किंविधां — उदकेन आर्द्रां आर्द्रीकृताम् ॥ १

நமது கைகளில் உள்ள விரல்களில் மற்றவைகளைவிட குட்டையாக கட்டையாக இருப்பதால் "அங்குஷ்ட்டம்" என்று கட்டை விரலும் பிறரை அதட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் விரல் "தர்ஜனீ" என்று ஆட்காட்டி

விரலும், இரு பக்கங்களிலும் இரண்டு விரல்கள் இருப்பதால் "மத்யமா" என்று நடுவிரலும், கடைசியில் உள்ள விரல் அளவிலும் பருமனிலும் மெலிந்து இருப்பதால் "கனிஷ்டிகா" என்று நுனி விரலும், ஸம்ஸ்க்ருதச் சொற்களால் வழங்கப்படுகின்றன. தமிழ்மொழியில் மோதிரம் அணிவதற்கானது என்பதால் (ஒரு மோதிரம் மட்டும் எப்போதும் அணிவோர் அணியவேண்டிய விரல்) மோதிர விரல் என்று வழங்கப்படும் விரலைக் குறிப்பிடும் ஸம்ஸ்க்ருதச் சொல் "அநாமிகா" என்பதாகும். பெயர் இல்லாதது. பெயர்ப் பொருத்தம் இல்லாதது என்பது இதன் பொருள். இந்த விரலுக்கு மட்டும் பெயர்ப் பொருத்தம் ஏன் இல்லை? ஏதாவது ஒரு காரணம் இருந்தாக வேண்டுமே என்று சிந்தித்த ஒரு கவி பின்வருமாறு கற்பனையாகக் கூறினான்.

" पुरा कवीनां गणनाप्रसङ्गे
कनिष्ठिकाऽधिष्ठितकालिदासा ।
अद्यापि तत्तुल्यकवेरभावात्
अनामिका सार्थवती बभूव ॥ "

முன்பொரு சமயம் உயர்தரக் கவிகள் யார் யார் என்று விரல்விட்டு எண்ண முற்பட்டபோழ்து காளிதாஸன் என்று சுண்டு விரலை மடக்கினர். அடுத்து யார்? என்று அவருக்கு ஈடானதொரு கவி யார் என்று சிந்தனை செய்து பார்த்ததில் எந்த ஒரு கவியும் அவனுக்கு அடுத்தாற்போல் எண்ணப் படுவதற்குத் தகுதியுள்ளவர் இல்லையென்பதால்தான் சுண்டு விரலுக்கு அடுத்த விரல் "அநாமிகா—பெயர் இல்லாதது" என்று வழங்கப்படலாயிற்று. அநாமிகா — காரணப் பெயராகவே ஆயிற்று என்று கூறினார்.

" उपमा कालिदासस्य भारवेः अर्थगौरवम् ।
दण्डिनः पदलालित्यं माघे सन्ति त्रयो गुणाः "

"உவமையைச் சிறப்பாகக் கூறும் குணம் கவி காளிதாஸனுக்கு உரியது. பொருள் சிறப்புடன் கூறுவது கவி "பாரவி"க்கு உரியது. அழகான சொல்நடை அழகு கவி 'தண்டி'க்கு உரியது. இம்மூன்று சிறப்புக்களும் கவி 'மாக'னுக்கு உரியது."

உவமையைச் சிறப்பாக — அந்தந்த இடத்திற்கு ஏற்ப மிகமிகப் பொருத்தம் உள்ளதாக — வியக்கும் விதத்தில் காளிதாஸனைப்போல் உவமை அணியைக் கையாண்ட ஸம்ஸ்க்ருத கவிகள் யாருமில்லை. காளிதாஸனின் ரகுவம்சம், ராமனின் முன்னோர்களான திலீபன் தொடங்கி ரகு, அஜமஹாராஜன், தசரதன் பற்றிக்கூறி ராமனுடைய சரிதத்தை விரிவாகக்

கூறி "அக்னிவர்ணன்" என்ற அரசன்பற்றிய செய்திகளுடன் நிறைவுபெறும் காவியம். இக்காவியத்தில் பல பல இடங்களில் உவமை அணியைச் சிறப்புறக் கையாண்டாலும் அஜ மஹாராஜன்-இந்துமதி திருமண காலத்தில், இந்துமதி மணமாலையைக் கையிலேந்தி சுயம்வர மண்டபத்திற்கு வந்து ஒவ்வொரு மன்னரையும் கடந்து செல்லும்போது அவளை ஒளிமிகுந்த தீபச்சுடருக்கு ஒப்பிட்டுக் கூறுகிறவிதம் எண்ணி எண்ணிப்பார்த்து மகிழச்செய்வதாகும். இதனாலேயே இந்த நூற்றாண்டில் இருந்த பேராசிரியர்கள் "தீபசிகா காளிதாஸன்" என்று அவனைச் சிறப்பித்துக் கூறினர்.

குமாரஸம்பவத்திலும் பல உவமைகள் கூறப்பட்டாலும், 5வது ஸர்கத்தில் (Chapterல்) கடைசி ச்லோகத்திற்கு முதல் ச்லோகம் :-

" मार्गाचलव्यतिकराऽऽकुलितेव सिन्धुः
शैलाधिराजतनया न ययौ न तस्थौ ॥ "

உமாதேவி சிவபெருமானையே மணாளனாக அடையும் தீவிரத்துடன் மாபெரும் முனிவர்களும்கூட தவம் என்றால் எவ்வாறு செய்யவேண்டும் என்று தெரிந்து கொள்ளும் விதத்தில் கடும் தவம் மேற்கொள்கிறாள். உமையைச் சோதனை செய்ய சிவபெருமானே ஒரு இளம் வயது அந்தணன் போன்ற தோற்றத்துடன் அவ்விடம் வந்து உமையவள் தவம் செய்யும் நோக்கம் அறிந்து சிவபெருமானைப் பற்றி இழித்துக் கூறுகிறார். அவரை யாரோ ஒரு பிரம்மச்சாரி என்று எண்ணிய உமா, சிவபெருமான்மீது அவர் கூறும் இழிச் சொற்களைக்கேட்டு ஒவ்வொன்றுக்கும் பதில் அளிக்கிறாள்.

பெண்ணே! உலகில் மிகஉயர்ந்த வளமான குலத்தில் தோன்றிய நீ சிவனைக் கணவனாகத் தேர்வு செய்து, அதற்காகத் தவமும் செய்வதைப் பார்க்கும்பொழுது நீ சிந்தனாசக்தியற்றவள் என்று எண்ணச் செய்கிறது, சிவபெருமானின் தந்தை யார்? தாய் யார்? என்று யாருக்குத் தெரியும்? பெற்றோர் பெயர் தெரியாதவன். தங்க இடமில்லாமல் சுடுகாட்டில் தங்கு கிறான். இடையில் அணிவதற்கு நல்ல துணிகூட இல்லை. உடலெங்கும் பாம்புகளைச் சுற்றிக்கொண்டு திரிபவன். எல்லோருக்கும் இரண்டு கண்கள் என்றால் அவனுக்குமூன்று கண்கள். திருமண காலத்தில் "பாணிக்ரஹணம்"- மணப்பெண்ணின் கையை மணமகன் பற்றுதல் எனும் — சடங்கின்பொழுது ரத்தம் சொட்டும் யானைத் தோலை இடையில் அணிந்தும், உடலெங்கும் பாம்புகளை அணியாக அணிந்துள்ள சிவனுடைய கையை நீ பற்றும் பொழுது கொடிய பாம்புகள் சீற்றமுடன் தலையைத் தூக்கும் அந்த நிலையில், நீ மகிழ்ச்சி பொங்க நிற்கவேண்டியிருக்க, பயந்து கையைப் பின்னுக்கு இழுத்துக்கொள்ளவேண்டியிருக்கும். தவிர, திருமணத்தில் "ஊர்வலம்" என்ற நிகழ்ச்சி நடைபெறும். அலங்கரிக்கப்பட்ட யானைமீது அல்லது

நவரத்னப் பல்லக்கில் ஊர்வலம் வரவேண்டிய உன்னை சிவபெருமான்தன் ஒருவனையே தாங்க சக்தியில்லாத கிழட்டுக் காளைமீது உன்னையும் உட்கார வைத்து நகர் வலம் வரும்பொழுது பொதுமக்கள் அந்த அவல நிலை கண்டு பரிகாசமாகச் சிரிப்பார்களே! மலையரசன் மகளுக்கு இப்படி ஒரு நிலையா என்றல்லவோ பரிகாசம் செய்வார்கள், சிவனிடம் என்ன தகுதி இருக்கிறதென்று நீ அவனை மணக்க இப்படி உடம்பை வருத்தித் தவம் செய்கிறாய்? எனக்குத் துளியும் இதில் சம்மதமில்லை என்று அவ்வந்தண வாலிபன் கூறியது கேட்ட உமை (பார்வதி) தன் தோழியிடம் இவர் இனியும் பேசலாகாது. பேசாதீர் என்று சொல் என்று கூறிவிட்டு, **"गुरोर्यत्र परीवादः निन्दा वापि प्रवर्तते । कर्णौ तत्र पिधातव्यौ गन्तव्यं वा ततोऽन्यतः ॥"** "பெரியோர்கள் பற்றிய அபவாதச் சொற்களை யாரேனும் பேசினால், காதுகளைப் பொத்திக்கொள்ளவேண்டும். இல்லையேல் அவ்விடத்தைவிட்டே அகன்றுவிடவேண்டும் என்பார்கள். எனவே நான் இவ்விடம்விட்டு வெளியேறுகிறேன்" என்று கூறியவாறு ஆச்ரமத்தின் வாயிலை நோக்கிச் செல்ல ஓரடி எடுத்தாள். தூக்கிய கால் தூக்கப்பட்ட நிலையிலேயே இருக்க, குறுக்கே வாசல் பகுதியில் சிவபெருமான் தன் சுய உருவத்துடன் தோன்றி ஒரு கையால் அவளைத் தடுத்தார். சிவபெருமானைக் கண்ட பார்வதி வெளியில் செல்லவும் விரும்பவில்லை. அவரருகில் நிற்கவும்—உள்ளே இருக்கவும் வெட்கப்பட்டாள். தூக்கிய கால் தூக்கப்பட்டபடி இருக்க, வெளியில் செல்வதற்கு முயற்சிக்கும் நிலை-வெட்கம்-மகிழ்ச்சி உணர்வுடன் உள்ளே இருக்கவும் ஆசை என்ற கலவை உணர்ச்சியுடன் உள்ள பார்வதியை காளிதாஸன் இவ்வாறு வருணிக்கிறார்.

" मार्गाचलव्यतिकराकुलितेव सिन्धुः

शैलाधिराजतनया न ययौ न तस्थौ ॥ "

மார்க-அசல-வ்யதிகர ஆகுலிதேவ ஸிந்து:

சைலாதிராஜதனயா ந யயௌ ந தஸ்தௌ ॥

மலையருவி சிற்றாறாகச் செல்லும் இடங்களில் சிறு ஆற்றின் நீர், வழியில் உள்ள பெரிய பாறைகளால் தடுக்கப்படும்பொழுது, மேற்கொண்டு செல்ல முடியாதபொழுது பாறையருகில் வந்ததும் சுழித்துக்கொண்டு தேங்கி நிற்கும் ஆற்றின் நீர் மேற்கொண்டு செல்லத்தான் விரும்புகிறது. செல்லமுடியாதபடி தடுக்கவும்படுகிறது. சுழித்துக்கொண்டு நிற்கும் சிற்றாற்றின் நிலையில் பார்வதி சிவபெருமானால் தடுக்கப்பட்டதால் வெளியில் செல்லவும் இல்லை. வெட்கம் மிகுதியால் அங்கு நிற்கவும் இயலவில்லை.

இதுபோல் காளிதாஸன் தம் இலக்கியங்களில் பல பல இடங்களில் மிகமிக உயர்ந்த உபமானங்களைச் சொன்னாலும், தம்மையும் மீறி உணர்ச்சி வசப்பட்டுச் சொல் பிழையுடன் கூறும் உவமையும் ஒன்று உண்டு.

இவ்விடம் "காளிதாஸன்" பற்றிக் கூறவேண்டிய செய்தி ஒன்று உண்டு. "காளிதாஸன்" என்பது அச்சொல்லால் குறிப்பிடப்படும் கவியின் சொந்தப் பெயரே அதுதானா? வேறு பெயர் ஏதும் உண்டா என்பது தெரியவில்லை. ஆனால் "காளிதாஸன்" என்ற ஸம்ஸ்க்ருதச் சொல்லைக் கொண்டு, காளி தேவியின் அருள்பெற்றவன் — "காளிதேவியின் அடிமை" என்றுதான் பொருள் சொல்லப்படுகிறது. உண்மையில் காளிகாதேவியின் தாஸன் என்று இருக்குமானால் அக்கவி தன் இலக்கியங்களில் காளிதேவி பற்றி எங்கேயாவது குறிப்பிட்டிருப்பார். அப்படி ஏதும் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை. "சியாமளா தண்டகம்" தவிர தேவி பற்றி ஏதும் இயற்றியதாகத் தெரியவில்லை. தவிர ஸம்ஸ்கிருதச் சொல்லான காளி எனும் சொல் நெடிலாகத் தான் சொல்லப்படவேண்டும். குறிலாகச் சொல்லப்படுவதில்லை. சொல்வது தவறும் ஆகும். ஆனால் பன்னெடுங்காலமாக "காளிதாஸ:" (कालिदासः) என்று குறிலாகத்தான் சொல்லப்பட்டு வழக்கில் இருந்து வருகிறது, "காளீதாஸ:" (कालीदासः) என்று சொல்லப்படுகிறதில்லை, ஒரு ஸம்ஸ்க்ருத மஹாகவியின் பெயரையே பிழைபடச் சொல்வது சரியா! என்று சிந்தித்தால், அக்கவி காளிகாதேவியின் தாஸன் அல்ல. காலகாலனாகிய சிவபெருமானின் மைந்தன் கந்தப்பெருமான். தசரத-தசரதன்-தாசரதி என்பதுபோல், காலன்—"காலி" காலனுடைய குமாரன் - காலி - முருகன், தாஸன் - அடிமை, "முருகனடிமை" என்று பொருள்கொள்வதுதான் சரியாக இருக்கும் என்று எனது பேராசிரியர் காலஞ்சென்ற பண்டிதராஜ சுப்ரமண்ய சாஸ்திரிகள் கூறியதை இங்கு நினைவு கூர்கிறேன். எனவேதான், அக்கவி குமாரஸம்பவம் எனும் நூலைத் தன் வழிபடு தெய்வத்தின் (முருகன்) பெயரால் ஒரு காவியம் இயற்றியுள்ளார்.

காளிதாஸனின் இலக்கியங்களில் சொற்பிழை கண்டுபிடிக்க இயலாது. ஆனால் அக்கவியே ரகுவம்சத்தில் ஒரு உவமையைக்கூற வந்து இலக்கணப் பிழையுடன் ஒரு சொல்லை ப்ரயோகம் செய்திருக்கிறார்.

அயோத்தியில் ஸ்ரீராமனின் முடிசூட்டு விழா சிறப்பாக நடந்து சில ஆண்டுகள் கழிந்தன. ராமன் தன் நாட்டில் தனது ஆட்சியில் குறைபாடு ஏதும் உள்ளதா? குடிமக்களின் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றனவா! குடிமக்கள் குறையின்றி மனநிறைவுடன் வாழ்ந்துவருகிறார்களா? என்பதனை அறிய ஒற்றர்களை நாடு முழுவதும் அனுப்பிச் செய்திகளை அறிந்து ஆட்சி புரிந்த நேரம் அது. ஒருநாள் (துர்முகன் எனும்) ஒரு ஒற்றன் கூறிய செய்தி ராமன் மனதைப் பேரிடியாகத் தாக்கியது.

இதனைக் காளிதாஸன் பின்வருமாறு கூறுகிறார்:

अयोघनेन अय इव अभितप्तं वैदेहिबन्धोः हृदयं विदद्रे ॥

அயோகனேன அய இவ அபிதப்தம் வைதேஹிபந்தோ: ஹ்ருதயம் விதத்ரே ॥

நன்றாகச் சிவக்கக் காய்ச்சப்பட்டிருக்கும் இரும்பின்மீது செம்மட்டியால் அடித்தால் எப்படி காய்ச்சப்பட்ட இரும்பு நாற்புறமும் சிதறுமோ, அவ்விதம் ராமனின் இதயமும் அச்செய்தியைக் கேட்டதால் சிதறியது.

ராமனுடைய மனதிற்குப் பழுக்கக்காய்ச்சப்பட்ட இரும்பினை ஒப்பிடுகிறான். ஒற்றன் கூறிய செய்தி செம்மட்டி அடி போன்றது. சிதறுதல் இரண்டிற்கும் உள்ள பொது தர்மம். "போல்" என்ற சொல் உவமையைப் விளக்கும் சொல்.

சீதையை ராவணன் தூக்கிச்சென்ற நாள் முதலாகவே ராமனுடைய மனதில் துயரம், இயலாத்தன்மை, அவமான உணர்வு ஆகியவை இடம்பெற்று இருந்தன. தன் குலத்திற்குப் பெரிய இழுக்காகிவிட்ட அந்த நிகழ்ச்சி ராமனின் மனதைவிட்டு அகலவே இல்லை. வெளியுலகிற்கு நிறைந்த மனத்துடன் இருப்பதுபோல் தோன்றினாலும், சூரிய குலத்திற்குப் பன்னெடும் காலம் வரையில் நிற்கப்போகும் அவமானத்தை எண்ணி எண்ணிப் பிறர் அறியாவண்ணம் தன் மனதிற்குள் வேதனைப்பட்டுவந்திருக்கிறான். "இதுபோல் ஒருநாள் ஏதேனும் ஏற்படலாம்" என்று எண்ணித்தான், இலங்கையில் சீதையை "அக்னிப்ரவேசம்" செய்ய அனுமதித்தான். ஆனால் அது நடந்தது வானரர்கள், அரக்கர்கள் நடுவில்தானே! இன்று அயோத்தி மக்களுள் ஒருவன் மனதில் ஏற்பட்ட சந்தேகம், பலரிடையே பரவ எத்தனை நேரமாகும்! இந்த எண்ணம், ராமன் பலகாலமாகவே துயரவயப்பட்டுவந்த மனதைப் பெரிதும் பாதித்துவிட்டது. இங்கு ராமனின் இதயத்தில் ஏற்பட்ட துயரத்தின் வேகம், ராமனாகவே இருந்த கவி காளிதாஸனையும் பாதித்துவிட்டிருக்கிறது. எனவேதான் **जानकीरामः, लक्ष्मीपतिः जानकीपरिणय** என்பது போன்று "**वैदेहीबन्धोः**" "வைதேஹீ பந்தோ:" என்று நெடிலாக 'வைதேஹீ' என்று நெடில் ஈயில் முடியும்படி சொல்லவேண்டியதிருக்க இலக்கண விதிகளுக்கு மாறாக "வைதேஹி" என்று குறில் 'இ' எழுத்தில் முடியுமாறு எழுதிவிட்டிருக்கிறான். இலக்கிய நாயகன் எந்த மனநிலையில் இருந்திருக்கிறானோ, அதே மனநிலையில் காளிதாஸ கவியும் இருந்திருக்கிறான் என்பதைத் தவிர இந்த இலக்கணப் பிழைக்கு வேறு என்ன காரணம் கூறமுடியும்!

"**अपि माषं मषं कुर्यात् छन्दोभङ्गं न कारयेत्** — "அபி மாஷம் மஷம் குர்யாத் ச்சந்தோ பங்கம் ந காரயேத்" என்று ஒரு பழமொழி உண்டு. செய்யுளில் சந்தம் பாதிக்கப்படுமாகில் சொல்லில் சிதைவு செய்வதில் பிழையில்லை என்பது இதன் பொருள். ஆனால் மகாகவி காளிதாஸனுக்கா சொல் பஞ்சம்! அதே இடத்தில் **सीताभिरामस्य** என்ற சொல்போல் ஒரு சொல்லை சந்தம் பிழைபடாதபடி சேர்க்க இயலாதவனா காளிதாஸன். அச்சமயம் உணர்ச்சி வேகத்தில் தோன்றிவிட்ட சொல் 'வைதேஹி' என்பதுதான். பிழைபடாதபடி சேர்க்கத் தெரியாதவனா காளிதாஸன்! இந்த கட்டத்தை எழுதும் சமயத்தில்

"கருணரஸம்" காளிதாஸனுக்கு இந்தச் சொல்தானே தோன்றச் செய்தது. அவன் என்ன செய்வான்? இலக்கணத்தைப் பெரிதாக மதிப்பவர்களுக்குக் காவியச்சுவை உணர்வு இருப்பதில்லையாதலின் அவ்விடத்தில் அது இலக்கணப் பிழையுள்ளதாக இருப்பின் இருந்துவிட்டுப் போகட்டும்.

பொதுவாக காளிதாஸனின் கவிதைகள் பற்றி இப்படி ஒரு பழமொழி உண்டு.

" अमृतेनेव संसिक्ताः चन्दनेनेव चर्चिताः ।
शीतांशुकिरणैर्घृष्टाः कालिदासस्य सूक्तयः ॥

காளிதாஸனின் ஸூக்திகள் (காவியச் சொற்கள்) அமுதத்தில் தோய்க்கப் பட்டவை போன்றும், நறுமணச் சந்தனம் பூசப்பெற்றது போலவும், சந்திரனின் குளிர்ந்த கிரணங்கள் சேர்த்துப் பிசையப்பட்டவை போலவும் இருக்கும் என்பது இதன் பொருள்.

ஸம்ஸ்க்ருதத்தில் சொல் என்ற பொருளைக் குறிக்கும் சொற்கள் ஏராளம். **वाक् - सूक्ति - वचनं - उक्ति - कथनं - कथितं** என்றவாறு பல சொற்கள் உண்டு. இதேபோல் பால் எனும் பொருளைக் குறிப்பிட க்ஷீரம்–துக்தம்–பய **क्षीरं — दुग्धं — पयः** என்று பல சொற்கள் உண்டு. பெரும் பசுக்கள் கறவை நேரம் நெருங்கியும் கறக்கப்படாதபோது தாமாகவே பாலைச் சுரந்துவிடும். அதுவே க்ஷீரம் ஆகும் மற்றவரால் கறக்கப்பட்டது பால் துக்தம் (**दुग्धं**) எனப்படும். இப்படி பல வித்தியாசமான சொற்கள் உண்டு.

ஸம்ஸ்கிருத இலக்கியங்கள் பற்றி :

ஸம்ஸ்கிருத இலக்கியம் பொதுவாக இரு வகைப்படும். 1. **श्रव्यकाव्यम्** 2. **दृश्यकाव्यम् ॥** முழுவதும் செய்யுள் வடிவாகவே இருப்பது "ச்ரவ்ய" (**श्रव्य पद्य**) காவியம் என்றும், மேடையில் பாத்திரங்கள் நடிப்பதைப் பார்த்தும் பேசுவதைக் கேட்டும் மகிழும் விதத்தில் பாத்திரப்படைப்புகள், சம்பாஷணைகள் வடிவில் அமைந்தது த்ருச்ய (**दृश्य**) காவ்யம் என்றும், செய்யுள் உரைநடை கலந்தது "சம்பூ"காவியம் என்றும் உரைநடை மட்டும் உள்ளது கத்ய (**श्रव्य गद्य**) காவியம் என்றும் வழங்கப்படும்.

க்கண்ட (KHANDA) காவியம் :- "**खण्ड काव्यं भवेत् काव्यस्यैकदेशानुसारि च ॥** என்பது க்கண்ட காவிய லக்ஷணமாகும். இதில் மஹா காவியங்கள் போல் நீண்ட கதைப்பகுதி இருக்காது. அளவும் சிறியது. விஷயங்களும் குறைவாகவே இருக்கும். சூரிய சந்திர உதயம், கடல்-நகரம் போன்றவற்றின் வருணனை இருக்காது. ஒரு சிறு விஷயத்தை மட்டும் எடுத்துக்கொண்டு வருணிப்பது மட்டுமேயாகும். இவ்வரிசையில் (க்கண்டகாவிய வரிசையில்) காளிதாஸனின் "மேகஸந்தேச"மும் "ருதுஸம்ஹார"மும் அடங்கும்.

ஆனால் காளிதாஸனின் ராக்ஷஸ காவியம் ஒரு கவி எவ்வாறு இலக்கியம் எழுதக்கூடாது என்பதற்குச் சான்றாக அமைந்தது. (ராக்ஷஸ காவியத்தை காளிதாஸன் எனும் பெயரில் வேறு யாரோ ஒருவர் எழுதியிருக்கலாம் என்ற வாதமும் உண்டு) மேகசந்தேச காவியம் 'कश्चित् कान्ताविरह-गुरुणा' என்று ஆரம்பிப்பதுபோல் ராக்ஷஸ காவியமும 'कश्चित् वनं बहुवनं' என்று தொடங்கியிருக்கிறது.

காளிதாஸனின் மேகஸந்தேச காவியம் சுவைக்கச் சுவைக்கத் திகட்டாத வருணனைகள் அமைந்தது.

"மேகசந்தேச" காவியத்தில் ஆரம்பமாகும் விஷயம் :

ஒரு யக்ஷன் (குபேரனின் பணியாள்) அவனுடைய பெயர் ஏதும் தரப்படவில்லை. குபேரனுடைய அரண்மனையில் பணி செய்துவந்த அந்த யக்ஷன் தன் கடமையில் கவனக் குறைவாக இருந்தமைக்காக குபேரனுடைய சாபத்தால் ஓராண்டுகாலம் அவனுடைய தெய்வீக சக்தியை அவன் இழந்து இளம் காதலியைவிட்டுப் பிரிந்து 'ராமகிரி' எனும் இடத்தில் வசிக்க நேரிட்டு பல மாதங்கள் ஓடின. அவன் காதல் நோய் காரணமாக உடல் மெலிந்துவிட்டான். இக்காலம் போல் அக்காலத்தில் செய்தியனுப்ப வசதிகளா! எனவே யோசித்தான். காதல் உணர்வின் காரணமாகத் தாம் செய்வது சரியா பொருத்தமற்றதா என்று பகுத்தறியும் நிலையில் அப்பொழுது அவன் இருக்கவில்லை. அச்சமயம் வெளியே மேகங்கள் மழைக்காலத்தை அறிவுறுத்தும் முகமாகப் பரவி நின்றன. தென்திசைக் காற்று வீசுவதால் மேகக் குவியல்கள் வடதிசை நோக்கிச் செல்வதைக் காண்கிறான். மிக நெடும் தொலைவில் காதலியிருந்ததால் அவனுடைய காதல் உணர்வு அவனை மேலும் துயருறச் செய்கிறது. அந்த மேகத்தின் மூலமாகவே தன் காதலிக்குச் செய்தியனுப்ப முடிவு செய்கிறான். மேகம் என்பது ஜடப் பொருளாயிற்றே, இடம், காலமறிந்து திறமையுடன் செய்திகளைச் சொல்லும் தகுதி, நல்ல அறிவாற்றல் உடையவர்களுக்குத்தானே உண்டு. நாம் எண்ணும் பணியை இந்த மேகம் செய்யக் கூடியதா என்று அவன் நினைத்தானில்லை ஏன் தெரியுமா!

"कामार्ता हि प्रकृतिकृपणाश्चेतनाचेतनेषु"

காமவயப்பட்டவர்கள் இயல்பிலேயே எதிரில் உள்ளது ஜடப்பொருளா அறிவுள்ள சேதனப்பொருளா (அறிவுள்ளதா) என்ற விவேகம் இல்லாமல்தான் இருப்பார்கள் (உதாரணமாக ராமாயணத்தில் ஸ்ரீராமனே வீசும் தென்றலைப் பார்த்து "ஏ காற்றே நீ இங்கு என் மீது வீசுவது இருக்கட்டும். ஒரு உதவி செய்வாயா! நேராக இலங்கைக்குச் செல் அங்கு அசோகவனத்தில் என் ஸீதை இருப்பாள். நீ அவளைத் தொட்ட (ஸ்பர்சித்த) கையோடு நேராக இங்குவந்து என்மீது வீசு. என்னைத் தொடுவாயாக என்று கூறுகிறான்.

" वाहि वात यतः कान्ता तां स्पृष्ट्वा मामपि स्पृश "

" வாஹி வாத யதஹ் காந்தா தாம் ஸ்ப்ருஷ்ட்வா மாமபி ஸ்ப்ருச "

இராமாயணத்தில் சீதையை பிரிந்த ராமனின் நிலையே இந்த மேகஸந்தேச காவியத்தை காளிதாஸன் எழுதக் காரணமான மூலக்கரு எனப் பலர் பலவிதமாகக் கூறுவர். ஸீதையைப் பிரிந்த துயரத்தில் ராமன் தன் சுயநினைவின்றி மழைக்கால மேகத்தைக் கண்டதும் காதல் நோய் மிகுதியால் மேலும் துயர்வயப்படுகிறான் என்ற நிலையை மனதில் கருவாகக்கொண்டு இந்த மேகசந்தேச காவியத்தை இயற்றியிருக்கலாம் என்பதும் ஒரு சாரார் கூறும் கருத்தாகும். எனவேதான் மேகஸந்தேச காவியத்திற்கு உரை எழுதிய மல்லிநாதஸூரி என்பவர்

सीतां प्रति हनुमत्सन्देशं मनसि निधाय मेघसन्देशं कविः कृतवान् इत्याहुः

என்று கூறுகிறார். கிஷ்கிந்தை மலைச்குகையில் தங்கியிருந்த ராமன் மேகத்தினைக் கண்டதும் சீதையின் நினைவு பிரிவுத் துயரத்தை அதிகமாக்குகிறது. அனுமனை சீதைக்கு தூதனாக அனுப்பிய அந்த நிலையைக் கருவாகக் கொண்டு இக்காவியத்தை இயற்றியிருக்கலாம் என்று சிலர் கூறுவர் என்று மேகசந்தேச காவியத்திற்கு உரை எழுதிய மல்லிநாதஸூரி என்பவர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறான தோற்றுவாய் கொண்ட இந்தக் காவியத்தினை காளிதாஸன் இயற்றிய நாட்களில் ஒரு இலக்கிய ஆர்வம் மிக்க ஒரு பெண்மணி அவனை ஆதரித்து வேண்டியவற்றைச் செய்துகொடுத்து வந்தாள். அதற்குக் காளிதாஸன் கொடுத்த விலை என்ன தெரியுமா? தினம் ஒரு மேகஸந்தேசச்லோகம் எழுதப்பட்ட ஓலைதான். அப்பெண்மணி அந்த ஓலையில் எழுதப்பட்ட ச்லோகத்தின் பொருளை - கருத்தை ஊன்றிப் படித்து இன்புறுவாள்.

பூர்வமேகம், உத்தரமேகம் என்ற இரு பிரிவுகளைக்கொண்ட அந்தக் காவியத்தின் (பூர்வமேகம் — முற்பகுதியில் 66 ச்லோகங்கள் உண்டு) அவை யாவும் தென்திசை தொடங்கி இமயம் வரையிலான (பூகோள சம்பந்தமான) இயற்கைக் காட்சிகளைப் பற்றியதாகவே இருக்கும். இடையில் ஒருசில இடங்களில் காதலின் பிரிவாற்றாமைத் துயரத்தை வெளிப்படுத்தும் கருத்துக்களும் இருக்கும். ஆனால் அப்பெண்மணிக்கு அந்த வருணனையில் சலிப்பு ஏற்பட்டபொழுது ஒருநாள் காளிதாஸனிடம் தன் மனதில் உள்ளதை வெளியிட்டாள். அதற்குக் காளிதாஸன் கூறியதாவது :- "பெண்ணே! கடுமையான தண்ணீர் தாகம் எடுத்தவன் ஒருவன் குளிர்ந்த சுவைமிக்க நீர் வேட்கையுடன் வருகிறான். அவனுக்குக் குளிர்ந்த சுவைமிக்க நீர்தான் தேவை. ஆனால் அவன் கண்டதோ ஒரு குளம். அதற்கு 66 படிகள் உண்டு. அவன் அந்தப் படிகளைக் கடந்தால்தான் சுவைமிக்க குளிர்ந்த நீரைப் பெற

முடியும். அதுபோல் இந்தக் காவியத்தின் முற்பகுதி முடிவுவரை பொருத்திரு. இரண்டாம் பகுதி தொடங்கும் காலத்தில் சுவைமிக்க சுலோகங்களைப் பெறலாம்" என்று கூறியதாக காலங்காலமாக வழங்கப்படும் கருத்து ஒன்று உண்டு.

அதற்கேற்ப இரண்டாவது பகுதியிலும் அந்த யக்ஷன் தன் காதலிக்கு அனுப்பும் செய்தி விரிவாகக் கூறப்படவில்லை. ஆனாலும் கவி, மேகத்திடம் கூறும் ச்லோகங்களின் கருத்து சுவை மிக்கதாகவே இருக்கும்.

"அளகாபுரி" நகர வீடுகளில் நடக்கும் இனிய சிருங்காரச் சுவைமிக்க நிகழ்ச்சிகளைக் கவி வருணிக்கும் விதம் மிகமிக உயர்வாக இருக்கும். அவற்றில் ஒன்றினை நாமும் காணலாமே!

ஏ மேகமே! நீ அளகாபுரி நகரின்மீது செல்லும் சமயம் பல மாளிகைகளின் மேல் தளங்களில் பல அரிய இனிய காட்சிகளைக் காணும் அரிய சந்தர்பம் உனக்கு ஏற்படும்.

ஓரிடத்தில் காதலன், தன் காதலியுடன் உறவாடும்பொழுது காதல் உணர்வு மிகுதியால் தம் கைகளைக் காதலியின் உடல்மீது உறவாடச் செய்து கொண்டே கொவ்வைப்பழம் போன்ற சிவந்த பளபளப்பான உதடுகளை உடைய காதலியின் இடைமுடிச்சை (नीवी-बन्ध)[1] அவிழ்ப்பதில் காதலனின் கைகள் ஈடுபடும். அக்கைகள் தம் செயலில் வெற்றியும் பெற்றுவிடும். அவ்விளங்காதலியும், காதல் உணர்வில் மயங்கிய நிலையில் காதலனின் செயலைத் தடுக்கமுடியாமல், அனுமதிக்கவும் முடியாமல் தவிக்கும் நிலையில் மண்டபத்தில் வீசும் வைரக்கற்கள்மயமான விளக்குகளின் பேரொளி அந்தக் காதலியைப் பெரிதும் வெட்கமுறச் செய்யும். விளக்கை வாயால் ஊதினால் அவை அணைந்துவிடுகின்றனவா! அவை எண்ணெய் விளக்கல்லவே! எனவே [2]விளக்குகளை அணைக்கும் முயற்சியாக அருகிலுள்ள குங்குமத்தை இரு கைகளாலும் எடுத்து அவ்விளக்குகளின் மீது போடுவாள். ஆனால் அவ் விளக்குகள் அணையாமல் இப்பொழுது சிகப்பு நிற ஒளியைப் பரவச்செய்வதாக இருக்கும். அறை முழுதும் சிகப்புநிற ஒளி பரவி இருக்க, அக்காதலியின் முயற்சி பயனற்றதாக ஆகிவிடும். அந்த அரிய காட்சியை நீ அங்கு காண்பாய் என்றவாறு மேகத்திற்கு உற்சாகமூட்டும் விதத்தில் பேசும் யக்ஷன், தன் காதலிக்குச் சொல்லும் செய்திகள் மிகமிகக் குறைவுதான்.

---

1. नीवी-बन्ध — A cloth worn round a woman's weist or more properly the ends of the cloth tied into a knot infront, the knot of the wearing garment.

2. வைர விளக்குகள் — தீச்சுடர் ஏற்றி எரியச் செய்யப்படுபவை அல்ல. ஒளி உமிழும் வைரக்கற்களே விளக்குகளாக உள்ளன.

இவ்வாறு இனிய வருணனைகளைக் கீழே சொல்லப்பட்டவாறு இனிய சொற்களால் (எளிதில் பொருள் கொள்ளும் விதத்தில்) கூறும் இயல்புள்ள காளிதாஸன் "இரும்புக்கடலை" போன்று எளிதில் பொருள் விளங்காத சொற்களைக் கொண்டும் ஒரு காவியம் படைத்திருக்கிறதாய்ச் சொல்லப் படுகிறது. "ராக்ஷஸ காவியம்" என்பது அதன் பெயர். இக்காவியம் 20 ச்லோகங்களை மட்டும் கொண்டது. **कश्चित् कान्ता** ..... என்று தொடங்கி எழுதப் பட்ட 'மேகஸந்தேசம்' போலவே **कश्चिद्वनं** எனத் தொடங்கும் இந்த ராக்ஷஸ காவியத்திலும் வருணனை உண்டு. ஆனால் அவ்வர்ணனைகளை உரை இன்றி அறிவது எளிதல்ல.

இலக்கியங்களில் **नैषधं विद्वदौषधं** என்று சொல்லப்படுவதுண்டு. ஸ்ரீ ஹர்ஷ மஹாகவி எழுதிய நைஷத மஹாகாவியம் பேரறிஞர்களுக்கும் "மருந்தாக" இருக்கும். மருந்துகள் பொதுவாக இனிப்புடன் இருப்பதில்லை. ஆனால் இந்த ராக்ஷஸ காவியத்தில் உள்ள 20 ச்லோகங்களையும் படித்தால் கடைசி 20வது ச்லோகம் மட்டும் "இவ்வாறு கூறிவிட்டு அந்த வாலிபன் அவனுடைய மனதிற்குப் பிடித்தமானவளுடன் மகிழ்ந்திருந்துவிட்டு நான்கு காளைகள் பூட்டிய வண்டியில் ஏறி தன் வீடு சென்றான்" என்று எளிதில் பொருள்கொள்ள முடிகிறது. அவ்வாலிபன் அவளிடம் என்ன சொன்னான் என்பது பற்றிக் கூறும் மற்ற ச்லோகங்கள் மிகவும் கடினமான பிரஸித்தமில்லாத சொற்களால் இரு (பல) பொருள் உள்ள சொற்களால் அமைந்துள்ளன. முதல் ச்லோகமே "மேகஸந்தேசம்" போல் **कश्चिद्वनं** என்று தொடங்குகிறது.

कश्चिद्वनं बहुवनं विचरन् वयस्थो
वश्यां वनात्मवदनां वनितां वनाद्राम् ।
तर्वर्यरिप्रदमुदीक्ष्य समुत्थितं खे
ना गामिमां मदकलः सकलां बभाषे ॥ १

அன்வயம் (Prose order):

कश्चित् मदकलः वयःस्थः ना, बहुवनं वनं विचरन्, वनाद्रां वनात्मवदनां वश्यां वनितां उदीक्ष्य खे समुत्थितं तर्वर्यरिप्रदं च उदीक्ष्य सकलां गां बभाषे ।

ஒரு வாலிபன் வயதிற்கு வந்த வாலிப வயதில் உள்ள **ना**-புருஷன், அவன் யாரோ! பெயர் ஏதும் குறிப்பிடப்படாதவன் **मदकलः** - வாலிபமதத்தால் அழகானவன் அல்லது மகிழ்ச்சியுடன் உள்ளவன் அல்லது மது அருந்திய நிலையில் இன்னது பேசுகிறான் என்று எல்லோரும் கேட்கும் விதத்தில் இல்லாமல் பேசுகிறவன், அவன் **वनं**-காட்டில், எப்படிப்பட்ட காடு என்றால்,

बहुवनं - மிகுந்த நீர் நிலைகள், அருவிகள், ஆறுகள் சூழ்ந்த காட்டில், **विचरन्** – குறிக்கோள் ஏதுமில்லாமல் சுற்றிக்கொண்டிருக்கிறவன். (அங்கு) **वनितां** - ஒரு பெண்ணை (வனிதை என்ற சொல் – வயதிற்குவந்த பெண்ணையே குறிக்கும்) அவள் **वश्यां** - இந்த வாலிபனுக்கு வயப்பட்டவள், மேலும் **वनात्मवनां वन** – நீரை **आत्मा** – உடலாக உடைய சந்திரன் (சந்திரன் கடலிலிருந்து தோன்றியவன் அல்லவா!) அதுபோன்ற **वदन** - முகத்தை உடைய பெண்ணை. அப்பெண் மேலும் **वनार्द्रां** - மழை நீரால் நனைந்திருக்கிறாள். (இதிலிருந்து அப்பெண்ணின் உடல் அழகு நிலைபற்றிக் கூறவேண்டியதில்லை.) மது அருந்திய வயதிற்கு வந்த வாலிபன், தன்னிடம் வயப்பட்ட பெண்ணைப் பார்க்கிறான். அவளுடைய ஆடைகள் நனைந்திருக்கின்றன. ஏன் தெரியுமா? **खे** - வானத்தில் **समुत्थितं** - எழுந்துவந்த. **तर्वर्यरिप्रदं** (**तरु** + **अरि** + **अरि प्रदं**) காட்டு மரங்களுக்குப் பகை தீ—நெருப்பு, அதற்குப் பகையாக உள்ளது நீர். அதை (நீரை) தருகின்ற மேகத்தை மேல்நோக்கிப் பார்த்துவிட்டு **बभाषे** – பேசுகிறான். பேசியது என்ன? **गां** – வார்த்தையை, எப்படிப்பட்ட வார்த்தையாம் **सकलां** - எல்லாமே பேசுகிறான் அல்லது அழகுடன் — இலக்கிய அழகுடன் கூடிய **गां** - வார்த்தையைப் பேசுகிறான். அவன் பேசியது என்ன என்பது அடுத்துவரும் ச்லோகங்களில் தொடருகிறது.

இந்த ச்லோகத்தில் **वनं**, **बहुवनं**, **वनात्मवदनां**, **तर्वर्यरिप्रदं** என்ற சொற்கள் எளிதில் பொருள் கொள்ளத்தக்கவையன்று.

पश्याब्जदृक् गिरितटेषु कुमातृसाह्वान्
भूदेवराजरिपुशत्रुसमावधूतान् ।
वैश्वानरारिजरिपुप्रशराभिभूतैः
दृक्श्रोत्रशत्रुभिरुपाश्रितपुष्पशोभान् ॥ २

அன்வயம் (Prose order):

हे अब्जदृक्, पश्य, भूदेवराजरिपुशत्रुसमावधूतान्, वैश्वानरारिजरिपुप्रशराभिभूतैः दृक्-श्रोत्रशत्रुभिः उपाश्रितपुष्पशोभान् कुमातृसाह्वान् पश्य ।

ஏ தாமரை (இதழ்) போன்ற கண்களை உடைய பெண்ணே! அதோ பார். **भूदेवराज** சந்திரன் - அவனுக்கு **रिपु** பகைவன், மேகம். வானில் சந்திரனை மறைக்கிறபடியால் மேகம் சந்திரனுக்கு சத்ரு. அதற்கு (அந்த மேகத்திற்கு) சத்ரு - காற்று. (மேகங்களை கலைத்துவிடுகிற காரணத்தால்) அக்காற்றினால் **समावधूतान्** - அசைக்கப்படுகிற, **कुमातृसाह्वान्** – தரம் குறைந்த. **कुत्सित** – என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் சொற்கள், **कु**, **कद्** என்ற

சொற்களாகும். (உதாரணம் कोष्णं कवोष्णं मन्दोष्णं कदुष्णं) माता என்ற சொல்லுக்கு தாய் என்பது பொருள். अम्बा, என்ற சொல்லும் தாயைக் குறிக்கும். कुमातृ कद् + अम्ब (கதம்ப) कदम्ब என்பது ஒருவகை மரத்தின் பெயர். காற்றினால் அசைக்கப்படுகிற கதம்ப மரங்களைப்பார். அவை எப்படிப்பட்டவை? पुष्प-शोमान् மலர்களால் அழகுற விளங்குபவை. மேலும் दृक् श्रोत्र शत्रुभिः उपाश्रित=दृक् கண்களை श्रोत्र காதுகளாகக் கொண்ட (கண்களையே காதுகளாகக் கொண்டவை) பாம்புகள். அவற்றுக்கு சத்ரு மயில்கள். மயில்கள் கதம்ப மரத்தின் மீது அமர்ந்ததாலும் அம்மரங்களில் மலர்கள் பூத்திருப்பதாலும் அழகுடன் விளங்குகின்றன கதம்ப மரங்கள். அந்த மயில்கள் எந்த நிலையில் உள்ளன. वैश्वानर-अरि-ज रिपु घ्न शराभिभूतः वैश्वानर = அக்னி (அதற்கு) अरि சத்ரு (பகை)= நீர் ज (அதில்) உண்டாகும் மீன்கள். रिपु அவற்றின் சத்ருக்கள். மீன்களைக் கொல்லும் ஒருவகைப் பறவைகள். அவற்றை हन् கொல்லுகிறவன் மன்மதன். (மன்மதனுடைய கொடியிலுள்ளவை மீன்கள் அல்லவா. அவற்றைக் கொல்லும் பறவைகளை தம் கொடிச் சின்னமான மீன்கள்மீதுள்ள கருணையால் கொல்பவன் மன்மதன். அவனுடைய शर பாணங்களால் अभिभूत தாக்கப்பட்ட நிலையில் மயில்கள் உள்ளனவாம். மயில்கள் மன்மத பாணத்தால் அடிக்கப் பட்ட நிலையில் தம் பேடைகளுடன் இணைவதற்காகக் கதம்ப மரத்தின் மீது ஏறி அமர்ந்துள்ளன. அதுவும் கண்களுக்கு இனிமையாகவுள்ளது. மரத்தில் மலர்கள் மிகுந்திருப்பதும் கண்களுக்கு இனிமையாகவுள்ளது. அப்படிப்பட்ட கதம்ப மரங்களைப் பார். என்று தம் காதலியிடம் கூறினான் அந்த வயதிற்கு வந்தவன். இதிலும் பல சொற்கள் எளிதில் பொருள்கொள்ள இயலாதபடி அமைந்துள்ளன.

पश्याब्धिसारसदृशाभिरभू(मी)भिरद्भिः
आप्लावयत्यमरगुप् धरणीमहिघ्नः ।
अब्दः सिताभिरसितः शबलः खगाभिः
वाजैः सितैरिव विभाति वनप्रबुद्धैः ॥ ३

அன்வயம் (Prose order):

हे वनिते, अमरगुप्, अब्धिसार सदृशाभिः अभूभिः अद्भिः धरणीं आप्लावयति- (सः अमरगुप्) कथं भूतः अहिघ्नः अहिं वृत्रासुरं हन्तीति अहिघ्नः ॥ "सर्पे वृत्रासुरेऽप्यहिः" इति वैजयन्ती ॥ अपो ददाति इति अब्दः मेघः सिताभिः शुभ्राभिः खे आकाशे गच्छन्तीति खगाः ।

ताभिः बलाकाभिः शबलः शबलीकृतः विभाति शोभते । (सः मेघः) कथं भूतः असितः कृष्णः कैरिव शबलीकृतः विभाति, वनं उदकं तत्र प्रबुद्धैः विकसितैः सितैः शुभ्रैः वारि उदके जातैः कमलैरिव ॥

ஏ பெண்ணே! अमरगुप् अमरान् गोपायति इति தேவர்களின் பாதுகாவலன் இந்திரன். அவன் கடல் நீருக்குச் சமமான மிகுந்த நீரினால் இந்த பூமியை வெள்ளக்காடாக்குகிறான். அந்த இந்திரன் எப்படிப்பட்டவன் தெரியுமா! अहिघ्नः अहि என்பதற்குப் பாம்பு என்றுதான் பிரசித்தமான பொருள். घ்न கொல்லுகின்ற பாம்புகளைக் (கொல்லுகிற என்ற விசேஷணம் - Adjective) இந்திரனுக்குப் பொருந்தாது என்ற நிலையில் अहिघ्नः என்ற விசேஷணம் தரப்பட்டுள்ளதே என்றால் अहि என்பதற்கு விருத்ராசுரன் என்றும் பொருள் உண்டு என்பதாக "வைஜயந்தீ" எனும் நிகண்டு நூலில் கூறப்பட்டுள்ளது. ஆதலின் விருத்ராசுரனைக் கொன்ற இந்திரன் என்பது பொருத்தமாகிறது. இதை விரோதாபாஸ அலங்காரம் என்றும் சொல்வதுண்டு. இந்த अब्द, अपः ददाति इति अब्दः மேகம் अब्दः என்ற சொல் சாதாரணமாக வருடம் = $365\frac{1}{4}$ நாட்கள் கொண்ட — காலம் என்பதே பிரசித்தமாக வழங்கப்படுகிறது அச்சொல்லை (யௌகிகமாக) अप् + द என்று பிரித்தால் நீரைத்தருகிற 'மேகம்' என்று பொருளைத் தருகிறது. அந்த மேகம் கருநிறத்துடன் இருந்தாலும் அதன் அடியில் வானத்தில் எண்ணற்ற நாரை போன்ற பறவைகள் பறக்கிறபடியால் மேகமே பொன்னிறமாக்கப்பட்டதாகக் காட்சியளிக்கிறது.

அதனை உவமையால் விளக்குகிறார் கவி. நீர்நிலையில் நீர் கருநிறம் உள்ளதாகத்தான் தோற்றமளிக்கும். அதில் மலர்ந்த வெண்தாமரைகள் சூழ்ந்திருந்தால் எவ்வாறு காட்சி தருமோ அதுபோன்று வானம் காட்சி தருகிறது என்று கூறுகிறார்!

இந்த ச்லோகத்தில் अहि என்ற சொல்லும் अब्द என்ற சொல்லும் वाजः वारि जायन्ते इति वाजानि तैः நீரில் உண்டாகும் தாமரைகள் என்ற சொற்கள் எளிதில் பொருள் காண இயலாதவை. இவற்றிற்குப் பொருள் தெரியாத வரையில் ச்லோகத்தின் பொருள் முழுமையாக அறிய இயலாததாக இருக்கும்.

गोष्ठं घृतं सुघृतवद्भिरमीभिरग्र्यं
गोभिः समुद्धरति यद् बहुधा हिमघ्नः ।
तद् गव्यमम्बरगतं शिखिजात्मसंस्थं
विस्पन्दमानं अभिवर्धयतीह गोजान् ॥ ४

அன்வயம் (Prose order)

हिमघ्नः सुघृतवद्भिः अमीभिः गोभिः यत् अग्र्यं गोष्ठं घृतं समुद्धरति तत् शिखिजात्मसंस्थं अम्बरगतं गव्यं विस्पन्दमानं सत् इह गोजान् अभिवर्धयति ॥

तत् गोषु भवं गव्यं रश्मिजं नीरं, इह भूमौ गवि भूमौ (जान्) जातान् । तृणादिपदार्थान् । अभिवर्धयति — वृद्धिं प्रापयति । कथं? अम्बरे आकाशे गतं वर्तमानं, पुनः कथं भूतं? शिखी - वह्निः तस्मात् जातो धूमः सः आत्मा यस्य सः मेघः । तस्मिन् संतिष्ठन् इति तथा ॥ पुनः कथं भूतं? विस्पन्दमानं स्रवत् । तत् किं, गोष्ठं पृथिवीस्थं । घृतं— पानीयं हिमघ्नः आदित्यः बहुधा बहुप्रकारेण । सुघृतवद्भिः सूदकवद्भिः गोभिः किरणैः समुद्धरति गृह्णाति । किं भूतं घृतं? अग्र्यं श्रेष्ठम ॥

பனியைத் தன் கிரணங்களால் விலகச்செய்யும் சூரியன். அக்கிரணங்கள் எப்படிப்பட்டவை தெரியுமா! மிகுந்த நீரைத் தன்னகத்தே கொண்டுள்ள(வை) (கிரணங்களால்). [தந்த்ர சாஸ்திர முறைப்படி காலையில் குளம் அல்லது ஆற்று நீரில் மூழ்கி ஸ்நானம் செய்வோரும், கணபதி தர்ப்பணம் (சதுராவர்த்தி) செய்வோரும், சூரியனை நோக்கி பிரார்த்தனை செய்துவிட்டு 'அங்குச' எனும் முத்ரையால் சூரியனிடமிருந்து நீரைப்பெற்றுத் தம் கடமைகளைச் செய்வர். எனவே சூரியனுடைய கிரணங்களில் மிகுந்த நீர் உண்டு.] மிகச்சிறந்த பூமியில் உள்ள (நீர்நிலைகள், செடி, கொடி, மரங்களிலிருந்து) यत् गव्यं-எந்த நீரை எடுத்துக்கொள்கிறானோ तत् - அதே நீரை, अम्बरगतं शिखिजात्मसंस्थं स्रवत् - வானில் மேகத்தில் இருந்துகொண்டு, மழையாகப் பெய்து பூமியில் உள்ள பயிர்பச்சைகளை. மரம்-செடி-கொடிகளை வளரச் செய்கிறது. இந்த ச்லோகத்தில் घृत गव्य गोष्ठ शिखिजात्मसंस्थं गोजान् என்ற சொற்களின் பொருளை அறிவதில் மிகவும் கஷ்டம் உண்டு.

अब्रुट्पलाशनिभदृक् घनजात्मवक्त्रा
वार्चस्वरेभनिभगा गजदोःसमोरुः ।
सीरिध्वजप्रसवतुल्यविषाद्दासी
नूा सङ्गता प्रमुदिता प्रसमीक्ष्य वार्दम् ॥ ५

हे प्रिये पश्य, असौ वनिता वाः उदकं ददाति इति वार्दः मेघः तं प्रसमीक्ष्य प्रकर्षेण मुदं इता प्राप्ता, बभूवेत्यध्याहारः । कथं भूता — अप्सु रु(रो)हति इति अब्रुट् पद्मं, तस्य

पलाशः पत्रं तन्निभे दृशौ यस्याः सा । पुनः कथं भूता-घनात् जातं नीरं, तत् (तदेव) आत्मा यस्य असौ चन्द्रः तेन तुल्यं वदनं यस्याः सा । पुनः कथं भूता वारि चरति इति वार्चः हंसः तत्स्वर इव स्वरो यस्याः सा । पुनः कथ भूता - इभो गजः तन्निभं तुल्यं गच्छति (इति) इभनिभगा) पुनः कथं भूता, गजस्य दोः करः शुण्डादण्डः तत्समौ ऊरू यस्याः सा । पुनः कथं भूता -सीरं हलं अस्य अस्तीति सीरी, रौहिणेयः बलभद्रः । तस्य यो ध्वजः तालः, तस्य प्रभवे फले, तत्तुल्यौ विषं पयः इति आह्वा यस्य तत् दुग्धं तत् दत्तः तौ विषाह्वदौ स्तनौ यस्याः सा तथा । सङ्कर्षणः सीरपाणिः (इत्यमरः), तालाङ्को मुसली हलीत्यमरः । ना पुरुषेण सङ्गता संयुता ॥

அன்பிற்குரியவளே ! அதோ பார். அந்தப்பெண் மேகத்தைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தவளாக இருக்கிறாள். அவள் எப்படிப் பட்டவள் என்பதனை ஆறு விசேஷணங்களால் கவி வருணிக்கிறார். தாமரை இதழைப் போன்ற கண்கள் உள்ளவள். சந்திரனுக்கு ஒப்பான முகத்தை யுடையவள், அன்னப் பறவையின் குரல் போன்ற குரல் உள்ளவள். யானை யின் நடையுள்ளவள். யானையின் துதிக்கை போன்ற துடைகளை யுடையவள். மேலும் (பலராமனின் கொடியில் இலச்சினையாக விளங்கும்) பனை மரத்தின் பழங்கள் போன்ற தனங்களையுடையவள். அவள் புருஷனுடன் இணைந் திருக்கிறாள் பார்.

இங்கு वार्द्, अब्दुट्, घनजात्मवक्त्रा, वार्च सीरिध्वजप्रसव (तुल्य) विषह्व, ना ஆகிய சொற்கள் அதிகம் புழக்கத்தில் இல்லாதவை (அப்ரஸித்தமானவை) அவற்றின் பொருள் தெரியாத வரையில் இந்த ச்லோகத்தின் பொருளை அறிவது கடின மாகும்.

காளிதாஸன், எம்மாதிரி காவியங்களை எழுதவேண்டும் என்பதற்கு ரகுவம்சம், குமாரஸம்பவம், மேகஸந்தேசம் என்ற காவியங்களையும், விக்ரம ஊர்வசியம், மாளவிகாக்னிமித்ரம், சாகுந்தலம் எனும் நாடகங்களையும் எழுதியதுபோல் எந்த மாதிரி காவியங்கள் இயற்றப்படக்கூடாது என்பதனை அறிவுறுத்தும் முகமாகவே இந்தக் கடும் சொற்கள் அடங்கிய காவியத்தை ராக்ஷஸச் சொற்கள் அரக்கர்கள் மாயையால் பல உருவங்களை எடுக்கும் இயல்புள்ளவர்கள். உண்மை வடிவம் ஒன்றாக இருக்க மாயையால் பல வடிவங்கள் எடுக்கின்றவர்கள். அதுபோலவே இந்தக் காவியத்தில் ஒரு சொல்லின் பொருள் பழக்கத்தில் உள்ள பொருள் ஒன்றாக இருக்க, அதனை வேறு விதம் பொருள் தரும்படியாக அமைத்து இக்காவியத்தை

இயற்றியுள்ளதால், இதனை "ராக்ஷஸ காவியம்" என்றே பெயரிட்டதாகத் தெரிகிறது. உதாரணம் वन — என்பதற்குக் "காடு" என்பதுதான் அதிகம் பழக்கத்தில் உள்ள பொருள். இங்கு वन என்பதற்கு "நீர்" என்று பொருள் தரும் விதத்தில் அமைக்கப்பட்டது. विष என்பதற்கு "உயிர்க்கொல்லி" என்றுதான் பிரசித்தமான பொருள். இங்கு "பால்" என்ற பொருளில் அச்சொல் அமைக்கப்பட்டிருக்கிறது. "नृ" எனும் சொல் மனிதன் எனும் பொருளில் பழக்கத்தில் உள்ளதுதான் नृपतिः என்பதாக. ஆனால் மூன்றாவது வேற்றுமையில் அதைத் தனிச்சொல்லாக (न्रा என்பதாக) உபயோகிக்கும்பொழுது, இது என்ன சொல் எனச் சற்று சிந்திக்கச் செய்கிறது. (1 ना नरौ नरः ॥ 2 नरं नरौ नॄन् ॥ 3 न्रा नृभ्यां नृभिः ॥ 4 न्रे नृभ्यां नृभ्यः ॥ 5 नुः नृभ्यां नृभ्यः ॥ 6 नुः न्रोः नृणां – नॄणां ॥ 7 नरि न्रोः नृषु ॥ என்பதாக. இச்சொல் 7 வேற்றுமைகளில் வழங்கப்படும்.) ஆதலின் இக்காவியத்தில் வழங்கப்படுகிற பல சொற்களின் பொருத்தமான பொருளைக் காண்பதில் விளக்கமில்லாமல் (வியாக்யானம் இல்லாமல்) அறிவதற்கு ஏற்றதாக இல்லை என்பதாலேயே ராக்ஷஸ காவியம் என்பது மயக்கம் தரும் சொற்களைக்கொண்டு அமைக்கப்பட்ட சிறு காவியம் என்று பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது.

सूर्यांशुनाम पतिरुन्नतदृप्तगामी
बाङ्नामभिः परिवृतो विषनामदाभिः ।
उस्राचरः प्रमुदितः प्रतिनानदीति
गर्जन्तमीक्षणहितोच्चयतुल्यरूपम् ॥

उस्राः गावः तासु चरति इति तथा [वृषः] गर्जन्तं ईक्षणयोर्हितं यत् कज्जलं तस्य उच्चयः समूहः तेन तुल्यं रूपं यस्य सः मेघः तं प्रसमीक्ष्येत्यध्याहारः । प्रतिनानदीति प्रतिस्पर्धितया नदति । किं भूतः सूर्यांशवो रश्मयः तन्नामतुल्यं नाम यासां ताः गावः तासां पतिः । गौः नादित्ये बलीवर्दे क्रतुभेदर्षिभेदयोः । स्त्री तु स्यात् दिशि भारत्यां भूमौ तु सुरभावपि । पुंस्त्रियोस्तु दिक्—वज्रांशु—रश्मिदृक् बाणलोमसु इत्यभिधानात् ॥

कथं भूतः — उन्नतदृप्तवत् गच्छतीत्यसौ तथा । पुनः कथं भूतः — वाचां यत् नाम तन्नाम यासां ताः गावः ताभिः परिवृतो युक्तः । कथं भूताभिः? विषं पानीयं तस्य यन्नाम यस्य तत् पयः दुग्धं तद्ददति इति ताः ताभिः । कथंभूतः प्रकर्षेण मुदितः हृष्टः ॥

அந்த வாலிபன் மேலும் கூறுகிறான். இடி முழக்கம் செய்யும் கருத்த மேகங்களைப் பார்த்த காளை ஒன்று அந்த மேகத்திற்குப் போட்டியாகத் தானும் எக்காளமிடுகிறது. **गो** என்ற சொல் ஆண்பாலாகில் காளை சூரியன், ஒருவகை யாகம், முனிவர் என்ற பொருளைத் தரும். பெண்பாலாகில் கிழக்கு முதலான திசை, சொல், பூமி, காமதேனு என்ற பொருளைத் தரும். இருபால் சொல்லாகக் கொண்டால் திசை, வஜ்ராயுதம், ஒளி, சூரியகிரணம் பாணம் Arrow உரோமம் என்ற பொருளைத் தரும். எனவே இந்த இடி முழக்கம் செய்யும் கருத்த மேகத்திற்குப் போட்டியாகக் காளை எதிர்முழக்கமிடுவதைக் காணில் சூரியன் நாற்றிசைகள் யாவும் அதற்குப் போட்டியாக எதிர் முழக்கம் செய்வதாகக் கூறவேண்டியிருக்கிறது.

சூரிய ஒளி எனும் சொல்லுக்குச் சமமான பெயர் கொண்டவை பசுக்கள். அவற்றின் தலைவன் காளை ஒன்று தலை நிமிர்ந்து கர்வத்துடன் செல்கிறதாம். அது **वाक्** என்னும் சொல்லுக்கு என்ன பொருளோ அதே பொருளைக் குறிப்பிடும் பாலைத் தருகிற பசுக்களிடையே மகிழ்ச்சியுடன் நடந்துகொண்டிருக்கிறது. மேகத்தின் இடி ஒலி கேட்டதும், அதனைப் பொறுக்க மாட்டாமல் தானும் எக்காளமிடுகிறது பார்.

सूर्यांशु वाक् என்ற சொற்கள் பசுக்களைக் குறிக்கும். **उस्र** என்பதற்கும் பசு என்று பொருள். **विष** என்பதற்கு பால் என்பது பொருள் **प्रतिनानदीति** என்ற வினைச்சொல் மிக அரிய சொல்லாகும். "திரும்பத் திரும்ப எதிர்த்து ஒலி செய்கிறது" என்று அதன் பொருள். **पुन: पुन: नदति — नानदीति ॥** இம்மாதிரி மிகவும் கடுஞ்சொற்களைக் கொண்ட இந்த ராக்ஷஸ காவியம் வியாக்யானம் இல்லாமல் படிப்பதும் பொருள் அறிவதும் மிக மிகக் கடினம் என்பதில் ஐயமில்லை. எனவேதான் இந்தச் சிறு காவியம் புழக்கத்தில் இல்லாமல் இருந்து வருகிறது.

एतं पयोदपतिरुन्नमितं पयोदं
खस्थं महीतलगतः प्रतिगर्जतीव ।
भित्त्वाऽवनिं वनरुहाक्षि शिरोरुहाभ्यां
सम्प्रस्थितोऽमृतधारैरभिषिच्यमानः ॥

हे वनरुहाक्षि, पद्माक्षि, पयः क्षीरं ददति, ताः गावः तासां पतिः वृषः एतं प्रत्यक्षं पयोदं (पयः जलं ददाति इति पयोदः मेघः तं) मेघं प्रति गर्जति इव प्रतिशब्दं करोतीव । किं भूतः? शिरसि रोहतः शिरोरुहे ताभ्यां शृङ्गाभ्यां अवनिं पृथिवीं भित्त्वा विदार्य, संप्रस्थितः प्रकर्षेण स्थितः ।

कथं भूत: महीतले गत: वर्तमान: । पुन: कथं भूत: अमृतधरै: मेघै: अभित: सिच्यमान: कथंभूतं एतं उन्नमितं उच्चं । पुन: कथंभूतम् । खे आकाशे तिष्ठति इति खस्थम् ॥

தாமரை (இதழ் போன்ற) கண்களுடைய பெண்ணே! அந்தப் பசுக்களுக்கெல்லாம் தலைவனாகிய காளை வானில் பரந்துள்ள மேகத்தை நோக்கி மேகத்தின் இடிமுழக்கத்திற்கு எதிராக எக்காளமிட்டு முழக்கம் செய்கிறது. அக்காளை தன் இரு கொம்புகளாலும் பூமியைக் குத்திக் கிளறிவிட்டு ஏதோ பெரிய சாதனை செய்துவிட்டதுபோல் நின்றுகொண்டு, மேகத்தில் அமுதம் போன்ற நீரால் குளிப்பாட்டப்பட்டுள்ள நிலையில் வானில் பரந்துள்ள மேகத்தை நோக்கிக் கர்ஜனை புரிகிறது.

இந்த ச்லோகத்தில் पयोद என்ற சொல் பசு, மேகம் இரண்டையும் குறிப்பிடுகிறது. पयः என்பதற்குப் பால் என்றும், நீர் என்றும் பொருள். பாலைத் தருவது பசுக்கள், நீரைத் தருவது மேகம். शिरोरुह எனும் சொல்லுக்கு பொதுவாக பிரஸித்தமான பொருள் "தலைமயிர்" என்பதாகும். இவ்விடத்தில் காளைபற்றிக் குறிப்பிடப்படும் இடத்தில் காளையின் தலையில் காலப் போக்கில் முளைப்பதுதானே கொம்புகள். எனவே, शिरोरुह தலையில் முளைப்பது என்ற பொருளைத்தரும் அச்சொல்லால், "கொம்புகள்" என்ற பொருள் அச்சொல் கலப் படிக்கமாத்திரத்தில் விளங்குவதாக இல்லை.

स्रोतोजविक्षतजभूधरधातुरूपाः
खस्थाः पयोजदलदृक् शुचिशुक्रमासोः ।
मासोर्नभस्यनभसोरतिसम्पतन्तः
तीव्रं विषं विषधराः परिनिर्वपन्ति ॥ ८

पयोजं कमलं, तस्य दलं पत्रं तद्वत् दृशौ यस्याः सा । तस्याः सम्बुद्धिः [(हे) पयोजदलदृक्] विषं पानीयं धरन्तीति ते विषधराः मेघाः, तीव्रं दुःसहं विषं उदकं परितः निर्वपन्ति सर्वतः सिञ्चन्ति । किं भूताः स्रोतसि प्रवाहे जातं कमलं विशेषेण क्षतात् जातं रुधिरं भूधराः पर्वताः, तेषां धातवः गैरिकसुवर्णादयः तत्तुल्यं रूपं येषां ते । पुनः कथं भूताः खस्थाः गगनस्थाः । पुनः कथं भूताः—शुचि शुक्रमासोः ज्येष्ठाऽऽषाढयोः नभस्य नभसोः भाद्र-श्रावणयोः अति अत्यन्त सम्यक् पतन्तः ॥

தாமரை இதழ்போன்ற கண்களையுடைய பெண்ணே! இந்த மேகங்கள் (கடுமையாக) நீரை எங்கும் பொழிகின்றன. மலைகளில் சிகப்பு நிறக்கற்கள்

மழை நீரில் கரைந்து செந்நீராக எங்கும் வழிந்தோடுகிறது. அவற்றை நோக்கும்பொழுது வானில் உயர்ந்து நிற்கும் மலைகள் செந்தாமரை நிறத்தில் கடும் வெட்டுக்காயம் பட்டதால் அவற்றின் உடலெங்கும் வழிந்து பெருகும் இரத்தப்பெருக்கென்று எண்ணச்செய்து. ஆனி—ஆடி—ஆவணி—புரட்டாசி மாதங்களில் சிகப்புநிற நீரை எங்கிலும் வழிந்தோடச் செய்கின்றன.

இந்த ச்லோகத்தில் विषधरा: विषं परिनिर्वपन्ति என்ற சொற்களைக் கேட்ட மாத்திரத்தில் கொடிய பாம்புகள் விஷத்தை எங்கிலும் வெளிப்படுத்துகின்றன. என்ற பொருள்தான் மனதில் தோன்றுகிறது ஆனால் विष என்ற சொல்லுக்கு குடிநீர் என்ற பொருளும் உண்டு என்பதால் विषधरा: जलधरा: மேகங்கள் विषं-जलं நீரை என்று பொருள் கொள்ளவேண்டியிருப்பதுகண்டு மனதில் ஆயாசம் ஏற்படச் செய்கிறது.

स्वयोनि[1]भक्षध्वजसम्भवानां
श्रुत्वा निनादं गिरिगह्वरस्थः ।
तमोऽरिबिम्बप्रतिबिम्बधारी
विरौति कान्ते पवनाशनाशः ॥ ९

हे कान्ते, पवनं वायुं अश्नाति असौ पवनाशनः सर्पः तं अश्नाति इति सः तथा (पवनाशनाशः) मयूरः विरौति शब्दं करोति । किं कृत्वा - स्वयोनिः उत्पत्तिस्थानं जलं । भक्षयति इति सः अग्निः तस्य ध्वजः धूमः तस्मात् सम्भवः उत्पत्तिः येषां ते मेघाः तेषां निनादं शब्दं श्रुत्वा गिरेः गह्वरं गुहा तत्र तिष्ठति इति । स पुनः कथंभूतः तमसः अरिः चन्द्रः तस्य बिम्बं मण्डलं तत्प्रतिबिम्बानि चन्द्राः चन्द्राङ्कानि धरति इत्यसौ पिञ्छचन्द्रकधारी । इत्यर्थः ॥

இந்த ச்லோகத்தில் ஹே (காந்தே) மனதிற்கினியவளே! மேகங்களின் இடிமுழக்க ஒலிகேட்டு மலைக்குகையில் இருக்கும் மயில் சத்தம் செய்கிறது.

இந்த ச்லோகத்தில் स्वयोनिभक्षध्वज என்ற சொல்லால் மேகம் குறிப்பிடப் படுகிறது. இவ்வாறு சொற்களைப் பிரயோகம் செய்வது காவ்யதோஷம் என்று சொல்லப்படும். இருகைகள் உள்ள மனிதர்களுக்கு என்பதனை अष्ट-अर्ध-अर्ध बाहूनां — अष्ट+अर्ध+अर्ध எட்டில் பாதி நான்கு அதில் பாதி இரண்டு, बाहु- கைகளையுடைய என்ற விதமாக பிரயோகம் செய்வது अर्थ தோஷமுள்ள

---

1. स्वयोनिः स्वयम्भूः கர்பவாஸத்தில் இருந்து தோன்றாதவற்றை स्वयोनि स्वयम्भू, என்று சொல்வதுண்டு. அந்த முறையில் நீர் स्वयोनिः ॥

இலக்கிய னைகயாகும். எனவேதான், இம்மாதிரி சுற்றிவளைத்து பொருள் கூறும் விதத்தில் சொல் பிரயோகம் இலக்கியங்களில் தோஷங்கள் ஆகும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, இம்மாதிரி பதப்ரயோகங்கள்தான் இந்தச் சிறு காவியத்தை "**ராக்ஷஸகாவிய**"மாகச் செய்துவிட்டன.

> **गोष्टश्च कुङ्कुमवपुः प्रतिराजतेऽसौ**
> **सप्त्यद्रिदैत्यभुजगोत्तमशत्रुगोपः ।**
> **उर्वीधराभमचिरोत्थितमम्बरं खे**
> **दृष्ट्वाहिहा प्रमुदितो हिमहाह्वयानः (ह्वयोऽसौ) ॥** १०

असौ प्रत्यक्षः सप्त्यः अश्वाः "हयसैन्धवसप्तयः" इत्यमरः । अद्रयः पर्वताः दैत्याः असुराः भुजगोत्तमाः सर्पोत्तमाः वृत्रासुरः अपि) तेषां शत्रुः इन्द्रः तस्य गोपः इन्द्रगोपः इत्यर्थः । सः विराजते शोभते । कथम्भूतः, गवि भूमौ तिष्ठति । सः पुनः कथंभूतः, कुङ्कुमेन सदृशं वपुः यस्य सः । तथा अहिं सर्पं हन्ति इति सः मयूरः प्रमुदितः हर्षयुक्तः बभूवेत्यध्याहारः ॥ किं कृत्वा - अम्बरं खं आश्रयत्वेन यस्य सः मेघः, त खे आकाशे दृष्ट्वा कथम्भूतं–उर्वीधराऽऽभं उर्वीधरः पर्वतः तद्वत् आभा - शोभा यस्य सः तम् ॥ पुनः कथंभूतं अचिरोत्थितं नवोत्थित । किं भूतः । अहिहा सर्पहा – हिमं हन्ति सः वह्निः । अग्निर्हिमस्य भेषजं इति स्मृतिः ॥ तस्य आह्वयनं नाम यस्य सः मयूरः शिखीत्यर्थः ॥

அன்பிற்குரியவளே, பூமியில் இந்த்ரகோபம் என்ற (குங்குமச்சிவப்பு) சிகப்பு நிறமுள்ள பூச்சிகள் மழைக் காலத்தில் தரையில் ஊர்வன. அவை எங்கிலும் நிறைந்திருக்கின்றன. (மழைக் காலத்தில் சிகப்புநிறப் பூச்சிகள் தரையில் ஊர்வது இயல்பு) மயில்களும் வானில் புது மேகத்தைக்கண்டு மகிழ்ச்சியுற்றவைகளாக விளங்குகின்றன.

இங்கு இந்த்ர கோப என்ற பூச்சியைக் குறிப்பிடுவதற்கு **सप्ति - अद्रि - दैत्य भुजगोत्तमशत्रु - गोपः** என்று சொல்லப்படுகிறது. **अहिहा - हिमहाह्वय** என்ற சொற்கள் மயிலைக் குறிப்பிடுகின்றவை. இவை காவ்ய தோஷகரமான சொற்கள் ஆகும்.

> **कृष्णाम्बरः क्षरति तोयमसावजस्रं**
> **अन्याविमौ रणगताविव वेभराजौ ।**
> **अन्ये त्वमी द्विरदवृन्दनिभाः क्षरन्तः**
> **प्रच्छादयन्त्यमरसिद्धविमानमार्गम् ॥** ११

असौ कृष्णं अम्बरं आश्रयत्वेन यस्य असौ कृष्ण + अम्बरः मेघः, नीलमेघ इत्यर्थः । अजस्रं निरन्तरं तोयं उदकं क्षरति स्रवति । अन्यौ इमौ प्रत्यक्षौ रणगतौ रणे वर्तमानौ इभराजौ इव गजश्रेष्ठाविव दृश्येते इति शेषः । अन्ये तु अमी प्रत्यक्षाः क्षरन्तः सन्तः अमराः देवाः सिद्धाश्च तेषां विमानमार्गं आच्छादयन्ति । कथम्भूताः द्विरदानां गजानां बृन्दं समूहः, तन्निभाः तत्सदृशाः ॥

எதிரே உள்ள இந்த கருத்த மேகம் இடைவிடாமல் நீரைப் பொழிகிறது. இந்த இரு மேகக்கூட்டங்கள் போர்க்களத்தில் நிற்கும் இரு யானைகள் போல் காணப்படுகின்றன. மற்ற மேகக் கூட்டங்கள் வானில் தம் விமானங்களில் செல்லும் தேவர்களின் சித்தர்களின் விமான மார்க்கத்தைத் தடை செய்கின்றன போல் காண்கின்றன.

वार्दाः खगाः क्षितिधरागमनप्रकाशा
नेमीभरासभतुरङ्गमतुल्यघोषाः ।
वाय्वीरिताः खमवतत्य वनं क्षरन्तो
वार्भिः क्षितिं घृतधराः परिनिर्वपन्ति ॥ १२

वाः उदकं ददति ते वार्दाः मेघाः वार्भिः जलैः क्षितिं परितः निर्वपन्ति सिञ्चन्ति । कथंभूताः खे आकाशे गच्छन्ति ते खगाः क्षितिधराः पर्वताः तेषां आसमन्तात् भावेन गमन तत्प्रकाशास्तत्तुल्याः । पुनः कथंभूताः, नेमिः रथस्य चक्रधारा, इभः गजः, रासभः खरः, तुरङ्गमोऽश्वः, तत्तुल्यः घोषः येषां ते । पुनः कथंभूताः वायुना ईरिताः प्रेरिताः पुनः कथंभूताः, खं अवतत्य व्याप्य जलं क्षरन्तः स्रवन्तः पुनः कथंभूताः, घृतं जलं धरन्तीति ते जलधराः इत्यर्थः ॥

மேகங்கள், வானில் செல்லும் மலைகள் போன்று தோற்றமளிக்கின்றவைகளாய் தேர்ச்சக்கரம், யானை, கழுதை, குதிரைகளின் ஒலிபோல் பல விதங்களில் முழக்கமிடுகின்றன. காற்றினால் தூண்டப்பட்ட நீருண்ட மேகங்கள் பூமி முழுவதும் நீரைச் சொரிகின்றன **वार्दाः खगाः घृतधराः वनं** ஆகிய சொற்கள் ச்லோகத்தின் பொருளை எளிதில் காண்பதற்கு உதவியாக இல்லை.

एषोऽङ्घ्रिपाशनरिपुप्रसुतारिसाह्व-
मारुह्य तिष्ठति सुगात्रि भुजङ्गमारिः ।
यस्य स्वनैः प्रमुदितस्य ममाद्य बाले(देहे)
तालध्वजावरजसूनुशराः पतन्ति ॥ १३

हे सुगात्रि, सुन्दराङ्गि, बाले, एषः भुजङ्गमारिः मयूरः, अङ्घ्रिभिः पिबन्ति ते वृक्षाः तान् अश्नाति अग्निः तस्य रिपुः उदकम् । तद् हन्ति असौ सूर्यः तस्य सूनुः कर्णः तस्य रिपुः अर्जुनः तस्य समा आह्वा यस्य सः अर्जुनवृक्षः तं आरुह्य तिष्ठति । एषः कः? यस्य स्वनैः अद्य प्रमुदितस्य मम तालध्वजस्य अवरजः कृष्णः तत्सूनुः कन्दर्पः तस्य शराः मार्गणाः । पतन्ति शरीरे इति शेषः ॥

ஏ மென்மையான அழகிய உடலையுடைய இளம் பெண்ணே. இந்த மயில் "அர்ஜுன" மரத்தில் ஏறியமர்ந்துள்ளது. இதன் ஒலி கேட்கும் என் உடலில் மன்மதனுடைய கணைகள் பாய்ந்து துன்புறுத்துகின்றன. என்று கூறுகிறாள். (இங்கு அர்ஜுன மரம் என்று பொருள் காண்பதற்குள் தலை சுற்றல் வந்துவிடும் போல் இருக்கிறது. अङ्घ्रिप மரம் अशन அதனை அழிக்கும் தீ, अरि அதன் பகை நீர், घ्न அதனை அழிப்பது சூரியன், सुत அவனுடைய குமாரன் கர்ணன், अरि அவனுடைய பகைவன் அர்ஜுனன் साह्व அவனுக்கு சமானமான பெயர்கொண்ட மரம் அர்ஜுன மரம். இங்கு மன்மதன் என்ற பொருளைக் காண்பதிலும் கடினம். ताल பனைமரம் ध्वज கொடியில் உள்ளவன் பலராமன். அவனுடைய अवरज உடன் பிறந்த தம்பி கிருஷ்ணன் सुत குமாரன். மன்மதன் பகவானுடைய குமாரன் என்று சொல்லப்படுகிறது.

उस्राविषं स्थलगतोऽत्ति तथैव वार्भ्यो
वार्जो द्विजः स्वपितृभीरुविषप्रहीणः ।
वाताशनः खशयनः स्मरति स्थलस्य
चक्षुःश्रवा वनभयात्सुरशत्रुनामा ॥ १४

हे सखि, वारि जातः वार्जः द्विजः कच्छपः, वार्भ्यः उदकेभ्यः स्थलगतः स्थलं उत्तीर्णः, सन्, उस्राः गावः, तासां विषं गोमयं अत्ति । अद भक्षणे । स्वपिता तस्य भीरुः स्त्री,—माता तस्याः विषः दुग्धं तेन प्रहीणः रहितः । तेषां उत्पत्त्यनन्तरं मातृदर्शनेनैव जीवनात् ॥ न दुग्धेन ॥ तथा वाताशनः सर्पः, स्थलस्य स्मरति कर्मणि षष्ठी, स्थलं ध्यायतीत्यर्थः । किम्भूतः! खे शयनः खे बिले शेतेऽसौ । तथा कस्मात् ध्यायति — वनं उदकं तस्य भयं तस्मात् । पुनः चक्षुःश्रवाः चक्षुरेव श्रोत्रं यस्य सः, पुनः सुरशत्रुनामा सुराणां शत्रुः वृत्रासुरः तस्य यत् नाम तत् यस्य सः अहिः इत्यर्थः ॥

ஏ தோழியே! அதோ ஒரு ஆமை நீரினின்றும் வெளியேறி தரைக்கு வந்து பசுவின் சாணத்தைத் தின்கிறது. ஏன் தெரியுமா! அது தன் தாயின்

பாலை அருந்த இயலாது. (ஆமைகள் பிறந்த பிறகு தாயின் அன்பு கலந்த பார்வையாலேயே வளருகின்றன. தாயின் பாலை அருந்தி வளர்வதில்லை) மேலும், அதோ ஒரு வளையில் (பொந்தில்) உள்ள பாம்பு தரையில் இறங்கி வருவதற்கு விரும்புகிறது. ஆனால் எங்கிலும் தண்ணீர் இருப்பதால் தரையில் இறங்கிவர பயப்படுகிறது. இங்கு தாய் என்ற பொருளைக் கூறும் சொல் स्वपितृभीरु தன் தந்தையிடம் பயப்படக்கூடிய பெண் தாயாகத்தானே இருக்க முடியும் என்பதால் அச்சொல்லிற்குத் தாய் என்று பொருள் கூறவேண்டும். ख என்ற சொல்லிற்கு 'வானம்' என்பதே பிரசித்தமான பொருள். ஆனால் இங்கு ख என்பதற்கு (மரம்) 'பொந்து' என்று பொருள். மேலும் वन भयात् நீரில் உள்ள பயததால். பாம்புக்கு இன்றும் ஒரு விசேஷணம் (Adjective) सुर शत्रु தேவர்களின் பகைவன் விருத்திராசுரன். அவனைக் குறிப்பிடும் சொல் अहि என்பதாகும். अहि என்றால் பாம்பு என்று பொருள்.

पक्ष्यश्वमेधतुरगप्रतिमोऽष्टवर्णो
वार्दं नवं त्विति समाह्वयति ह्यहिघ्नः ।
भेकस्तथैव खशयाशयवेद्यवाणिः
शब्दं करोत्यतिभृशं विषराशिमग्नः ॥ १५

पक्षी अहिघ्नः मयूरः, इति कारणात् वार्दं मेघं वनं समाह्वयते । किम्भूतः अश्वमेधसम्बन्धी तुरगः तेन प्रति(मा) समा आभा आकृतिः यस्य सः, अष्टौवर्णाः यस्य सः. इति । किं हि बहुवर्षतीत्यर्थः । हि पूरणे । तथा भेकः मण्डूकः विषराशिः उदकराशिः तस्मिन् मग्नः वसन् सन् अतिभृशं अत्यन्तं शब्दं करोति । किम्भूतः खे बिले शेतेऽसौ सर्पः, तस्य आशयः-स्थानं बिलं, तस्मिन् वेद्या । वाणी यस्य सः ॥

பெண்ணே! அதோ அந்த மயில் அச்வமேதக் குதிரைக்கு உரிய எட்டு அங்கங்களுடன் நிறங்களுடன் கூடிய மயில், மேகத்தை நோக்கி ஏன் இவ்வளவு கடுமையாக மழை நீரைப் பொழிகிறாய் என்று கேட்பது போல் அகவுகிறது. அதோ நீரில் மூழ்கி நிற்கும் தவளை மரப் பொந்தில் உள்ள பாம்பின் காதுகளுக்குக் கேட்பது போல உறக்க சப்தமிடுகிறது.

ना विष्टिरा वनमुपेत्य कुपातुसाह्व-
माक्रीडने मधुकलो तनयासमेतः ।
अन्यः स्वयं मणिवराभमुपेत्य गोजं
ना रामया सह पयःपतिजां वृणीते ॥ १६

हे सखि, पश्य, मधुना मद्येन कलः सुन्दरः, ना पुरुषः विष्टिराः पक्षिणः तेषां आवनं समूहः स विद्यते यस्मिन् सः । तं कुत्सिता माता अम्बा — यस्य तत्समा आह्वा यस्य सः, तं कदम्ब उपेत्य आगत्य—अतनयासमेतः न जातः तनयः तनया वा यस्याः । अतिमदनयुक्तेत्यर्थः । तया सहितः सन् आक्रीडते । अन्यः स्वयं मणिषु वराः श्रेष्ठाः इन्द्रनीलाः तद्वत् आभा यस्य तत् गोजं गवि भूमौ जातं तृणादिकं उपेत्य आगत्य ना पुरुषः रामया श्रिया सह पयसां पतिः समुद्रः, तस्मात् जाता तां लक्ष्मीं वृणीते अङ्गीकरोति ॥

தோழியே! (தற்காலத்தில் girl friend என்று வழங்கப்படும் முறை பண்டைக்காலத்திலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டதுதான்) அதோ பார். ஒரு ஆண் (பறவை) பல பறவைகள் அமர்ந்துள்ள கதம்ப மரத்தை அடைந்து ஒரு பெண் (பறவையுடன்)னுடன் விளையாடுகி(றான்)றது. அந்த ஆண் பறவை தேனை அருந்திவிட்டு (மது என்னும் சொல்லுக்கு தேன் என்றும் மயக்கம் தரும் திரவப் பொருள் என்றும் பொருள் உண்டு) அதன் காரணமாக சொல்லால் விளக்குவதற்கு முடியாத விதத்தில் அழகுறச் சப்தமிடுகிறது. அப்பெண் பறவை இதுவரை முட்டையிடாத பருவத்தில் உள்ளதாம். இன்னொரு ஆண் பறவை தன் இணைப்பறவையுடன் பச்சைப்பசேல் என்று ஜாதி நீலக்கல் போல் ஒளிபெற்று விளங்கும் புல் தரையில் அமர்ந்துள்ளது எத்தனை அழகாக இருக்கிறது பார். இங்கு **ना विष्टिर आवनं कुमातृसाह्व अतनयासमेत गोज** என்ற சொற்கள் எளிதில் பொருள் கொள்ள இயலாதவை.

स्यूतं महत् क्षतजवर्णनिभं वरोऽसौ
बर्भर्ति(र्त्य)अमूनि च भिनत्ति सरोरुहाणि ।
तज्जेन वापि रजसा वनितां वयस्थो-
ऽप्यभ्युद्धरत्यवकिरत्यभिषिच्यमानः ॥ १७

असौ वरः पुमान् महत्, क्षतजवर्णनिभं महाक्षतात् जातं रक्तं तस्य यो वर्णः तत्सदृशं आरक्तं वस्त्रं बर्भर्ति च बिभर्ति । पुनः अमूनि सरोरुहाणि कमलानि, भिनत्ति लुनाति । पुनः वयस्थः युवा वनितां स्त्रीं तज्जेन कमलजेन रजसा अभि समन्तात् उद्धरति अवकिरति च क्षिपति च ॥ कथं भूतः, अभिषिच्यमानः वनितया क्रीडारसेनेति शेषः ॥

ஏ பெண்ணே! அதோ பார். ஒரு ஆண் (பறவை) வெட்டுக்காயத்திலிருந்து பெருகும் இரத்தம் போன்ற ஆடையை அணிந்திருக்கிறான்(றது). அவன் (அது)

அத்துடன் இருந்துவிடவில்லை. அதோ அந்தச் செந்தாமரைகள் மலருந் தறுவாயில் உள்ளன அல்லவா! அவற்றின் மேல் புறமுள்ள இதழ்களை விலக்குகிறான்.(றது) விலக்கிவிட்டு அத் தாமரை மலரின் உட்புறத்தில் இருக்கும் மகரந்தப் பொடிகளை அப்பெண் (பறவை) மீது தூவுகிறான்.(கிறது) தாமும் அந்த முயற்சியில் மகரந்தப் பொடியால் நனைந்து விடுகிறான்(றது). ஆண் பெண் (பறவை)கள் கலந்து உறவாடி விளையாடும் இந்தக் காட்சி எத்தனை அழகாக இருக்கிறது பார்! இதில் स्यूत बर्मित என்ற சொற்களின் பொருள்கள் எளிதில் விளங்குவன அல்ல.

पङ्के निमग्नमिभवृन्दमदः भवारि
गर्जत्तिमी(मि)क्षयदवृन्दमिवावभाति ।
वार्यात्मनः शतविचित्रतनुः सुपर्णो
योषिद्वृतः समदनः प्रतिरोरवीति ॥ १८

हे वनिते, अदः इभवृन्दं गजसमूहः पङ्के निमग्नं सत् तिमीनां मीनानां क्षयं नाशं ददति मेघाः, तेषां वृन्दमिव अवभाति । किम्भूतं गजवृन्दं मेघवृन्दं च सवारि समदं सोदकं चेत्यर्थः । गर्जत् सशब्दं अथवा अदः मेघवृन्दं पङ्के निमग्नं इभवृन्दं इव, अवभातीत्यर्थः ।

अयं मदनेन सहितः, समदनः, योषिद्भिः, मयूरीभिः, वृतः युक्तः सुष्ठु पर्णानि पक्षा यस्य सः मयूरः तिमिक्षयदवृन्दं मेघसमूहं प्रति रोरवीति प्रतिशब्दं करोति कथं भूतः वार्यात्मनः चन्द्रस्य शतकं तेन विचित्रतनुः चित्रशरीरः ॥

ஏ தோழியே! (பெண்ணே) அதோ பார். கர்ஜனை செய்யும் सवारि — மதம் பிடித்த யானைக்கூட்டம். அவை இயல்பாகவே கருநிறம் கொண்டவை. அவைகள் சேற்றிலும் புறண்டு மூழ்கி எழுந்தவையாதலின் மேலும் கருநிறம் பெற்று மேகக்குவியல் போல் காட்சியளிக்கிறது. அல்லது அந்த மேகக் குவியல், सवारि நீருடன் விளங்குவது. இடிமுழக்கம் செய்கிறது. அது சேற்றில் புறண்டு கர்ஜனை புரியும் மதஜலத்துடன் விளங்கும் அதோ அந்த யானைக் கூட்டம்போல் விளங்குகிறது. மேலும் அதோ பார்! அந்த ஆண் மயில், பெண் மயில்களுடன் கூடியிருந்து, இடிமுழக்கமிடும் மேகத்தைக் கண்டுவிட்டுத்தாமும் எதிர்முழக்கம் செய்கிறது. அந்த ஆண்மயில் காதல் உணர்வுடன் பெண் மயில்களுடன் கலந்து விளையாடுகிறதே, அது பிறைச்சந்திரன் போன்ற பல வடிவங்களைத் தன்னுடைய தோகையில் கொண்டு மிக அழகாக விளங்கு கிறது. இதில் सवारि நீருடன் கூடிய—மதஜலத்துடன் கூடிய तिमिक्षयदवृन्द वार्यात्मन्

समदन என்ற சொற்கள் எளிதில் பொருள் விளங்காதவை. **सुपर्ण** என்ற சொல் பலம் மிகுந்த இறக்கைகளைக் கொண்ட கருடனைக் குறிக்கும். இச்சொல் இவ்விடத்தில் அழகான தோகையிறகுகளைக் கொண்ட மயில் என்ற பொருளில் வந்துள்ளது.

विस्फोटिताम्बररवेण रिरंसुरेव
सन्त्रासितो हरिरनोकहनिष्कुटीषु ।
संलीयते ह्ययभिमुखीं तडितं च दृष्ट्वा
खात् खं महत्तरमसौ समनुप्रविष्टः ॥ १९

हे वनिते, असौ हरिः सिंहः विस्फोटिताम्बररवेण अम्बरसम्बन्धी अम्बरः मेघः तस्य रवः शब्दः विस्फोटितश्चासौ अम्बररवश्चेति समासः । विस्फोटितः अत्युच्चतया इत्यर्थः । तेन सन्त्रासितः सन् अनोकहाः वृक्षाः तेषां निष्कुटीषु निकुञ्जेषु संलीयते । पुनः रिरंसुः रन्तुमिच्छुः भयभीत एव अभिमुखीं तडितं विद्युतं दृष्ट्वा खात् बिलात् महत्तरं खं महागुहां सम्यक् अनुप्रविष्टः त्वं पश्येति समुदायार्थः ।

இந்த ச்லோகத்தில் பொருள் காண்பதில் அதிகம் சிரமம் ஏற்பட வில்லை ஏ பெண்ணே! அதோ அந்த ஆண் சிங்கம் பெண் சிங்கத்துடன் இன்பம் துய்க்க விரும்பிய நிலையில் கடுமையான இடி முழக்கம் காரணமாக பயந்து போய் பெரியதாக வளர்ந்துள்ள செடிகளிடையே (புதர்களிடையே) ஒளிந்து கொண்டது. ஆனால் எதிர்புறத்தில் வீசும் மின்னலைக் கண்டு மேலும் கருமையான இடி முழக்கம் ஏற்பட இருப்பதை எண்ணி மேலும் பயந்து ஒரு குகையில் நுழைந்து. பிறகு அதையும் தவிர்த்துவிட்டு பெரிய குகை யினுள் நுழைந்தது(கிறது) பார் என்று அந்த ஆண்மகன் கூறினான்.

இந்த ச்லோகத்தில் **अम्बर खात् खं महत्तरं** என்பதில்தான் பொருள்கொள்ள சிரமம் ஏற்படுகிறது. **अम्बर** என்பதற்கு வானம் என்பதுதான் நேர்ப்பொருள் இங்கு வானில் உள்ள மேகம் எனப் பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. "ஊர் சிரிக்கிறது" என்ற சொற்றொடரில் ஊர் எனும் சொல் ஊரில் உள்ள மக்களைக் குறிப்பது போல் இங்கு **अम्बर** வானம் எனும் சொல் வானில் உள்ள மேகத்தைக் குறிப்பிடுகிறது. சிரிக்கும் இயல்பு மக்களுக்குத் தான் உண்டு. அசேதனமான வீடுகளுக்கு அல்ல. அதுபோல் முழங்கும் இயல்பு, மேகத்திற் கேயன்றி வானத்திற்கல்ல. லக்ஷணா விருத்தியால் இங்கு வானம் எனும் சொல் வானத்தில் உள்ள மேகத்தைக் குறிப்பிடுவதாகிறது. **खात् खं ख** என்னும் சொல் வானத்தைக் குறிப்பிடுவதாகும். **खायते खन्यते इति खं** தோண்டப்படுவதால் குகை எனும் பொருளும் உண்டு.

एतावदुत्तमवचः सुमनाः स उक्त्वा
रन्त्वा दिनं सह तया प्रियया ह्यदीनः ।
युक्तं चतुर्भिरनडुद्भिरदीनवद्भि-
रारुह्य यानमथ स प्रययौ स्वगेहम् ॥ २०

अथ अनन्तरं स पुरुषः अदीनवद्भिः सन्तुष्टैः अनडुद्भिः वृषभैः चतुर्भिःयुक्तं यानं आरुह्य स्वगेहं प्रययौ ॥ कथंभूतः अदीनः अतिसन्तुष्टः । किं कृत्वा एतावत् उत्तमं वचः उक्त्वा ॥ पुनः किं कृत्वा तया सह दिनं रन्त्वा क्रीडयित्वा (क्रीडित्वा) । कथंभूतः सुमनाः सुष्टु मनः यस्य असौ ॥

॥ इति श्रीकालिदासकृतौ राक्षसकाव्यं संव्याख्यानं सम्पूर्णम् ॥

அந்த இளைஞன் தன் அன்பிற்குரிய பெண்ணிடம் இவ்வாறெல்லாம் கூறி அன்றையப்பொழுதை அப்பெண்ணுடன் இன்பமுடன் செலவிட்டுவிட்டு நான்கு காளை மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில் அமர்ந்து தன் வீடு சென்றான். என்பதுடன் இந்த ராக்ஷஸ காவியம் நிறைவு பெறுகிறது.

காவியங்கள் இம்மாதிரி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணங்கள் உண்டு. சொல்லழகு, பொருளலங்காரம், சொல்-பொருள் குற்றமில்லாத உரைநடை வடிவான அல்லது செய்யுள்நடை வடிவான கவிஞனின் படைப்பு காவியம் எனப்படும்.

இலக்கியத்தின் தரத்தைக் குறைக்கக் கூடியவையாக சில தோஷங்களும் கூறப்பட்டுள்ளன. பெரும்பாலும் கவிஞர்கள் உபயோகிக்காத சொற்கள், நிறைந்த நேர்ப் பொருளைத் தராத வீணான கடின முயற்சியின் பேரில் பொருள் காணும் விதத்தில் உள்ள சொற்களை அமைத்தல், சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாக இல்லாத கடினமான சொற்களைப் பயன்படுத்துதல், ஒரு சொல்லின் தொடர்பை இன்னொரு சொல்லுடன் கஷ்டப்பட்டு காண வேண்டிய நிலையில் சொற்களை அமைத்தல் போன்றவை காவிய தோஷங்களாகக் கூறப்படுகின்றன.

ராக்ஷஸ காவியத்தில் இந்த தோஷங்கள் அதிகம் உண்டு. எனவே ராக்ஷஸ காவியம் குற்றமுற்ற காவியத்திற்கு ஒரு சான்றாகத் திகழ்கின்றது.

உயர்வான காவியத்திற்குச் சில "குணங்கள்" இருக்கவேண்டியதாக வலியுறுத்தப்படுகின்றன. ஒரு சொல் இன்னொரு சொல்லுடன் அழகுற இயல்பாக இணைந்துவருவது "ச்லேஷ" என்ற சப்த குணமாகும். பிரசித்தமான பொருளைத் தரும் சொற்களைப் பயன்படுத்துதல் 'ப்ரஸாதம்' என்ற

குணமாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு 24 குணங்கள் சிறப்பான காவியத்திற்கு உயர்வையளிக்கும் என்று இலக்கியம் பற்றிய இலக்கணங்கள் வகுத்துள்ள காவியாதர்சம், பிரதாபருத்ரீயம் முதலான ஸம்ஸ்க்ருத நூல்கள் பலவுண்டு.

காளிதாஸனின் காவியங்கள் ரகுவம்சம் தொடங்கி, சாகுந்தலம் ஈறாக உள்ள நூல்கள் யாவும் மஹாகாவ்யமெனக் கூறப்பட அக்கவி, சொற்களைக் கையாண்டமுறை. எண்ணி எண்ணிப்பார்த்துச் சுவைக்கும் பொருளை உணர்த்தும்முறை — காவியச் சுவைகளில் சிருங்காரச் சுவையை — ஆபாஸ உணர்வு ஏற்படாத விதத்தில் எக்காலத்திற்கும் பொருத்தமாகும் விதத்தில் பொருத்தம் மிகுந்த உவமைகளைக் கூறி உணர்த்தும்முறை ஆகியவையே ஆகும்.

காளிதாஸன் பற்றிய ஒரு பழமையான கருத்து உண்டு.

காவ்யேஷு நாடகம் ரம்யம்
தத்ராபி ச சகுந்தலா ।
தத்ராபி சதுர்த்தோऽங்கஸ்ச்ச
தத்ர ச்லோக சதுஷ்டயம் ।
தத்ராபி யாஸ்யத்யத்யேதி
ச்லோகஸ்ஸர்வமனோஹர: ॥

என்று. காளிதாஸனின் [illegible] – கேட்டு இன்புறும் "இலக்கியங்களைவிட" நாடகங்கள் உயர்ந்தவை. அவற்றுள் சாகுந்தலம் (அபிக்ஞான சாகுந்தலம்) சிறப்புடையது. அதிலும் 4வது அங்கம் (Chapter) மிகவும் உயர்வானது. அதிலும் "यास्यत्यद्य शकुन्तलेति" என்ற ச்லோகம் எல்லாவற்றிலும் உயர்வானது என்பது இதன் பொருள்,

மேகஸந்தேசத்தில் யக்ஷன் தன் காதலிக்கு மேகத்தின் வழியாக என்ன செய்தி அனுப்பினான் என்று நூலில் புகுந்து பார்ப்போமாகில், மூன்றே மூன்று ச்லோகங்களில் உள்ள கருத்துக்களைத்தான் செய்தியாக அனுப்புகிறதாகக் கூறப்பட்டுள்ளது. அவைகளை ரஸிக மனம் படைத்தவர் — கேட்க ஆர்வமுள்ள வரிடையில் அமைதியான சூழலில் ஒரு நல்ல ரசிகர் கூறக்கேட்க வேண்டும்.

त्वां आलिख्य प्रणयकुपितां धातुरागैः शिलायां
आत्मानं ते चरणपतितं यावदिच्छामि कर्तुम् ।
अस्रैस्तावन्मुहुरुपचितैः दृष्टिरालि(लु)प्यते मे
क्रूरस्तस्मिन्नपि न सहते सङ्गमं नौ कृतान्तः ॥

சுருக்கவுரை — யக்ஷன் கூறுகிறான்: அன்பே! விதிவசத்தால் நாம் பிரிந்திருக்கலாயிற்றே. உனது உருவத்தை வரைந்து, [அதாவது காதல் தொடர்பாக, பொய் கோபத்துடன் நீ இருப்பதாகவும், நான் உன்னைச் சமாதானப்படுத்துவதாகவும்—] நான் உன் உருவத்தை பலையில் உள்ள செங்கல்லால் வரைந்து, உன் பாதங்களில் நான், என் தலையை வைத்து உன்னை சமாதானம் செய்வதாகவும் பாவனையாக ஒரு சித்திரம் எழுத முற்படுகிறேன். இந்த வகையிலாவது உன்னை நான் நெருங்க, உன் சம்பந்தம் பெறவிரும்பி சித்திரம் எழுத ஆரம்பித்தால் என் கண்கள் உணர்ச்சி மிகுதியால் குளமாகிவிடுகின்றன. கண் பார்வை தெரிந்தாலல்லா மேலும் சித்திரம் எழுதி நிறைவு செய்யமுடியும். எனவே இம்மாதிரியான முறையிலும்கூட உன்னுடைய சம்பந்தத்தை நான் பெற பாழும் தெய்வத்திற்குப் பொறுக்கவில்லை.

मां आकाशप्रणिहितभुजं निर्दयाश्लेषहेतोः
लब्धायास्ते कथमपि मया स्वप्नसन्दर्शनेषु ।
पश्यन्तीनां न खलु बहुशो न स्थलीदेवतानां
मुक्तास्थूलास्तरुकिसलयेष्वश्रुलेशाः पतन्ति ॥

ஹே மேகமே! நீ அலகாபுரி சென்று என் காதலியிடம் இதனைக் கூறுவாயாக. அன்பிற்குரியவளே! உன்னைப் பிரிய நேரிட்ட நாள் முதலாகத் தூக்கம் என்னை விட்டுச் சென்றுவிட்டது. ஆனால் எப்பொழுதாவது, என்றைக்காவது ஓய்ச்சல் ஏற்பட்டு கண்களை மூடினால் கனவில் நீ வந்து விடுகிறாய். வெகுநாள் கழித்து சந்தித்த உன்னை இறுக்கமாக — துளியும் இரக்கமில்லாமல் — இறுக்கி அணைத்துக்கொள்வது உனக்குத் துயரத்தைத் தருமே என்று கூட சிந்திக்காமல் — என் மனம் நிறைந்த பிரிவாற்றாமையை வெளிப்படுத்தும் முகமாக — உன்னை இறுக்கமாக அணைத்துக்கொள்ள வேண்டும் என்ற வேகத்தில் கனவில் வந்த — உன்னை நேரிலேயே வந்துவிட்ட தாக எண்ணி அணைப்பதற்காக என் இரு கைகளையும் நீட்டுவதுண்டு. உண்மையில் நீ எங்கோ இருப்பதால் நீட்டப்பட்ட என் கைகளிடையே ஏதும் இருக்காது. இந்த என் நிலையை உணர்ந்த வனதேவதைகள் அந்தோ!

பரிதாபம். காதல் வயப்பட்ட இந்த யக்ஷன், தன் காதலிதான் உண்மையில் எதிரில் வந்துவிட்டாளோ என்ற எண்ணத்தில், காதல் வேட்கை மிகுதியால் கைகளை வெற்றிடத்தில் வானில் நீட்டுகிறானே ! என்று எனது நிலையை நினைத்துக் கண்ணீர் வடிக்கின்றன. இது அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சி என்று சொல்வாயாக. (மலைச்சாரலில் மழை நீர்த்துளிகள் முத்துக்கள் போல் இலைகள் மீது விழுந்து, அதிலிருந்து சொட்டு சொட்டாகத் தரையில் விழுமல்லவா. அவ்வாறு இலைகள் மீது விழும் நீர்த்துளிகளை வனதேவதைகள்தான் யக்ஷனின் நிலைகண்டு பரிதாபத்தால் கண்ணீர் விடுவதாக உத்ப்ரேக்ஷையாக கூறுகிறான்.

भित्वा सद्यः किसलयपुटान् देवदारुद्रुमाणां
ये तत्क्षीरस्रुतिसुरभयो दक्षिणेन प्रवृचा: ।
आलिङ्ग्यन्ते गुणवति मया ते तुषाराद्रिवाताः
पूर्वं स्पृष्टं यदि किल भेवत् अङ्गमेभिस्तवेति ॥

ஹே மேகமே, நீ அலகாபுரி செல்லும்பொழுது இடிமுழக்கம் ஏதும் செய்துவிடாதே. ஏனெனில், என் மனதிற்கு இனியவள், என்போலவே தூக்கமில்லாமல் அவதிப்பட்டு அசதி மிகுதியால் கண்ணை மூடிக்கொண்டு சற்றே தூங்க முயற்சித்திருப்பாள். அச்சமயம் அவளுடைய கனவில் நான் அவளுடன் இணைந்திருப்பேன். கனவிலாவது இணையும்நிலை ஏற்பட்டு இருக்கும் நிலையில் நீ இடிமுழக்கம் செய்தால் அவளுடைய தூக்கம் கலைந்து விடும். அந்தப் பாபத்திற்கு நீ ஆளாகாதே. அவள் விழித்திருக்கும்பொழுது உனது சகோதரனாகிய எனது காதலியிடம் (இங்கும் ஒரு நுணுக்கமான செய்தியைக் கவி புகுத்தியிருக்கிறான். அதாவது, நீ சந்திக்கப்போவது காதலனைப் பிரிந்து வாழும் ஒரு இளம்பெண்ணையல்லவா? காதலன்தான் அருகில் இல்லையே என்ற எண்ணத்தில் அவளிடம் அதிகம் நெருங்கிவிடாதே தவறான எண்ணத்தில் நெருங்கும் எண்ணம் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே நீ பார்க்கப்போவது உன் சகோதரனுடைய மனைவி. சகோதரனுடைய மனையாளை வயதில் மூத்தவளை தாய்போல் எண்ணவேண்டும் என்பது நமது மரபு என்பதை நேரிடையாகக் கூறாமல் மறைமுகமாக, நீ அங்கு உன் சகோதரனின் மனைவியைப் பார்ப்பாய். பார்த்து) இதனைச் சொல்.

இமயமலைச்சாரலிலிருந்து கிளம்பும் காற்று தெற்கு நோக்கி வரும்பொழுது அதன் சிறு அசைவையும் தாங்கமாட்டாத தேவதாரு மரங்களின் இளம் துளிர்கள் ஒடிந்து விழுந்துவிடும். அச்சமயம் அக்கிளைகளிலிருந்து

பெருகும் தேவதாரு மரத்தின் நறுமணம் மிகுந்த பாலின் நறுமணத்துடன் தென்திசை நோக்கி காற்று வீசும் பொழுதெல்லாம் நான் இமயத்தின் அக் காற்றினை என் இரு கைகளாலும் அணைத்துக் கொள்கிறேன் ஏன் தெரியுமா ? அங்கிருந்து கிளம்பும் காற்று அருகில் அலகாபுரியில் உள்ள உன்மீதும் படர்ந்திருக்கலாமே என்ற ஆசையில் உன்மீது படர்ந்த காற்றை அணைத்துக் கொள்வதால் உன்னை அணைத்துக்கொண்ட சிறு மகிழ்ச்சி ஏற்படும். இந்த நிலையில் நான் இருப்பதாக அவளிடம் கூறுவாயாக என்று காளிதாஸனின் மேகஸந்தேசத்தில் உள்ள சில ச்லோகங்களையும் அதில் கூறப்பட்ட சில கருத்துக்களையும் இங்கு கூறியிருப்பது அவ்விரு காவியங்களின் தரம் எப்படிப் பட்டது என்பதனை இலக்கியப்பற்றுடையோர் அறிவதற்கே. ராமாயணத்தில் ராமன் **वाहि वात यत: कान्ता तां स्पृष्ट्वा मामपि स्पृश** என்ற கருத்தே இதில் கூறப்படுகிறது.

ஒரு காவியம் எவ்வாறு இருக்கலாகாது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்ததுதான் ராக்ஷஸ காவியம் எனவும், ஒரு காவியம் எப்படியெல்லாம்— தேன்ஆடை போல் உள்ளும் புறமும் சுவை மிகுந்ததாகவும் அருவருப்பான கருத்தை ஏற்படுத்திவிடாதவாறும், எண்ணி எண்ணிச் சுவைக்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளதே மேகஸந்தேசம் முதலான காவியங்கள் எனவும் கூறலாம்.

இந்நூலின் அடியொற்றி :—

B. 4781 / D. 3836 எண்ணுள்ள **"ராக்ஷஸ காவியம்"** என்னும் பெயருடன் உள்ள சுவடியின் கடைசியில் ஒரு ச்லோகம் பின்வருமாறு காணப் படுகிறது. ஆனால் அதன் பொருள் இந்த "ராக்ஷஸ காவிய"த்தில் கூறப்பட்ட பொருளை அனுசரித்ததாகவுள்ளதாகச் சுற்றி வளைத்துக்கூறி சமரஸப்படுத் தலாமேயன்றி அக்காவியத்திற்குத் தொடர்புடையதாகக் கூறமுடியவில்லை "ராக்ஷஸ காவியம்" முடிவுற்றது என்று எழுதப்பட்டு, அதற்குமேல் இந்த ச்லோகம் எழுதப்பட்டுள்ளது. சுவைப்பதற்கு உரியதாகவும் உள்ளது.

இந்த ராக்ஷஸ காவியம் போன்றே முற்காலத்திய ஸம்ஸ்க்ருத கவிகள் தமது அறிவாற்றலை வெளிப்படுத்தும் முகமாகக் கடினமான சொற்களைக் கொண்டு உரையின் துணையின்றிப் பொருள் காணமுடியாதவாறு சிறுசிறு காவியங்களை இயற்றியிருக்கிறார்கள் இக்காவியத்தின் அடிபொற்றியதாக **"ராதாவிநோத காவியம்"** எனும் சிறு நூல் (20 ச்லோகங்களை மட்டும் கொண்டது). இந்த ராக்ஷஸ காவியத்தைவிடவும் கடினமான சொற்களை—பல பொருள் உள்ள சொற்களைக் கொண்டதாக இருப்பதால் இந்தச் சிறு நூலில் அக்காவியத்தி லிருந்தும் எடுத்துக்காட்டாக ஒரு செய்யுளை இங்கு கூற விழைகிறேன்.

ராக்ஷஸ காவியத்தின் B. 4781 / D. 3836 எண்ணுள்ள சுவடியில் கடைசியில் உள்ள ச்லோகம் :

विरमति कथनं विना न खेदः
सति कथने समुपैति का च लज्जा
इति कलहमधोमुखी सखीभ्यो
लपितुमनालपितुं समाचकाङ्क्ष ॥

ஒரு நாயகி, இளம்பெண், முன் இரவில் தன் நாயகனுடன் இருந்த பொழுது அவர்கள் இருவருக்குமிடையில் தனிமையில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி இதில் ஏதும் கூறப்படவில்லையானாலும் "ஏதோ" அவ்விருவருக் கிடையில் நடந்திருக்கிறது—அது இன்பமளிப்பதாகவும் துயரம் அளிப்பதாகவும் இருந்திருக்கிறது - அது பற்றிய இனிய உணர்வு அந்த இளம் பெண்ணின் மனதில் இரவில் துய்க்கப்பெற்ற இன்ப நினைவுடனும் பொங்கும் காதலுணர் வுடன் இருப்பினும், கூச்சம் மாறாத இயல்புள்ளவளாக—காதலுணர்வை மீறிய வெட்கம் (கூச்சம்) உள்ள நிலையில் இருந்ததால் முதல் இரவில் தனிமையில் 'அவர் (நாயகன்) நடந்துகொண்டமுறை பற்றி மறுநாள் தம் தோழிகள் அவளிடம் வற்புறுத்திக் கேட்கும்பொழுது அவ்விளம்பெண் (मुग्धा नायिका) சங்கோசம் (வெட்கம்) காரணமாகச் சொல்லத் தயங்குகிறாள். நேற்று இரவு "அவர்" என்னிடம் நடந்துகொண்ட விதம் இன்பமானதாகவும், துயரமளிப்ப

தாகவும் இருந்ததே. அந்த "இன்பத்தொல்லை" பற்றி வெளியில் யாரிடமாவது சொல்லாவிட்டால் மனம் ஆறாது போல தோன்றுகிறது. அவர் என்னிடம் நடந்து கொண்டது போல்தான் எல்லோரும் நடந்துகொள்வார்களா! அல்லது அது நான் மட்டும் பெற்ற அனுபவமா? அதுபற்றி யாரிடமாவது சொல்லத்தான் மனம் துடிக்கிறது. அப்படியானால் தோழிகள் தான் கேட்கத் தயாராக நடந்த நிகழ்ச்சிகள் பற்றி அறிய ஆவலுடன் துருவித் துருவிக் கேட்கிறார்களே, சொல்ல வேண்டியதுதானே! என்றால் என்னிடம் அவர் நடந்துகொண்டது பற்றி வெளியில் சொல்வது எப்படி? வெட்கம் பிடுங்கித் தின்கிறதே! அவர் முன்னிரவில் என்னிடம் என்னென்வோ விதவிதமான சில்மிஷங்கள் செய்தாரே! அதனை மறுத்து நான் எப்படியெப்படியெல்லாமோ நடந்துகொண்டேனே! அந்த இன்ப கலஹ நிகழ்ச்சிகளையெல்லாம் வெளியில் நான் எப்படிச் சொல்வது! என்று தலைகுனிந்தவண்ணம் சிந்தனை செய்தவாறு அவ்விளம்பெண் தன் தோழிகளிடம் சொல்லவும் விரும்பினாள். சொல்லாமல் இருக்கவும் விரும்பினாள். **लपितुं** (சொல்வதற்கும்) **आचकाङ्क्ष** (விரும்பினாள்) சொல்லத்தான் விரும்பினாள். **अनालपितुं** (च) **आचकाङ्क्ष** சொல்லாமலிருந்துவிடவும் விரும்பினாள். பிறகு தோழிகள் அவள் வாயிலாகவே நடந்தனபற்றிக் கூறக் கேட்க விரும்பி சொல்லுமாறு வற்புறுத்தியதால் அவ்விளம் பெண் வெட்கத்தால் முகம் கவிழ்ந்தபடியே சொல்ல விரும்பியவளாக இருந்தாள். நடந்தவை பற்றிக் கூறிவிடவே விரும்பினாள். **लपितुमनाः** சொல்ல எண்ணம் கொண்டவளாக (இருந்தாள்) **लपितुं** சொல்வதற்கு **समाचकाङ्क्ष** விரும்பினாள். இந்த ச்லோகத்தில் நான்காவது வரியில் **लपितुमनालपितुम्** (லபிதுமனாலபிதும்) என்ற சொல்லை இருவிதமாகப் பிரிக்கலாம். **लपितुम्** + **अनालपितुम्** (லபிதும் + அனாலபிதும்) என்றும் **लपितुमनाः** + **लपितुम्** (லபிதுமனா: + லபிதும்) என்றும் பிரிக்கலாம். இரண்டு விதமாகப் பிரிப்பதால் பொருளும் மாறுபடுகிறது.

இவ்வாறு பல கவிகள் பல பொருள்கள் உள்ள சொற்களைக் கொண்டும், சொல்லைப் பலவாறாக இலக்கண விதிகளுக்கு உட்பட்டே பிரித்துப் பொருள் காணவேண்டிய விதத்தில் பதங்களை அமைத்தும் சிறு சிறு இலக்கியங்களைத் தம் பாண்டித்யத்தை—கவிதை இயற்றும் திறமையை வெளிப்படுத்தும் முகமாக இயற்றியுள்ளனர். அவ்வகையிலான சிறு இலக்கியம் தான் 20 சுலோகங்கள் அடங்கிய "ராதாவினோத காவியம்" என்பதும் ஆகும்.

மூலகாவியத்தில் இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தரப்படவில்லை. இந்நூலின் பொருளை அறிவது மிகமிகக் கடினமாகவுள்ளது. உரையின் துணையின்றி ச்லோகங்களின் கருத்தை உணர இயலாது என்பதால் நூல் ஆசிரியரே உரை எழுதியுள்ளாரோ என்று எண்ணச்செய்கிறது. உரையாசிரியர் "ராமசந்திர" என்ற பெயருள்ளவர் என்பதாக உரை நூலில் காணப்படுகிறது. ɔ48 / 3841 எண்ணுள்ள இந்நூலின் ஒரு ச்லோகம் தமிழ் உரையுடன் பதிப்பிக்கலாகிறது.

இந்த "ராதா விநோத காவியம்" என்ற 20 ச்லோகங்கள் கொண்ட சிறிய நூல், இந்த ராகஷஸ காவியம் வகையினைச் சேர்ந்ததாகவே கூறலாம். நமது சரசுவதி மஹால் நூலகத்தில் J. L. எண். 548, D. எண். 3841, S 14 எனும் எண் உள்ள இச்சிறிய நூல் சிறிய சந்தத்தில் அமைந்தாலும், அவற்றில் உள்ள சொற்கள் பல பொருட்களை உடையவையாதலின் எளிதில் பொருள் கொள்ள இயலவில்லை. ஒரே சொல் திரும்பத் திரும்ப வருவதுபோல் தோன்றினாலும் அச்சொற்கள் வெவ்வேறு பொருள்களை உடையன.

मालीनो घनमाली
मालीनो बलमाली ।
मालीनो वनमाली
मालीनोऽवतु माली ॥

மாலீனோ கனமாலீ, மாலீனோ பலமாலீ ।
மாலீனோ வனமாலீ. மாலீனோऽவது மாலீ ॥

वनमाली துளஸீ மாலை தரித்துள்ள திருமால் (**नो**) **नः** நம்மை **अवतु** காப்பாற்றுவாராக. திருமால் (கிருஷ்ணன்) எப்படிப்பட்டவர் என்பது — பல விசேஷண வாசக (Adjectives)ச் சொற்களால் விரித்துரைக்கப்படுகிறது. திருமால் **घनमाली** மேகம் போன்று சற்றே கருமை படர்ந்த திருமேனியையுடையவராவர், மேலும் **बलमाली** பலராமனுடன் இணைந்திருப்பவராம். 'பல' எனும் சொல் பலராமனைக் குறிப்பதுபோல் திறமை, சாமர்த்தியம் என்ற பொருளையும் உணர்த்தும். ஆதலின் மிகுந்த திறமையுடன் — பலத்துடன் கூடியவர். மேலும், அவர் **मालीन:** 'மா' என்பதற்கு லக்ஷ்மீதேவீ என்று பொருள். லக்ஷ்மியிடம் உறைந்திருப்பவர். காதல் உணர்வு மிகுதியால் நெருக்கமாக இணைந்து இருப்பவர். லக்ஷ்மீயுடன் தன்மயமானவர். லக்ஷ்மீ வேறு, திருமால் வேறு என்று பிரித்துணரமுடியாதவாறு இரண்டறக் கலந்துறைபவர். மேலும் **मालीन:** 'ம' என்ற குறிலுடன் உள்ள சொல் சிவபெருமானைக் குறிப்பிடுவதாகும். எனவே **म+आलीन:** சிவபெருமானுடன் இரண்டாகப் பிரித்து அறிய—காண— இயலாதவாறு இணைந்துறைபவர். எனவே சிவபெருமான் வேறு, திருமால் வேறு என்று பிரித்துணரமுடியாதவாறு இணைந்து உறைபவராம். மேலும் **म** என்ற சொல் பிரம்மனையும் குறிப்பிடும் என்பதால் **म+अलि+इनः** ப்ரம்மதேவன் எனும் வண்டு அரசனையுடையவராம். திருமாலின் தொப்பூழ்த்தாமரையில் உறையும் பிரம்மதேவனை உடையவர் என்று பொருள். மேலும் **मालिन्** என்ற சொல் தேவர்களைக் குறிப்பிடும் சொல்லாகவும், "சான்றோர்" என்ற பொருளைக் குறிப்பிடும் சொல்லாகவும் உள்ளது. எனவே தேவர்கள் தலைவன் — சான்றோர்களுக்குச் சூரியன் போன்றவர். சான்றோர்களாகிய

தாமரைகளை மலரச் செய்யும் சூரியனாம். மேலும் **மாலி** மலர் மாலையணிந்து விளங்குபவர்.

இது மாத்திரமின்றி திருமாலின் பத்து வகை அவதாரங்களும் இச்சொற்களால் குறிப்பிடப்படுகின்றன :—

வனமாலீ — "வன" எனும் சொல் நீரையும் குறிக்கும். எனவே வனத்தில் நீரில் உரைபவர். மத்ஸ்ய அவதாரம் இதனால் உணர்த்தப்படுகிறது.

வனமாலீ சங்கசூடன் எனும் அசுரனை ஆமை வடிவம் எடுத்து வதைத்து உலகைக் காப்பாற்றும் வித்தில் மிகுந்த பலம் கொண்டவர்.

ஆதிசேஷ வடிவில் தமது எண்ணற்ற விரிந்து படர்ந்த தலைப்பகுதியில் பதினான்கு உலகங்களையும் தாங்குபவராம். இதனால் கூர்மாவதாரம் உணர்த்தப்படுகிறது.

வனமாலீ வன காடு. காட்டில் சுற்றித் திரியும் வராஹ வடிவுடன் விளங்கு பவர். மேலும் **வன** நீரில் ஆழ்கடல் நீரில் மூழ்கி பூமியைத் தூக்கி நிறுத்தியவர் என்பதால் வாாஹ அவதாரம் உணர்த்தப்படுகிறது.

பலமாலீ ஹிரண்யகசிபுவை தம் பலத்தால் அழிந்தவர். நரசிம்மாவதாரம் இதனால் உணர்த்தப்படுகிறது.

மாலினோऽவனமாலீ அவன மாலீ **அவன** குறுகிய குட்டையான வடிவத்துடன் **மாலின்** விளங்குபவர் என்பதால் வாமன அவதாரம். தேவர்களைக் காக்க மஹாபலி சக்ரவர்த்தியை வென்று அடக்கி, வாமன வடிவில் திருமால் தேவர் களைக் காப்பாற்றியவர் அல்லவா!

மேலும் **பலமாலீ** தம் ஆயுத பலத்தால் கார்த்தவீர்யனைக் கொன்றும் உலகையெல்லாம் வென்றவர் என்பதால்பரசுராம அவதாரம் உணர்த்தப்படு கிறது.

மேலும் **பலமாலீ** தம் அஸ்திரபலத்தால் மாபலம் பொருந்திய ராவணனைக் கொன்றவர் என்று பொருள். இதனால் ராம அவதாரம் உணர்த்தப்பட்டது.

மேலும் **பலமாலீ** தம் பலத்தால் காளிந்தீ நதியைத் தம்பால் இழுத்த காரணத்தால் **வனமாலீ.** காளிந்தீ தண்ணீரில் குதித்து "காளியன்" எனும் கொடிய பாம்பினை வென்று சிறப்பெய்தியவர், இதனால் கிருஷ்ண அவதாரம் உணர்த்தப்படுகிறது.

அவனமாலீ ஜீவஹிம்சை செய்யலாகாது என்று அகிம்சையை உணர்த்திச் சிறப்புற்றவர். இதனால் பௌத்த அவதாரம் உணர்த்தப்படுகிறது.

மேலும் **वनमाली** தம் பலத்தால் மிலேச்சர்களை அழித்து உலகைக் காப்பாற்றக் கூடியவர் என்பதால் கல்கி அவதாரம் கூறலாகிறது. இது பற்றி ஒரே வரியில் கூறப்படுவதாவது.

वनजौ वनजौ खर्वः त्रिरामी सकृपोऽकृप: । என்று.

மேலும் இந்த மூல சுலோகத்தில் ஸம்மோஹன 'மன்மத பீஜ' எழுத்தான 'க்லீம்' என்பதும் உணர்த்தப்படுகிறது. **मायां आलीनः मायां** சக்தியில் இணைந்து சிறப்புற்ற என்பது பொருள்.

தேவநாகரி எழுத்துக்களில் அ (**अ**) முதல் அ: (**अ:**) ஈறாகவுள்ள எழுத்துக்கள் ஸ்வர எழுத்துக்கள் எனப்படும். பிற எழுத்துக்களின் உதவி யின்றி உச்சரிக்கப்படுபவையாகும். (**स्वेनैव राजन्ते इति स्वरा:** ।) கவர்கம் முதலாயுள்ளவை உயிரெழுத்தின் உதவி இல்லாமல் உச்சரிக்க, தெளிவாக உச்சரிக்க இயலாதவையாகும், கவர்க முதலான எழுத்துக்களில் ஒவ்வொரு எழுத்தின் உச்சரிப்பிலும் வேறுபாடு உண்டு. அவற்றின் வேறுபாடு உயிரெழுத்தின் உதவியின்றி உணர இயலாது.

அவ்வாறு சக்தி போன்ற ஜீவநாடி போன்ற உயிரெழுத்துக்களில் சக்தி எழுத்து மந்த்ர சாஸ்திரப்படி ஈ (**ई**) என்பதாகும். அதனுடன் சேர்ந்து விளங்கும் எழுத்து மெய்யெழுத்துக்களில் முதலாகவுள்ளது 'க்' (**क्**) என்பதாகக் கொள்ளவேண்டும். ஸம்ஸ்க்ருதத்தில் சாஸ்திர "நியாயம்" ஒன்று உண்டு, அதாவது **प्रथमातिक्रमणे मानाभावः** என்பதாகும். முதலில் உள்ளதைவிட்டு அடுத்து உள்ளதை எடுத்துக்கொள்வதாயின் அதற்குக்காரணம் (பிரமாணம்) வேண்டும். முதலில் உள்ளதை எடுத்துக்கொள்வதற்கு எந்த பிரமாணமும் (சான்று) தேவையில்லை என்பது அதன் பொருள், அதன்படி சக்தி எழுத்துக்கள் இணைந்து விளங்குவது மெய்யில் முதலாவதாகவுள்ள எழுத்து (க்) **क्** என்பதாகக் கொள்ளலாம். அத்துடன் **घनमाली-घन** மேகங்களை அணிகலனாகவுடைய— மேகங்களின் அதிபதி—தலைவன் இந்திரன் ஆவார். மந்த்ர சாஸ்திரத்தில் 'இந்திரன்' என்பதனைக் குறிக்கும் எழுத்து 'ல'காரம் **ल्** என்பதாகும். எனவே சக்தியுடன் [(**ई**) ஈயுடன்] இணைந்து இந்திர எழுத்தாகிய (ல்) **ल्** உடன் விளங்கும் முதல் மெய்யெழுத்து என்பது க்ல்ஈ=க்லீ (**क्ली**) என்று அமையும். மேலும் **मालीनः** என்பதாகப் பதத்தை அமைத்தால், **मा** சந்திரன், அத்துடன் **लीन** கலந்த என்று பொருள், ஆக **ई** யுடன் **ल्** உடன் கலந்த **क्** எனும் எழுத்து, சந்திர எழுத்து ' அனுஸ்வாரம் 'ம்' எனும் ஒலிதரும் அடையாளம், இவற்றை இணைத்தால் க்லீம்–**क्लीं** என்று ஆகும். இது "ஸம்மோஹன மன்மத" பீஜம் என்று மந்த்ர சாஸ்திரங்களில் வழங்கப்படும். எனவே ஸம்மோஹன மன்மத பீஜ ஸ்வரூபமான கிருஷ்ணன் நம்மைக் காப்பாற்றட்டும் என்றும் பொருள் ஆகிறது.

இவ்வாறு ஒரு எழுத்திற்கு — ஒரு பதத்திற்கு உள்ள வெவ்வேறு பொருளைக்கொண்டு விதவிதமான பொருள் காணும்படி ச்லோகங்கள் அமைப்பது கடினமான ஒன்றுதான். அவ்வாறு அமைக்கும் கவிஞர்கள் மரியாதைக்கு உரியவர்கள்தான். ஆனால் அவ்வாறு கவிதை (செய்யுள்) எழுதினால் படிப்போர் புரிந்துகொள்ளவேண்டுமே, அது யாவருக்கும் எளிதல்லவே என்பதால் இம்மாதிரியான செய்யுட்கள் (ச்லோகங்கள்) அமைந்த இலக்கியம்—காவியம்—கவிஞர்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அதனால் அம்மாதிரியான இலக்கியங்கள் ராக்ஷஸ காவிய வரிசையில் சேர்க்கத் தக்கவையாகும்.

வள்ளுவனும் 'அகர முதலெழுத்தெலாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்று உரைத்தார் போலும். ஆக உலகில் உள்ள சொற்களெல்லாம் சக்தி வடிவமென்றும், பொருள்களெல்லாம் சிவன் வடிவம் என்றும் கூறப்படுகிறது.

ஆகவே இருவரும் உலகமெல்லாம் வியாபித்துள்ளனர் என்ற பொருள் கிடைக்கிறது. இதைத்தான் காளிதாஸனும் "வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தௌ" என்ற மங்களகரமான மங்கள சுலோகத்தால் சொன்னார். அப்பேற்பட்ட ஆதி பகவானான பரமேஸ்வரனைப் போற்றுவதும், அவனை அடைய முயற்சிப்பதும் சாலச் சிறந்தது. கடவுளரைப் பற்றிக் கூறும் புராணங்கள் பதினெட்டு. அவை பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பவிஷ்யம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம், வாமனம், கூர்மம், மச்சம், காருடம், ஸ்காந்தம், பிரமாண்டம் ஆகியன.

தமிழ்ப் புராணங்கள் :

புராணம் என்பதற்கு பழமை என்பது பொருள். சிலப்பதிகாரம் அடியார்க்குநல்லார் உரை, இறையனார் அகப்பொருள் உரை—இவற்றில் மாபுராணம், பூதபுராணம் என்று தொல்காப்பியத்துக்கு முன்பே தமிழ் மொழியில் இருந்தனவாகக் கூறப்பெற்றுள்ளன. புராணங்கள் வடமொழியில் வேதம், இதிகாசம் என்று இவற்றிற்கு அடுத்து வைத்துப் பாராட்டப்படுகின்றன. வடமொழிப் புராணங்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. இவ்வாறு சிறப்பாக மொழிபெயர்ப்பு எழுந்தது பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்துதான் என்று கருதலாம்.

தல புராணங்கள் :

தல புராணங்கள் தமிழ் இலக்கியத்தில் சிறந்ததோர் இடம்பெறுகின்றன. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று ஔவையார் கூறி இருப்பதற்கு ஏற்ப பெரும்பாலும் ஒவ்வோர் ஊரிலும், ஒவ்வொரு கோயில் இருக்கத் தமிழ் நாட்டில் காண்கிறோம். தமிழ் நாட்டுத் தலங்கள், மூர்த்திகள், தீர்த்தங்கள் ஆகியவற்றைப் பற்றியும் கோயிலைப் பற்றியும் எழுந்த தல புராணங்களில் கோயிலில் உள்ள பல தெய்வ வடிவங்களையும் கதை வடிவமாக விளக்குகின்றன.

திருப்பத்தூர் புராணம் ஆண்டவனுடைய ஏழு வகை தாண்டவங்களையும் தெளிவுபடுத்துகின்றது. புராணம் எழுதியவர்களுக்கு கோயிலில் உள்ள விக்கிரகங்கள் உள்ளீடாக என்றும் அழியாது ஒளிரும் அழகு வடிவாகச் சிற்பி கண்ட காட்சியே ஆகும். அறக்கொடியோர் எல்லாம் தாம் செய்த கொடுமைக்கு அஞ்சி ஆண்டவன் எதிரே மனம் மாறி நிற்கின்ற அவர்களை

ஆண்டவன் தன் அருளால் மேலுலகம் அனுப்புகின்ற கதைகள் பல இந்தப் புராணங்களில் வருகின்றன. மிகப் பழைய காலத்தில் இருந்தே புராணக் கதைகளுக்குத் தத்துவார்த்தம் கூறும் வழக்கம் இருக்கின்றது.

புராணங்களில் நாட்டு வரலாறும், ஊர்களின் வரலாறும் சிலவற்றில் காணப்படுகின்றன. திருவிளையாடல் புராணத்தினால் பாண்டியர் வரலாறு தெரிகிறது. கோயிற்புராணம் இரணியவர்மன், சிம்மவர்மன் என்ற அரசர்களின் பெயர்களைச் சுட்டுகின்றது. இவர்கள் பல்லவ அரசர் குடியைச் சேர்ந்தவர்களோ என்று வரலாற்று ஆராய்ச்சியாளர் கருதத் தொடங்கியுள்ளனர்.

தஞ்சை பெரிய கோவிலைப்பற்றியும், பதினாறு சோழ மன்னர்களைப் பற்றியும் *"பிருகதீஸ்வர மாகாத்மியம்' என்னும் தலபுராணம் கூறுகிறது. 'தஞ்சபுரீ மாஹாத்மியம்' என்னும் நூல் தஞ்சாவூரில் வெண்ணாற்றங்கரையில் உள்ள நீலமேகப் பெருமாள் கோவிலைப்பற்றியும், தஞ்சாவூர் எனப் பெயர் வரக் காரணம் என்ன என்பதைப்பற்றியும் விளக்குகின்றது. ஆண்டவனுடைய அடியார்களைப்பற்றி கூறும் நூலான திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணத்தில்) பல சரித்திர சான்றுகளை எடுத்தியம்புகிறது. மேலும் சில தல புராணங்களில் சிறப்பாக நிகழ்ந்த குறிப்புக்களையும், அத்தலத்திற்குச் சிறப்பைத் தெரிவிக்கும் செய்திகளையும் தொகுத்துக் கூறுகின்றன.

சில புராணங்களில் சிவனையும், சில புராணங்களில் திருமாலையும், சில புராணங்களில் சக்தியையும் ஆதிகடவுளாக சித்தரிக்கின்றனர். வெவ்வேறு அறிஞர்கள் எழுதியிருந்தால் அது அவரவர் கொள்கை என்று விட்டுவிடலாம். ஒரே முனிவர் மூன்று விதமாகச் சொல்லும்பொழுது நம் போன்ற சாதாரண மக்களுக்கு குழப்பம் ஏற்படுகிறது. குழப்பத்தை நீக்குவதற்கான உபாயம் என்ன?

அந்த வியாசரே எழுதிய ஏனைய நூல்களைப் பார்த்து அவருடைய அந்தரங்கமான எண்ணம் என்ன என்று அறிய முயற்சிக்கிறோம். வேதங்களை நான்காகப் பிரித்து, அவைகளை நன்கு பயில வசதி செய்துகொடுத்தவர் வியாசர். இதன் "தத்துவத்தை" விளக்கும் முறையில் வேதங்களின் தலையாய உபநிடத விஷயங்களை மாலையைத் தொடுப்பதுபோலத் தொடுத்து, "பிரும்மசூத்திரங்கள்" என்ற நூல் வாயிலாகக் கொடுத்தார்.

உருவமில்லாப் பரம்பொருள், ஆன்மாக்கள் தன்னை அடைந்து நற்கதியடையவேண்டும் என்ற கருணையால் தனது மாயையின் வாயிலாக பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மூன்று உருவங்களாக ஆக்கிக்கொண்டான். இந்த மும்மூர்த்திகளில் ஏதேனும் ஒரு மூர்த்தியைப் பற்றிக்கொண்டு இறுதியில்

* சரசுவதி மகால் நூலக வெளியீடு.

அந்த ஆன்மா முக்தியைப் பெற்றுவிட எண்ணினான். ஒரே பரம்பொருள் மூன்று உருவங்களில் காட்சி கொடுத்தாலும் அது ஒரே தத்துவத்தின் பேதங்களே. வானிலிருந்து பொழியும் தண்ணீர் சமுத்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீரே. அது மழையாகப் பெயர் பெற்றும், பின் பல்வேறு நதிகளாகப் பெயர் பெற்றும் நாம, ரூபங்களைப் பெற்று இறுதியில் கடலில் கலந்து ஐக்கியமாகி நாம, ரூப பேதங்களைக் கடந்துவிடுவதைப்போல, ஆன்மா பல்வேறு நாம ரூபங்களாக இருந்து சகுணோபாசனைகளைச் செய்து இறுதியில் முக்தி நிலையையடையட்டும் என்ற கருணையால் தன்னை மும்மூர்த்திகளாக ஆக்கிக்கொண்டான் என்று, சங்கரபகவத்பாதர் ப்ரபோத சுதாகரம் என்ற நூலில் கூறியுள்ளார்.

ஆகவே, ஆன்மாக்கள் சகுணோபாசனை புரிய மூர்த்தி வழிபாடு மிகவும் இன்றியமையாதது. இதன் காரணமாக பல்வேறு தலங்களில் இறைவன் லிங்கத் திருமேனியாக இருந்து காட்சி நல்குகிறான். இவன் உறையும் தலங்களுக்குச் சிறப்பிக்குமுகத்தால் தலபுராணங்கள் தோன்றின. தலபுராணங்களில் காணப்படும் செய்திகளில் மூர்த்தி–தலம்–தீர்த்தம் என்ற மூன்று நிலைகளில் சிறப்பாக விதந்தோதும். இத்தகைய தலபுராண வரிசைகளில் எழுந்த நூலே "கோணேஸ்வர மாஹாத்மியம்" என்னும் நூல். இந்த நூலில் இத்தலத்துறையும் இறைவனை அமிர்தலிங்கமாகக் குறிப்பிடுகிறது. அதற்கான காரணத்தைப் பற்றிய செய்திகள் வருமாறு.

அமிர்தலிங்கம் பற்றிய புராணச் செய்திகள்:

புற்றுக்குள்ளிருந்து பெருமான் தோன்றியதால் இத்திருத்தலத்திற்கு வன்மீகாசலம் என்று ஒரு பெயரும் உண்டு. பிருகு, தாலப்யர், மிருகண்டு முதலிய முனிவர்கள் இங்கு தவமியற்றி கோணேசரின் அருளைப் பெற்றனர். இப்பெருமான் அமிர்தலிங்கேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். ஏன் எனில் மகாபிரளய காலத்தில் உடலிழந்த உயிர்கள் அனைத்தையும், கைலாசமாகிற குடத்தில் இட்டு அதைத் தம் சொரூபமாகிற அமிர்தத்தால் நிறைத்து வைத்தார் சிவபெருமான். மீண்டும் படைப்புக் காலம் வந்தபோது, ஊழிக் கால வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த இந்தக் குடம் மூன்றாக உடைந்தது. அதன் முக பாகம் குடத்தின் வாய் தங்கிய இடம் குடவாயில் ஆயிற்று. இங்குதான் கோணேசர் எழுந்தருளினார். நடுப் பாகம் கும்பகோணத்திற்கு மூன்று மைல் தென்கிழக்கேயுள்ள கலயநல்லூரில் தங்கியது. அங்கு சுவாமி அமிருதகலசநாதராக, அமிருதவல்லி அம்பாளுடன் எழுந்தருளினார். அடிப்பாகம் தங்கிய கும்பகோணத்தில் கும்பேச்வரராக மங்களாம்பிகாவுடன் திருக்கோயில் கொண்டார்.

ஸ்ரீகருடாழ்வார் கொண்டுவந்து வைத்த அமிர்தத்தால் அபிஷேகம் செய்யப்பட்டவராதலால் கோணேசர் அமிர்தலிங்கமானார். அமிர்த துளிகள்

சிந்தியதால் ஆலயத்திற்கு எதிரிலுள்ள தீர்த்தம் அமிர்ததீர்த்தம் ஆயிற்று, இந்த அமிர்த தீர்த்தத்தின் பெருமையினைப்பற்றி சிவ புராணத்தில், ருத்ர சம்ஹிதையில், ஸ்தான மாஹாத்மிய காண்டத்தில் சௌனகர்—சனத்குமாரர் ஆகியோர் உரையாடுவதுபோல், கோணேஸ்வர மாஹாத்மியம் என்னும் இந்நூல் அமைந்துள்ளது; இத்தலத்தின் பெருமை முதற்கண் அமிர்த குடத்தின் அடிப்படையில் தோன்றியுள்ளதால் இது அமிர்ததலம் எனப்பெயர் பெறுகின்றது.

சுவடியின் வரலாறு :

இந்த கோணேஸ்வர மாஹாத்மியம் என்னும் நூல், இந்த நூலகத்தில் B. No, 11324, D. No. 9702 என்ற எண்ணில் வைத்துப் பாதுகாக்கப்படு கின்றது. இந்நூல் ஓலைச்சுவடியில், கிரந்த எழுத்தில் உள்ளது. இச்சுவடி சுமார் நிலையில் உள்ளது.

நன்றியுரை :

கோணேஸ்வரம் என்ற பெயரில் குடவாயில் தலத்தைப்பற்றிய வரலாற்றுச் செய்திகளும், இலக்கியச் செய்திகளும் இந்நூலில் கொடுக்கப்பட்டு உள்ளன. கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகளுடன் வெளிவரும் இத்தலப் புராணத்தைப் பதிப்பிக்க எனக்கு உதவிபுரிந்த குடவாயில் திரு. M. பாலசுப்ரமணியம், M. A. அவர்களுக்கும், முன்னாள் சமஸ்கிருதப் பண்டிதர் திரு. பு. மா. பத்மநாப சர்மா அவர்களுக்கும், நூலக சமஸ்கிருதப் பண்டிதர் திரு. என், ஸ்ரீநிவாஸன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலைப் பதிப்பிக்கும் பணியை எனக்கு நல்கிய இந்நூலக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான உயர்திரு. து நா. இராமநாதன், இ. ஆ. ப. அவர்களுக்கும், இந்நூலக நிருவாக அதிகாரி திரு. பி. சுப்ரமணியன் அவர்களுக்கும், பதிப்பீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், M.A., M.L.I.S. அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனைச் சிறப்பான முறையில் அச்சிட்டுத் தந்த சரசுவதி மகால் நூலகத்தின் அச்சகப் பணியாளர்களுக்கும், பைண்டிங் பிரிவினருக்கும் எனது மனமார்ந்த நன்றி யினைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

எஸ். ராஜலக்ஷ்மி
ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
26—7—97

கோணேஸ்வர மாஹாத்மியமும் குடவாயிலின் வரலாற்றுச் சிறப்புகளும்

சங்ககாலச் சோழநாட்டு கோநகரங்களுள் ஒன்றாக விளங்கியது குடவாயில் எனும் ஊராகும். இவ்வூரில் பிறந்தவரே சங்ககாலப் பெரும் புலவரான குடவாயிற் கீரத்தனார் என்பவராவார். குடவாயில் எனும் இவ்வூரின் அழகினை ஒரு பெண்ணின் அழகோடு ஒப்பிட்டு நற்றிணைப் பாடல் ஒன்று கூறுகின்றது. குடவாயில் எனும் இவ்வூருக்குக் குடந்தை, குடந்தை வாயில் என்ற பெயர்கள் வழக்கில் இருப்பதையும் சங்கப் பாடல்களே கூறுகின்றன. நச்சினார்க்கினியர், "குடந்தை என்பது குடவாயிலின் திரிபே" என்று தொல்காப்பிய உரையில் குறித்துள்ளார். சங்க காலச் சோழர்களின் நிதி சேமிப்புக் கிடங்கும், சிறைக் கோட்டமும் இவ்வூரில் இருந்ததாகப் பழந்தமிழ் நூல்கள் செப்புகின்றன. கணைக்கால் இரும்பொறை என்ற சேரமானைச் சோழன் செங்கணான் இவ்வூர் சிறைக்கோட்டத்தில் சிறைப் படுத்தி இருந்தான் என்றும், இலக்கியக் கூற்றுக்களால் அறியமுடிகின்றது. தேவார இலக்கியத்திலும் இவ்வூர் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

குடவாயிற் கோட்டம் எனும் இவ்வூரில் 'பெருங்கோயில் இருந்ததை தேவாரப் பனுவல்கள் சுட்டுகின்றன. திருஞானசம்பந்தர் குடவாயிற் பெருங்கோயில் நிலாவிய பெருமானைப் போற்றி இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். திருநாவுக்கரசரின் திருத்தாண்டக அடைவில் "குடவாயில், குணவாயிலாகு வெல்லாம் புகுவாரை கொடுவினைகள் கூடாவன்றே" என்றும்

" பூவனூர் தன் புரம்பயம் பூம்பொழில்
நாவலூர் நள்ளாறொடு நன்னிலங்
கோவலூர் குடவாயில் கொடுமுடி
மூவலூரு முக்கண்ணனூர் காண்மினே "

என்று பூவனூர் பதிகத்திலும் குறிப்பிட்டுள்ளார். சேக்கிழாரின் பெரிய புராணமும், இவ்வூரின் பெருமை பேசுகின்றது. அருணகிரியாரின் திருப்புகழ், காளமேகப்புலவரின் பாடல், இராமலிங்க வள்ளலாரின் பாடல்கள் ஆகிய வற்றிலும் இவ்வூரின் பெருமையையும் அங்கு கோயில் கொண்டுள்ள ஈசனின் பெருமையும் கூறப்பெறுகின்றன.

கடுவாய் மலிநீர் குடவாயில் தனில்
நெடுமா பெருங்கோயில் நிலாயவன்

என்று புகலியர்கோன் ஞானசம்பந்தப் பெருமானார் கூறும் குடவாயில் திருக்கோயில் ஈசனாரை, மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு "குடவாயில் உடையார்" என்றும் இறைவியை 'பெரிய நாச்சியார்' என்றும் கூறுகின்றது. தஞ்சை நாயக்க மன்னன் செவ்வப்ப நாயகனின் கல்வெட்டு ஒன்று இவ்வூரினை திருக்குடவாசல் என்றும், அங்கு கோயில் கொண்டுள்ள ஈசனை அழகர் தம்பிரானார் என்றும் கூறுகின்றது. இச் கோயிலே புராணங்களில் கோணேசராலயம் என்றும், இறைவனை ஸ்ரீ கோணேசர் என்றும் தேவியை 'பிரகன்நாயகி' என்றும் குறிப்பிடுகின்றன.

மாடக்கோயில் எனும் வகைப்பாட்டில் அமைந்த கோணேசப் பெருமானின் திருக்கோயிலை கோச்செங்கட்சோழன் (செங்கனான்) கட்டுவித்ததாக ஒரு வரலாறும் உண்டு. இத்திருக்கோயில் இருக்கும் தலத்தின் மான்மியத்தை சைவ புராணம் விரித்துறைக்கின்றது.

குடவாயிலின் தொன்மை :

தொன்மைச் சிறப்புப் பல பெற்ற குடவாயிற் கோட்டம் பிற்காலச் சோழர்கள் காலத்திலும் சிறப்பாக விளங்கிற்று என்பதனை தெளிவான வரலாற்றுச் சான்றுகளால் அறிய முடிகிறது.

"கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடு தரு நிதியினும்"

என்ற அகநானூற்றுப் பாடலில் இருந்து, 'சங்க காலச் சோழர்களின் பண்டாரம் இங்கு இருந்தது' என்பதனை அறிய முடிகிறது. மேலும் சிறைக் கோட்டமாகவும், முக்கியதொரு அரசியல் மையமாகவும். இவ்வூர் விளங்கிற்று என்பது இலக்கிய அடிப்படையில் தெளிவாகிறது. கி. பி. 871 முதல் 907 வரை ஆட்சி புரிந்த முதல் ஆதித்தன் காலத்திய கற்றளி ஒன்று இன்றும் எழிலுடன் இவ்வூருடன் இணைந்த நாலூர் மயானம் என்னும் இடத்தில் உள்ளது.

மாமன்னன் முதலாம் இராஜராஜன் காலத்தில் குடவாயில், சத்திரிய சிகாமணி வளநாட்டுசெற்றூர் கூற்றத்தில் உள்ள ஊராகத் தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. முதற் கல்வெட்டில்

" சத்திரிய சிகாமணி வளநாட்டுச்
செற்றூர் கூற்றத்து குடவாயில் சபையார் இடக்கடவ
திருப்பரிசாரகஞ் செய்யும் மான் ஒன்று "

என்றும் இரண்டாம் கல்வெட்டில்

"சத்திரிய சிகாமணி வளநாட்டு குடவாயில் சபையார்
இடக்கடவ திரு மெய்காப்பு ஒன்றும்"

என்றும் கூறப்பட்டுள்ளது. இராஜராஜனின் இருபத்தொன்பதாவது ஆட்சி யாண்டின் ஆணையான இக்கல்வெட்டுப்படி குடவாயில் ஊர்ச் சபையால் திருப்பரிகாரஞ்செய்யும் பிரமசாரி ஒருவரையும் திருக்கோயில் மெய்க் காப்பாளன் ஒருவனையும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்காக நியமிக்கும் உரிமை சூரியன், சந்திரன் உள்ளவரையும் உண்டு என கல்வெட்டிலே வெட்டப் பட்டுள்ளது.

இராஜராஜன் காலத்தில் சத்திரிய சிகாமணி வளநாடு என அழைக்கப் பட்ட பெயர் பின்பு முதற் குலோத்துங்கன் காலம் முதல் 'குலோத்துங்க சோழ வளநாடு' எனப் பெயர் மாற்றம் அடைந்தது. இதனால், 'குடவாயில் நகர்' குலோத்துங்க சோழவளநாட்டிலும், அருமொழித் தேவ வளநாட்டிலும் இடம் பெற்றிருந்தது. இதற்குக் காரணம், இரண்டு வளநாடுகளையும் பிரிக்கும் காவிரியின் கிளை நதியான சுடுவாய் (குடமுருட்டி) இவ்வூரின் நடுவே ஓடுவதுதான்.

சுங்கம் தவிர்த்தருளிய சோழப்பெருமன்னனான முதலாம் குலோத்துங்கன் தனது ஆட்சியாண்டில் இவ்வூரில் இருந்த அமண்பள்ளிக்கு அளித்த அறக்கொடைகள் பற்றிய செய்திகள் மூன்றும் இராஜராஜனின் கல்வெட்டுக்களால் அறியமுடிகிறது. அமண்பள்ளியில் இருந்த இக் கல்வெட்டுக்கள் அடங்கிய கற்பலகைகள் தற்போது அருள்மிகு கோணேசர் ஆலயத் திருக்கோபுரத்தின் நுழைவுப் பகுதியில் காணப்படுகின்றன.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில், இவ்வூர் மிகுந்த ஆக்கம் பெற்றுத் திகழ்ந்தது என்பதைப் பல சான்றுகளால் அறிய முடிகிறது. குடவாயில் மாடக்கோயில் விமானத்தின் தென்புறச் சுவற்றில் ஆலமர் செல்வர் அமர்ந் துள்ள கோஷ்டத்தின் கிழக்குப் புறத்தில் கல்வெட்டொன்று உள்ளது. அது

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவத்திக
2 ள் மதுரை கொண்டு பாண்டியன்
3 முடித்தலை கொண்டருளிய
4 ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவ
5 ர்க்கு யாண்டு 15 ஆவது
6 130 னாள் குடவாயில் உடையார்
7 பெருந்திருக் கோயிலுடையார் பெரி
8 ய நாச்சியார்க்கு திரு ஆபரணம் ப
9 ண்ண குற்றாலமுடையான் திரு சிற்றம்
10 பல முடையார் ஆன காராணை விழுப்பரை

11 யார் இட்ட எட்டெழுகால் மாறிபொன்
12 பதின் கழஞ்சு.

இக்கல்வெட்டொன்றே இத்திருக்கோயிலில் உள்ள முழுமையான கல்வெட்டாகும். மேலும், இத்திருக்கோயிலின் சிறப்பைக்கூறும் தொடர்பு உடைய கல்வெட்டாகும். மேலே குறிப்பிட்டுள்ள இக்கல்வெட்டால், மூன்றாம் குலோத்துங்களின் 15வது ஆட்சியாண்டில் (கி. பி. 1193 குடவாயில் உடையார் என்ற இறைவனின் பெருந்திருக்கோயிலில் உள்ள பெரிய நாச்சியாருக்கு ஆபரணங்கள் செய்வதற்காக் குற்றாலம் என்ற ஊரைச்சேர்ந்த திருச்சிற்றம்பல முடையான் என்பவன் அளித்த 10 கழஞ்சு பொன் பற்றிக் கூறுகிறது.

இக்கல்வெட்டால் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் இறைவன் பெயர் குடவாயில் உடையார் என்றும் இறைவியின் பெயர் பெரிய நாச்சியார் என்றும், இத்திருக்கோயில் பெருந்திருக்கோயில் என்றும் அறியமுடிகிறது.

மேலும் குடவாயிலின் தொன்மை சிறப்பை இலக்கியச் செய்திகள், கல்வெட்டுக்கள், புதையுண்டு வெளிப்பட்ட சிற்பங்கள், இவையனைத்தையும் வைத்து தொகுத்து நோக்கும் போது கி. பி. 7ஆம் நூற்றாண்டில் ஞானசம்பந்தருடன் சமயவாதம் நிகழ்த்தியது, கி. பி. 9ஆம் நூற்றாண்டில் கன்னியாகுமாரி சென்று சிற்பங்கள் பல செதுக்கிச் சமணம் பரவச் செய்தது, இக்குடவாயிலில் இருந்த சமணர்கள் என்பதும், முதல் ராஜராஜன் காலம் முதல் மூன்றாம் இராஜராஜன் காலம் வரை சோழப் பெருமன்னர்களின் சிறந்தவொரு ஆதரவால் சோழநாட்டில் சமணம் பரப்பிய பெருமை பெற்ற வர்கள் இச்சமணர்கள் என்பதும் தெரிய வருகிறது. மேற்கூறிய செய்திகளால் பல வரலாற்று சிறப்புகள் பல்வேறு அம்சங்களால் அழியா இடம் பெற்ற குடவாயில் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதனை தெளிவாக அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தில் குடவாயில்:

இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் குடவாயில் சிறந்த இடம் பெற்றிருந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் பல கிடைக்கின்றன. சோழன் கோச்செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையுடன் சண்டையிட்டு வென்ற செய்தி புறநானூறு, களவழி நாற்பது என்னும் சங்ககால இலக்கியங்களால் அறியப்படுகின்றது. அகநானூறு, நற்றிணைப் போன்ற நூல்களில் கீரத்தனார், நகரின் கடுமையான பாதுகாப்பு காவற்காடுகள், அகழி, நிதி சேமிப்புக் கிடங்கு போன்றவை அமைந்த அரசியல் கேந்திரமாகக் காட்டுகிறார். புறநானூற்று செய்யுளான ‘குழவி இறப்பினும்’ என்ற பாடலின் கீழ் உள்ள குறிப்பு சோழன் செங்கணான் சேரனை சிறை வைத்தது குடவாயிற் கோட்டத்துச் சிறையாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

குடவாயில் எனக் கூறப்பெறும் இவ்வூர் பின் குறிப்பிடும் காரணங்களால் முக்கியத்தும் பெற்றுத் திகழ்ந்தது என்பதை அறியமுடிகிறது.

1. சங்க காலச் சோழநாட்டில் முக்கியத்துவம் பெற்ற பேரூர்.
2. சோழர்களின் சிறைக்கோட்டம் இங்கு இருந்தது.
3. திறைப் பொருளாகக் கிடைத்த பொன்னும், மணியும் இங்குள்ள சேமிப்புக் கிடங்கில் சேமிக்கப்பட்டது.
4. அழகு மிகுந்த இயற்கையான மழை நீர் நிரம்பிய அகழி இருந்தது.
5. கடுமையான காவல் பெற்ற காவற்காடு சூழப்பெற்றது.
6. கழனிகள் பல சூழ்ந்து, நிரப்ப நெல் வருவாயையும், பல குடி பரப்புக்களையும் உடைய பேரூர்.
7. யானைகள் படியும் குளங்களைப் பெற்ற ஊர்.
8. இங்குள்ள சிறைக் கோட்டத்தில் சேர மன்னன் ஒருவன், சோழ மன்னனால் சிறைவைக்கப்பட்டான்.
9. குடவாயிற் கீரத்தனார், நல்லாதனார் போன்ற சங்கப்பெரும் புலவர்கள் பிறந்த ஊர்.

சங்க காலந்தொட்டு முக்கியத்துவம் பெற்ற சோழநாட்டுப் பேரூர்களில் ஒன்றான குடவாயிலில் சைவம் சிறப்புற மலர்ந்தது.

"இருக்கிலங்கு திருமொழி வாயென் தோளீசற்கு
எழில் மாடம் எழுபது செய்து உலக மாண்ட
திருக் குலத்து வளச் சோழன்" *

எனக்கூறும் திருமங்கையாழ்வாரின் கூற்றால் காவிரியின் இருமருங்கும் எழுபது மாடக்கோயில்கள் சோழன் செங்கணானால் கட்டப்பட்டதாக அறியமுடிகிறது. "சிலந்தியானை" புராணக் கதையைச் செங்கணானுடன் இணைத்துக் குறிப்பிட்டு யானை ஏறாமல் கட்டுவிக்கப்பட்டதே மாடக் கோயில்கள் எனக் குறிப்பர் புராண நூல் வல்லவர்கள்.

குடவாயிலெனும் நங்கை நல்லாளின் சிறப்பைக் குடவாயிற் கீரத்தனார் எனும் சங்க காலப் பெரும் புலவர் நற்றிணையிலே காட்டுகின்றார்.

"எழுதெழில் சிதைய அழுதனார் கண்ணே
தேர்வண் சோழர் குடந்தைவாயில்
மாரியங் கிடங்கின் ஈரிய மலர்ந்த
பெயலுரு நீலம் போன்றன......"

---

* திருமங்கையாழ்வார் — 6ஆம் திருமொழி. பாடல் எண். 8.

என்றும் அடுத்து அவனது குளிர்ச்சியான குணநலன்களை கூறவந்த கீரத்தனார் தம் அகநானூற்றுக் களிற்று யானை நிரை செய்யுளிலே

" பழம்பல் நெல்லின் பல் குடிப் பரவை
பொங்கடி படிகயம் மண்டிய பசுமனை
தன்குட வாயில் அன்னோன் " என்றும்

" வென்வேற் கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதி "

தன்னகத்தே கடுமையான பாதுகாவலுடன் கொண்டதாகவே அகநானூற்றுப்பாடலிலே காட்டுகின்றார்.

குடவாயிற் கீரத்தனார் என்னும் சங்கப் பெரும்புலவர் சோழநாட்டு குடவாயிலில் பிறந்தவர் என்பது தெளிவு. இவர் தான் பிறந்த மண்ணின் பெருமையை வாய்ப்புக் கிட்டும் இடங்களிலெல்லாம் அழகுத் தமிழில் தெளிவாகக் காட்டுகின்றார். இவர் பாடியனவாக நற்றிணையில் நான்கு பாடல்களும், குறுந்தொகையில் மூன்றும், அகத்தில் பத்துமாக பதினேழு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. இவருடைய பாடல்களால் அன்றைய குடவாயில் நகரின் எழிலைக் காண்பதோடு தொன்மையான சோழர்களின் வரலாற்றில் அவ்வூர் பெற்ற முக்கியத்துவத்தைத் தெளிவாகக் காணமுடிகிறது.

கி. பி. 7-ம் நூற்றாண்டு இலக்கியங்களான தேவாரம் போன்ற இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் இவ்வூர் இடம் பெற்றுள்ளன. மேலும் புறநானூறு என்னும் சங்க இலக்கியத்தில் குழவி இறப்பினும் என்ற பாடலின் கீழ் வரையப்பட்டுள்ள குறிப்பொன்றிலிருந்து சோழர்களின் சிறைக் கோட்டம் குடவாயில் கோட்டமாக இருந்தது என்பது தெரிகிறது. மேலும் தொல்காப்பிய உரையில்

" மரபே தானும் நாற்சொல் லியலான்
யாப்பு வழிபட்டன "

என்பது குடவாயிலை கொற்றச் சோழர் குடந்தை வைத்த என முன்னாளில் கூறியது போல என்றும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியரும், பேராசிரியரும் தம் நூல்களில் குடவாயிலைப் பற்றி எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் :

இத்திருக் கோயிலுக்கு ஞானசம்பந்தர் இருமுறை வந்து தரிசித்துள்ளார் என்பது பெரியபுராணத்தால் நன்குணரலாம். முதன்முறை வந்தபோது கீழ்வேளூர் பாடலில் காணும் தலங்களை தரிசித்த பின் குடவாயிலை தரிசித்துள்ளார் என்பதையும் அறியலாம்.

* பாடும் அரதைப் பெரும்பாழியே முதலாகச்
சேடர்பயில் திருச்சேறை திருநாலூர் குடவாயில்
நாடியசீர் நறையூர்தென் திருப்புத்தூர் நயிந் திரைஞ்சி
நீடுதமிழ் தொடைபுனைந்த நெடுநகரில் இனிதமர்ந்தார்.

மேலும், ஞானசம்பந்தரால் குடவாயிலில் நிகழ்ந்த சமய வாதத்தை வலியுறுத்தும் வண்ணம் பிறிதோர் இலக்கியம் சான்று பகிர்கின்றது. கி. பி. 15-ம் நூற்றாண்டு இலக்கியமான திருப்புகழில், இவ்வூர் முருகப்பெருமானைப் பாடிய அருணகிரியார், குடவாயிற் கோயிலுறைந்த முருகப்பெருமானே ஞானசம்பந்தராக வடிவெடுத்ததாகவும், பின்னர் பாண்டிய நாட்டில் அமண் அழித்து அமைதி நிலவினாரே அதேபோன்று குடவாயில் நகரையும் வாழ்வுறச் செய்தார் என்பதனை

** "மாமதுராபுரி யியலை ஆரண ஊரென
நேர் செய்து குடசை மாநகர் வாழ்வுற
மேவிய பெருமானே"

எனக் குறிப்பிடுகிறார்.

சோழ நாட்டில் சைவத்தை நிலைநிறுத்த நடந்த கடுஞ்சமரில் இந்தக் குடவாயில் நகர் பெரும் பங்கு வகித்துள்ளது என்பது மிகையாகாது. குடவாயில் மாடக்கோயிலில் ஆளுடைப்பிள்ளையாம் ஞானசம்பந்தர் இரண்டு பதிகங்களாக 22 பாடல்களைப் பாடியுள்ளார்.

திருக்ஷேத்திரக்கோவையில் ஞானசம்பந்தரால், "கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி" என முதல் பாடலிலேயே குறிப்பிடப்பட்டிருத்தலும், கி. பி. 7ஆம் நூற்றாண்டில் அப்பர். ஞானசம்பந்தர் போன்றவர்களால் போற்றப்பட்ட இவ்வூரில் பின்னர் சோழர்கள் காலத்திலும் (கி. பி. 9 — 13) சிறப்புடன் விளங்கியது.

கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் அருணகிரியார், இத்திருக்கோயில் முருகப்பெருமானை வணங்கித் திருப்புகழில் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். முதல் பாடலில் "குடவாயிற் பதியுறைவோனே" என்றும், அடுத்த பாடலில் "குடசை மாநகர் வாழ் வுறமேவிய பெருமாளே" எனவும் குறிப்பிடுகிறார்.

அருட்பெருஞ்சோதியாம் இராமலிங்க வள்ளலும் இத்திருக்கோயில் இறைவனை வழிபட்டு பின்பு

---

* பெரியபுராணம் - ஞானசம்பந்தர் புராணம் பாடல் 403.

** திருப்புகழ் — குடவாயில் பதிகம்.

"தடவாயில் வெண்மணிகள் சங்கங்களீனுங்
குடவாயிலன்பர் குறிப்பே"

எனத் தம் திருவருட்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஞானசம்பந்தப் பெருமானால் சோழ நாட்டில் நடைபெற்ற சமய வாத நிகழ்ச்சியைக் கூர்ந்து நோக்குவோமானால் ஆளுடைபிள்ளை யாருடன் தருக்கம் செய்யும் அளவு சமணர்கள் வலிமை பெற்றுத் திகழ்ந்தார்கள் என்றால் அவர்கள் வாழ்ந்த குடவாயிற்பதி எப்படி இருந்திருக்கவேண்டும் என்பதை ஊகிக்கமுடிகிறது.

குடவாயிற்கோயிற் பற்றிய செய்திகள் :

திருஞானசம்பந்தர், திருக்குடவாயில் பதிகத்தில்

" மகிழும் பெருமான் குடவாயில் மன்னி
நிகழும் பெருங்கோயினி லாயவனே " என்றும்

" கடுவாய் மலிநீர் குடவாயில் தனில்
நெடுமா பெருங் கோயில் நிலாயவன் "

என்றெல்லாம் போற்றி மகிழ்கிறார்.

" ஞாலக் கோயில், கொகுடிக் கோயில் "
என்றெல்லாம் தேவார இலக்கியத்தில் பேசப்பெறுகின்ற கோயில்களின் வகைப்பாடுகளுள் இக்கோயில் பெருங்கோயில் என்று குறிக்கப்பெறுகின்றது, மேலும் இக்கோயில் மாடக் கோயில் என்றும் சிறப்பாகப் பேசப்பெறுகின்றது.

திருஞானசம்பந்தரின் பதிகத்தின் வாயிலாகக் குடவாயில் சிவாலயம் " பெருங்கோயில் " என அறியமுடிகிறது. பெருங்கோயில் என்பது மாடக் கோயில்தான் என்பதை திருநாவுக்கரசரின் பதிகமும், திருமங்கையாழ்வாரின் திருநறையூர் பாசுரமும் தெளிவு படுத்துகின்றன.

" பெருக்கு ஆறு சடைக்கு அணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடு எட்டும் ... "

என்ற நாவுக்கரசரின் தேவார அடிகள் எழுபத்தெட்டு பெருங்கோயிலாகக் குறிப்பிடுகின்றது. திருமங்கையாழ்வாரோ

" இருக்கிலங்கு திருமொழிவாய் எட்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபது செய்து உலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில் ... "

எனக்கூறி கோச்செங்கணான் எனும் சோழமன்னன் எழுபது மாடக்கோயில்களை கட்டியதாகக் குறிப்பிடுகின்றன. எனவே பெருங்கோயில் என்பது மாடக் கோயிலே என்பது நன்கு விளங்கும். இவ்வகையில் அமைந்தது கோணேசர் திருக்கோயில்.

இத்திருக்கோயில் உயர்ந்த மேடைமீது ஒரு பிரகாரமும், கீழே தரையில் இரண்டு பிரகாரங்களும் ஆக மூன்று திருச்சுற்றுகள் அடங்கிய கோவிலாகவும் விளங்குகின்றது. இரண்டாம் பிரகாரத்தில் நடராஜர், சபைபதி, நால்வர், இலக்குமி, முருகப்பெருமான், சண்டேசர், நவக்கிரகங்கள், தக்ஷிணாமூர்த்தி ஆகிய தெய்வங்களின் சிறு கோவில்கள் இடம்பெற்றுள்ளன. வெளிப்பிரகாரத்தில் பிரகன்நாயகியின் சந்நிதி அமைந்துள்ளது. கோவிலுக்கு வெளியே தீர்த்தக்குளம் திகழ்கின்றது.

இக்கோயிலிலுள்ள ஆடவல்லான், சிவகாமி அம்மை செப்புத் திருமேனிகள் கலை அம்சத்தால் சிறப்புமிக்க திருமேனிகள் மட்டுமல்லாது வரலாற்று தொல்லியல் அறிஞர்களால் மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகக் குறிப்பிடப்படும் திருமேனிகளாகும்.

மேலே குறிப்பிட்ட ஆடவல்லான் திருமேனியின் பீடத்தில் 10-11ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் "களக்காடுடையார் மாலைதாழ்மார்பன்" என எழுதப்பட்டுள்ளது. களக்காடு என்ற ஊரைச் சேர்ந்த மாலைத்தாழ் மார்பன் என்பவர் இத்திருமேனியை வடிக்கச் செய்து, அவரது பெயரையும் பொரித்து ஆடவல்லானின் திருவடியின் கீழே அநவரதமும் வணங்கும் கோலத்தில் தன் உருவத்தையும் பொறிக்கச் செய்த பெருந்தகையாவார்.

புராணச் செய்திகள் :

> மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
> வார்த்தை சொலச் சறகுருவும் வாய்க்கும் பராபரமே

என்பது தாயுமான சுவாமிகளின் திருவாக்கு. இவ்வாக்கிற்கு இணங்க, நம் தமிழகத்தின் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறந்த இடங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்று திருக்குடவாயில். இதன் பெருமையினை முதற்கண் சூத முனிவர், நைமிசாரண்யத்தில் வாழ்ந்த முனிவர்களுக்கு வகுத்துக் கூறினார். இத்தலத்தின் பெருமை முதற்கண் அமிர்த குடத்தின் அடிப்படையில் தோன்றிற்று. ஆதலால் இது அமிர்ததலம் எனப்பெறுகின்றது.

* குடவாயில் மேவுங் கோணநா தன்றன்
னிடமுறை பெரியநா யகியெழி லமிர்தம் — சிவக்ஷேத்திர விளக்கம்

---

* திருத்தலங்கள் வரலாறு.

சுவாமி : கோணேசுரர்

அம்பிகை : பெரியநாயகியம்மை (பிருகந்நாயகி)

தீர்த்தம் : அமுத தீர்த்தம், கடுவாய்நதி (குடமுருட்டியின் கிளையாறு)

விருட்சம் : கதலிவனம், பலாசவனம்.

இத்தலம் தோன்றியதற்குரிய புராணச் செய்திகள் :

காச்யப முனிவருக்கு இரண்டு மனைவியர். மூத்தவள் விநதை. இளையவள் கத்ருதேவி. இவ்விருவரும் ஒரு சமயம் காற்று வாங்க கடற்கரை சென்றனர். அப்போது அங்கு இந்திரன் உச்சைசிரவஸ் என்ற வெண்ணிற குதிரையின்மீது சென்றுகொண்டிருந்தான். அதைக் கண்ட விநதை அதன் அழகில் மோகித்து. "ஆஹா இவ்வளவு அழகான குதிரை, காண்பதற்கு மிகவும் ரம்யமாஹ இருக்கின்றது. அதன் உடல் முழுவதும் பால் போன்ற வெண்மை நிறமாக இருக்கின்றது" என்று மிகவும் அதிசயித்து புகழ்ந்தனள். இதனைக் கேட்ட கத்ருதேவி அவளிடம் பொறாமை கொண்டு, உங்களுடைய கண் குருடா என்ன! அந்தக் குதிரை முழுதும் வெண்மையாகவா இருக்கிறது?" என்று கேட்க, விநதை மீண்டும் அதனைக் கூர்ந்து நோக்கி "அது வெண்மையாகத்தான் இருக்கிறது" என்றாள்.

அதைக் கேட்ட கத்ருதேவி அந்தக் குதிரை வெள்ளை தான். ஆனால் அதன் வால் கருப்பாக அல்லவோ இருக்கிறது என்றுகூற, இருவருக்குள் போட்டி எழுந்தது. அடுத்தமுறை இந்திரன் உச்சைசிரவஸ் என்ற குதிரையில் திரும்பும்போது அதனை உறுதியாகக் கொள்வோம். குதிரையின் வால் கருப்பாக இருந்தால் நீயும் உன் பிள்ளையும் எனக்கு அடிமையாக வேண்டும் என்று கத்ரு கூறினாள். வெண்மையாக இருக்குமானால் நானும் என் பிள்ளைகளும் விநதைக்கு அடிமையாவது என்று இருவரும் சபதம் செய்து கொண்டார்கள்.

கத்ரு தன் பிள்ளைகளான சர்ப்பங்களிடம் சென்று, கடற்கரையில் நடந்ததைச் சொன்னாள். குழந்தைகளே! உங்கள் தந்தை உங்களுடைய பெரியம்மாவிடம் மிகவும் பிரியமாக இருக்கிறார். அதனால் என்னை உதாசீனம் செய்கிறார். அவளை அவமானப்படுத்தி பழிவாங்க எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. போட்டியில் நான் வெற்றி பெற்றாக வேண்டும். உச்சைசிரவஸ் என்ற குதிரையின் வால் கறுப்பாக வேண்டும். நீங்கள் மனம் வைத்தால் முடியும் என்று தனது வஞ்சகத் திட்டத்தைக் கூறினாள்.

கத்ரு கூறியதைக் கேட்ட பாம்புகள் தமது பெரியம்மாவிற்கு ஏற்படும் துன்பத்தை உணர்ந்து தாய் கத்ருவின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள

வில்லை. இதனால் கோபம் கொண்ட கத்ரு தன் பிள்ளைகளுக்கு சாபம் கொடுத்தாள். நீங்களே உங்கள் குழந்தைகளை உண்டு அழிந்து போவீர்களாக என்று சபித்தாள் கத்ரு தேவி,

கார்க்கோடகன் என்ற மகன் துடித்தெழுந்தான். "தாயே! சாபமிடாதீர்கள். உங்கள் திட்டத்தை நான் நிறைவேற்றி வைக்கிறேன்'' என்று புறப்பட்டு வெள்ளைக் குதிரையின் வாலைச் சுற்றிக்கொண்டு தன் விஷ மூச்சினால் அதைக் கருப்பாக்கினான். தேவேந்திரன் மறுமுறை கடற்கரை வழியே வந்தபோது கத்ரு, விநதைக்குக் குதிரையின் வாலைச் சுட்டிக் காட்டினாள். "அந்த வால் வெளுப்பா, கருப்பா! இப்போது சொல்லுங்கள்'' என்றாள். சந்தேஹமில்லை, கருப்புத்தான் என்று கூறினாள்.

சபதத்தில் தோற்ற விநதையும், அவள் மகன் கருடனும் கத்ருவிடம் அடிமையாகித் துன்பப்பட்டனர். பொறுமை இழந்த கருடன் தன் தாயிடம் சென்று, "தாயே! பாம்புகளின் தொந்திரவும், துன்புறுத்தலும் எல்லைமீறிப் போகின்றதே. இதற்கு விமோசனமே இல்லையா'' என்றான். இதனைக கேட்ட விநதை மிகவும் வருந்தி, எனக்காக நீ துன்பப்படுவது சரியில்லை. எப்படியாவது உன் சிற்றன்னையின் காலில் விழுந்தாவது உனக்கு விடுதலைப் பெற்றுத்தருவேன் என்றுகூறி. அதன்படியே கத்ருவிடம் சென்று காலில் விழுந்து பிள்ளைக்கு விடுதலை தருமாறு வேண்டினாள். அப்படியானால் ஒரு காரியம் செய்யவேண்டும். அது என்னவென்றால் தேவலோகத்தில் உள்ள அம்ருதகுடத்தைக் கொண்டுவந்து கொடுத்தால் உங்கள் அடிமைத்தனம் நீங்கும், அதுவரையில் இல்லை என்றாள் கத்ரு.

விநதை மகனிடம் சென்றுரைத்தாள். இதனைக் கேட்டு மகிழ்ந்த கருடன் இறைவனை வணங்கி, தேவருலகம் சென்றான். பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட அமிருத கலசம் தேவர்களது உடமை. அதைக் கருடன் எடுப்பதைக் கண்ட இந்திராதி தேவர்கள் வெகுண்டெழுந்து போரிட்டார்கள். அத்தனைப் பேரையும் அடித்து வீழ்த்திவிட்டு அமிர்த கலசத்துடன் புறப்பட்டான் கருடன். செய்வதறியாது திகைத்துநின்ற இந்திரனிடம், 'கவலை படாதே, அமிர்தத்தை உண்ணும் உரிமை என் சிற்றன்னைக்குக் கிடையாது. எனவே, அவள் கண்ணில் குடத்தைக் காட்டிவிட்டு மறுபடியும் இங்கேயே கொண்டுவந்து சேர்த்துவிடுகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான் கருடன்.

பூலோகத்தில் குடவாயிலுக்கு அருகே கருடன் பறந்து வரும்பொழுது மகாபயங்கரன் என்ற அசுரன் எதிர்பட்டான். அந்த அசுரன் அவ்விடத்தில் நெடுங்காலமாக தவம் இயற்றிக்கொண்டு இருந்தான். தனது தவத்தை மெச்சி தேவர்களே அமிர்தத்தை கருடன் மூலமாக தனக்கு அனுப்பி இருப்பதாக எண்ணி மகிழ்ந்தான். தன்னைத் தாண்டிச் சென்ற கருடன் அமிர்தம்

கொடுக்காமையால் ஏமாற்றமடைந்து கோபம் கொண்டு கருடனுடன் போரிட்டான். போர் செய்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு அருகில் இருந்த புற்றின் மேல் தர்பைகளைப் பரப்பி அதில் அமிர்தகலசத்தை வைத்தான் கருடன். அசுரனுக்கும் கருடனுக்கும் கடும்போர் நடைபெற்றது. அசுரனை அழித்த கருடன் வெற்றியுடன் அமுத கலசத்தை எடுக்க, அக்கலசம் புற்றிலே புதைந்து கொண்டு இருந்தது. இதனால் கோபம் கொண்ட கருடன் தனது மூக்கினால் அந்தப் புற்றை பிளந்தும் கால்களால் இடித்தும் தள்ளினான். அங்கே அமிர்தக்குடமிருந்தது. அது அமிர்தலிங்கேஸ்வரர் திருக்கரத்தில் இருந்தது. அதைக் கண்டதும் கருடன் பக்தி மேலிட ஆனந்தக் கண்ணீர் மல்க விழுந்து தொழுது எழுந்தான். சுவாமி இது என்ன திருவிளையாட்டு? என்று கேட்க எம்பெருமான் "பட்சிராஜனே" உன் மூலம் நான் வெளியுலகத்திற்கு தெரிய வேண்டும் என்று எண்ணினேன். இதற்காகவே உன்னை இங்கு வரவழைத்து உங்கள் அடிமைத்தனத்தை நீக்கவும் திட்டமிட்டேன். இதன் காரணமாகவே தேவர்களுடன் செய்த போரில் வெற்றி பெற்றாய். அரக்கனை கொன்றதும் என் சித்தமே. அநேக ஆயிரம் வருடங்களாக நான் இப்புற்றுக்குள் இருக்கிறேன். இந்த இடம் உன் முயற்சியால் ஓர் ஆலயமாகத் திகழ வேண்டும். எனவே இந்த அமிர்த கலசத்தை கத்ரு விடம் தந்து உன் அன்னையை மகிழ்வித்துவிட்டு பின்னர் உன் பெற்றோரை வணங்கி அவர்களிடம் விடைப் பெற்றுக் கொண்டு இங்கே வா? என்று கூறி அமிர்த கலசத்தைக் கருடனிடம் தந்தார் கங்காதரன்.

அதை எடுத்துக்கொண்டு அன்னையிடம் சென்றான் கருடன். இருவரும் கத்ரு தேவியிடம் சென்று அமிர்தகலசத்தைக் கொடுத்தார்கள். அமிர்த கலசத்தைப் பெற்ற கத்ரு மகிழ்ந்து, உங்களுக்கு இனி விடுதலை என்று கூறினாள். அமிர்தத்தைப் பருகுவதற்குமுன் ஸ்நானம் செய்வதற்காகச் சென்ற கத்ரு திரும்பிவந்து காணும்போது அமிர்த கலசம் மறைந்திருந்தது. அதனை இந்திரன், வாயுபகவான் மூலமாக தேவருலகம் எடுத்துவந்து பத்திரப் படுத்திவிட்டான். விடுதலை பெற்ற விநதையும், அவள் மகன் கருடனும் மகிழ்ச்சியடைந்தனர். கோணேசப் பெருமானின் அருளாணைப்படி அமிர்த க்ஷேத்திரத்திற்கு வந்துசேர்ந்தான், கோணேசரது விருப்பப்படி பிரகாரங் களோடும், மண்டபங்களோடும் ஆலயம் அமைத்து வழிபட்டார். இவர் வணங்கிய தலமே கோணேஸ்வரர் ஆலயம் என்றும், குடவாயிற்கோட்டம் என்றும் பெயர் வரலாயிற்று.

மேலும் குடவாயிலில் உள்ள அமிர்த தீர்த்தத்தின் பெருமையை தல புராணம் சிறப்பாகப் பேசுகிறது. அமிர்த தீர்த்தமான குடவாயில் திருக் குளத்தின் பெருமையை விவரிக்கும்படி நைமிசாரண்ய முனிவர்கள் ஆவலுடன் கேட்க சூதர் சொல்வது போல் பல சிறுகதைகள் ஸ்தல புராணங்களில் கூறப் பட்டுள்ளன.

திருக்குளத்தின் மகிமை:

கங்கை முதலான ஒன்பது நதிகளுக்கு திடீரென்று ஒரு கவலை ஏற்பட்டது. எல்லோரும் நமது நீரில் மூழ்கித் தங்கள் பாவங்களைக் கரைத்துக்கொள்கிறார்களே. அந்த பாவ மூட்டைகளை நாம் சுமந்து செல்வதால் நாம் பாவம் சேர்த்துக்கொள்கிறோமே, அந்த பாவங்களை எப்படித் தொலைப்பது? இந்தக் கேள்வியுடன் கங்கை காவேரி, கோதாவரி, யமுனை, நர்மதை, பாலாறு, சரஸ்வதி, சரயு, கன்யாகுமரி ஆகிய ஒன்பது நதிகளும், சிவபெருமானிடம் சென்றனர். பரமேச்வரன் அவர்களைக் கன்னிகைகளாக மாற்றி காவிரியின் தென்கரையிலுள்ள மூன்று புண்ணிய தீர்த்தங்களில் நீராடி பரிசுத்தமாகும்படி அருளினார். அவ்வாறு ஸ்நானம் செய்யவேண்டிய நல்ல நேரத்தையும், வேளையையும் அவரே கூறியருளினார்.

சூரியன் கும்ப ராசியிலும், குரு சிம்ம ராசியிலும் சந்திரன் மக நட்சத்திரத்திலும் விளங்கும் காலத்தில் அந்த மூன்று தீர்த்தங்களிலும் முழுகுங்கள். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை குரு சிம்ம ராசியில் இருக்கும் காலத்தில் மூன்று தலங்களிலும் மாசி மாதம் முழுவதும் தங்குங்கள் என்று கூறினார். கன்னிகைகளாக மாறிய ஒன்பது நதிகளும், முதலில் கும்பகோணம் சென்று மகாமகக் குளத்தில் நீராடி. அடுத்து தென்கிழக்கேயுள்ள கலசநல்லூர் என்ற சாக்கோட்டைக்குச் சென்று அங்குள்ள சிவ தீர்த்தத்தில் நீராடினர். இறுதியாக குடவாயில் அமிர்த தீர்த்தக் கரைக்கு வந்தனர். திருக்குளத்தில் இறங்கி நீராடத் தொடங்கியதும் அந்த நீர் வற்றிவிட்டது. நதிக் கன்னியர் பெரும் துயருற்றனர். எங்கள் பாவம் நீங்க வழியென்ன? அமிர்த் தீர்த்தத்தை மீண்டும் எப்போது காண்போம் என்று ஏங்கினர். கோணேசப் பெருமானிடம் சென்று முறையிட்டனர்.

அப்போது வானில் ஓர் ஒலி முழங்கியது. "புண்ணிய நதிகளே, கவலைப்படவேண்டாம். நீங்கள் செய்த ஒரு சிறு தவற்றினால் அமிர்த தீர்த்தம் வற்றிவிட்டது. நீங்கள் முதலில் அமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யத் தவறிவிட்டீர்கள். இந்திரியங்களில் கண்போன்று, வடக்கு முகம் முக்கியமானது. அமுத குடத்தின் முகமாகிய கோணேசரை வணங்கிவிட்டு அமிர்த தீர்த்தத்தில் முழுகிவிட்டு, பின்னர் நடுப்பாகமான கலசநல்லூரிலும், அடிப்பாகமான கும்பகோணத்திலும் வழிபடவேண்டும். இந்த முறையை மறந்துவிட்டதால் உங்களுக்கு அமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும் பேறு கிட்டவில்லை. தற்போது அதை உணர்ந்துவிட்டீர்கள், ஆதலால் அமிர்த தீர்த்தம் பொங்கிப் பெருகும். அதில் ஸ்நானம் செய்துவிட்டு, கோணேச சுவாமிக்கும், பிருகத்துர்காம்பாளுக்கும் அர்ச்சனை செய்து, மலர் மாலைகளைச் சாத்துங்கள், திருக்குளக் கரையில் இருக்கும் ஆதிகஜானனருக்கு மோதகம் படைத்து அன்னம் நிவேதனம் செய்யுங்கள்" என்று கூறியது.

ஆகாசத்தில் பிறந்த அருட்கட்டளையின்படியே நதி தேவதைகள் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மூன்று தீர்த்தங்களிலும் முறையாக ஸ்நானம் செய்து தங்கள் பாவங்களைப் போக்கிக்கொண்டு வருகின்றனர். அந்தந்த ஊரிலுள்ள தீர்த்தங்களுக்குச் சிறப்புக்கள்கூறி, புண்ணியங்கள் சேர்த்து அத்திருக்குளங்களை நாம் பாதுகாக்கவேண்டும் என்பதுதான் நமது முன்னோர்களின் கருத்தாக இருந்திருக்கவேண்டும். தலப் புராணங்களைப் படித்தறிந்து, தலப் பெருமைகளை நன்கு உணர்ந்து பக்தியையும், நம்பிக்கையையும் வளர்த்துக்கொண்டால் நம் ஆலயங்களின்மீது நமக்கு அக்கறை பிறக்கும்.

தலபுராண மகிமை

பண்டைக்காலத்தில் இத்தலத்தில் கௌசிகர் என்ற சிவ பக்தர் வசித்து வந்தார். நன்நெறியில் நாட்டம் கொண்டவர் அவர். சிவனடியார்களுக்குச் சேவை செய்வதையே வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டவர். ஆனால் அவருக்கு மனைவி ஒழுங்காக வாய்க்கவில்லை. சிவனடியார்களை வேஷதாரிகள் என்று ஏசுவாள். சிவன் எங்கே இருக்கிறார்? அப்படி ஒருவர் இருந்தால் என் எதிரில் வந்து பேசட்டுமே என்று விதண்டாவாதம் செய்வாள். தீர்த்த ஸ்நானங்களால் யாதொரு பயனுமில்லை. தல புராண நிகழ்ச்சிகளெல்லாம் கட்டுக்கதைகள் என்று பழிப்பாள்.

வடதுருவம், தென் துருவமான இத்தம்பதியருக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் தந்தையைக் கொள்ளாமல் தாயைக் கொண்டான். வட்டிக்குப் பணம் கொடுத்துப் பெரும் பணக்காரனானான். நடத்தை கெட்டு மகாபாவியாக வாழ்ந்தான்.

சிவ பக்தியில் சிறந்த கௌசிகருக்கு இப்படி ஒரு மனைவியும், மகனும் எப்படி வாய்த்தார்கள்? நியாயமான கேள்விதானே! இந்த சந்தேஹத்தை சனகாதி முனிவர்கள் கதை சொல்லும் சூத பௌராணிகரிடம் கேட்க, முக்காலமும் அறிந்த மாமுனி அதற்கான காரணத்தைச் சொல்லுகிறார்,

கடந்த பிறவியில் கௌசிகர் காஷ்மீரத்தில் ஓர் அந்தணராகப் பிறந்திருந்தார். சிவராத்திரியன்று சிவகதை கேட்பதற்காக அவர் ஆலயத்திற்கு செல்லும் நேரத்தில் இருட்டில் எதிரே வருவது யார் என்று தெரியாமல் ஒரு விலைமாதின் மீது முட்டி மோதிக்கொண்டார். சிவகதை கேட்கச் செல்லும் போது அந்நியப் பெண்ணொருத்தியின்மேல் மோத நேர்ந்து விட்டதே! பெரியதொரு பாவத்திற்கு ஆளாகிவிட்டேனே என்று வருந்தினார் அவர்.

அவருடைய தோழர்கள் அவரை இழித்தும் பழித்தும் பேசினார்கள். அது அவர் நெஞ்சை உறுத்தியது. கோவிலில் சிறுகதை கேட்டுக்கொண்டிருந்தாலும் நடந்த நிகழ்ச்சியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார். அடுத்த

சில தினங்களும் எல்லா காரியங்களையும் மறந்து தாசியின் நினைவிலேயே நேரத்தைக் கழித்தார். அவரது மதிமயக்கத்திற்கு காரணம் என்ன என்று அறிந்த அவர் மனைவி, தாசியின் வீட்டிற்கு சென்று கணவனின் சுகமே தன் சுகம் என்று கருதிய பதிவிரதையாகிய அவள் தாசிப் பெண்ணிடம் மன்றாடித் தன் இல்லத்திற்கு அழைத்து வந்தாள். கணவனின் ஆசை தணிந்தது.

ஆனால் விரைவிலேயே அக் கணவன் தன் பாவத்தை உணர்ந்தான். அப்பாவத்தைப் போக்கிக்கொள்ள இராமேச்வரம் சென்று அங்குள்ள புண்ய தீர்த்தங்களில் நீராடினான். புனித நீராடியதாலும், சிவராத்திரியன்று சிவன் கோயிலுக்குச் சென்று, சிவகதைக் கேட்டதாலும், அவன் மந்தாரவனம் என்ற அமிர்த தலமாகிய குடவாசலில் வந்து பிறந்தான். இருப்பினும் சிவராத்திரி யன்று தாசியின் தொடர்பு ஏற்பட்டு சிறிது காலம் அவன் மதிமயக்கத்தில் இருந்ததால் அந்த பாவத்தின் பலனாக அடுத்த பிறவியில் அவனுக்கு மனைவி யும் மகனும் பாவிகளாக வந்து வாய்த்தார்கள். இது கௌசிகரின் முற்பிறவி யைப் பற்றி சூதர் சொன்ன கதை.

இம்மாதிரி கதைகளை படிக்கும் போது ஓர் உண்மை புலனாகிறது. புண்ணியம் செய்வதால் நாம் செய்யும் பாவம் முழுவதும் தொலைந்துவிடுவ தில்லை. புண்ணியம் அதிகம் செய்யச் செய்ய அதன் பலன் அதிகமாகி பாவத்தின் விளைவுகள் நம்மைத் தீவிரமாகத்தாக்காமல் செய்துகொள்ளலாம் அவ்வளவுதான். இயற்கையின் நியதிப்படி, கொஞ்சம் பாவம் செய்தாலும் அதன் பலன் பன்மடங்காகிறது. மிக அதிகமாகப் புண்ணியம் செய்தாலும் அதன் பலன் பன்மடங்காகிறது. அதனால்தான் நல்வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் நாம் நிறைய புண்ணியங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டு மென்று நமது சமய நூல்கள் கூறுகின்றன.

முற்பிறவியில் செய்த தீவினையால் அடுத்த பிறவியில் கௌசிகருக்கு மாபாவியாக ஒரு மகன் பிறந்தாலும், தந்தை செய்த புண்ணியத்தின் பலனாக இறுதியில் அவன் தன்னையுமறியாமல் ஒரு நற்பணி புரிந்து, ஸ்ரீ கோணேசப் பெருமான் அருளால் நற்கதி பெற்றான். குழந்தைகள் நன்றாக வாழவேண்டு மென்றால் பெற்றோர் நிறைய புண்ணியம் செய்திருக்கவேண்டும். "தர்மம் தலைகாக்கும்" என்ற பொன்மொழிக்கு "நாம் செய்யும் நல்ல காரியங்கள் நம் தலைமுறைகளைக் காக்கும்" என்பதுதான் உண்மையான பொருளாக இருக்க முடியும்.

தகாத முறையில் பணம் சம்பாதித்து பெரும் பணக்காரனாகிவிட்ட கௌசிகரின் மகன் ஒரு கொத்தனாருக்குக் கடன் கொடுத்திருந்தான். அவன் அக்கடனைக் குறித்த காலத்தில் கொடுக்காமல் ஏமாற்றிவந்தார். இந்தக் கொத்தனாரை, ஒரு சிவ பக்தர் ஸ்ரீகோணேசமூர்த்தி ஆலயத்தில் திருப்பணி செய்ய வேலைக்கு அமர்த்தியிருந்தார். அவரும் இடிந்துபோன இடத்தைப்

பழுது பார்த்துக்கொண்டிருந்தபோது கௌசிகரின் மகன், கொத்தனாரிடம் "எத்தனை நாட்களாக என்னை ஏமாற்றி வருகிறீர்கள்? என் கடனை இந்த நிமிஷமே திருப்பிக்கொடுத்துவிட்டு மறுவேலையைப் பார்" என்று கையைப் பிடித்து இழுத்தான். அதற்குக் கொத்தனார், "ஐயா! சற்று பொறுங்கள். கையில் உள்ள கல்லை வைத்து கட்டிமுடித்துவிட்டு, சிவ பக்தரிடம் சென்று சம்பளத்தை வாங்கித் தங்களுக்குச் சேரவேண்டிய வட்டியையாவது தந்து விடுகிறேன். திருப்பணி வேலையில் ஈடுபட்டிருக்கும் என்னைத் தடுக்காதீர்கள்; அது மகாபாவம்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

கடன் கொடுத்தவனுக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. அந்த வேலையை நான் செய்கிறேன். இந்தக் கல்லை நான் வைத்துக் கட்ட மாட்டேனா? நீ முதலில் எழுந்துபோய் அவரிடம் பணம் கேட்டு வாங்கி வா" என்று கொத்தனாரின் கையைப் பிடித்து இழுத்து விட்டுவிட்டு அவர் கையில் இருந்த கல்லை வாங்கித் தான் கட்டத் தொடங்கினான்.

கொத்தனாரை கசக்கிப் பிழிந்த கௌசிகரின் மகனையும், வாங்கிய கடனைத் திருப்பித் தராமல் ஏமாற்றிய கொத்தனாரையும் அழைத்துப்போக எமதூதர்கள் வந்தார்கள். இவ்விருவரையும் கைலாசத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஆலயத் திருப்பணியில் ஈடுபட்டதால் கொத்தனாருக்கும் காரணம் எதுவாக இருப்பினும் தன் கையால் அத் திருப்பணிக்கு ஒரு கல்லை எடுத்து வைத்த கௌசிகரின் மகனுக்கும் நற்கதி கிடைத்தது.

கோணேச சுவாமியின் சந்நிதியில் திருப்பணி செய்ய நினைத்தவர் சிவனாவார். திருப்பணிக்கென ஒரு கூடை மண்ணேனும், கல்லேனும் கொடுத்தவர் கயிலையிற் சிவனாய் விளங்குவார். கோணேசர் ஆலயத்தில் புல்பூண்டு களைக் களைபவர் செல்வத்துடன் வாழ்ந்து முக்தராவார்.

இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை பெற்ற சங்க இலக்கியங்கள், பிற்கால இலக்கியங்கள் வாயிலாகக் குடவாயில் எனும் ஊரின் பெருமைகளை உணர்ந்தோம். அதுபோன்று புராண இலக்கியங்களில் அவ்வூர் பெற்ற சிறப்புக்களையும் கண்டோம். குடவாயில் எனும் பழம்பெருமையை உடைய ஊர் பிற்காலத்தில் குடவாசல், கொடவாசல் என்றெல்லாம் திரிபு பெற்று அழைக்கப்பெறுகிறது. இத்தகைய பெருமைகளுக்கும் காரணமாகத் திகழும் இவ்வூர் பற்றிய சம்ஸ்கிருத மொழியில் அமைந்த பழைய ஏட்டுச் சுவடியான கோணேஸ்வர மாஹாத்மியத்தின் சிறப்பையும், அதன் மொழி யாக்கத்தையும் இனி காண்போம்.

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

शैवपुराणे

॥ घोणेश्वरमाहात्म्यम् ॥

वारणाननमुदारतेजसं
वासुदेवसहजासमुद्भवम् ।
पाकशासनमुखामरैर्नुतं
भावयामि सततं विनायकम् ॥

ओं दक्षिणामूर्तये नमः ॥

॥ श्रीशौनकः ॥

सर्वाश्चर्यमयं स्थानं सर्वलोकैकपावनम् ।
सर्वपापप्रशमनं सर्वैश्वर्यफलप्रदम् ॥

तपस्सिद्धिकरं पुण्यं मनःप्रह्लादकारणम् ।
कलिध्वंसकरं पुण्यं तापत्रयनिवारणम् ॥

अस्ति चेत् स्थानमतुलं दिव्यर्षिगणसेवितम् ।
आश्चर्यबहुभिर्युक्तं तीर्थैश्च बहुलैर्युतम् ॥

वद सूत महाबुद्धे सर्वलोकनमस्कृतम् ।
अष्टादशपुराणानां वेत्ता त्वं हि महामते ॥

त्वत्तः श्रुतानि बहुशः पुराणानि कृपानिधे ।
कृपां कृत्वा मयि ब्रह्मन् शिष्यभूतस्य मे प्रभो ॥

---

* B. 11324 / D. No. 9702 T. M. S. S. M. Library, Thanjavur.

कुम्भघोणमिति प्रोक्तं त्वया पूर्वं कथान्तरे ।
सङ्ग्रहेणैव विस्तारात्प्रोक्तं विस्तरशो वद ॥

कुम्भस्य कारणं किन्नु घोणस्य च विशेषतः ।
वद पश्यंस्तुवन्ब्रूहि त्वत्कथारसपायिनः ॥

रोमहर्षण नाम्नश्च सर्वज्ञत्वस्य चैव हि ।
सदृशस्तव नास्त्येव कोऽपि भूमौ द्विजोत्तमः ॥

सूतः

यस्तु जन्म सहस्रेभ्यो मनोवाक्कायकर्मभिः ।
सदाचारान्वितः कृत्वा पुण्यस्थानेषु सर्वथा ॥

वासं कृत्वा पुरा गौरीतीर्थेऽस्मिन्नमृताह्वये ।
इह लोके सुखी भूत्वा पश्चाच्छिवमवाप्नुयात् ॥

ब्रह्माद्या देवतास्सर्वे ऋषयो ये च वैष्णवाः ।
यक्षराड्गुह्यकाश्चैव देवा नार्यस्तथैव च ॥

वासं कृत्वा महातीर्थे ययुः योगानहर्निशम् ।
तस्मात्पुण्यतमं वक्ष्ये घोणेशस्य प्रभावतः ॥

त्वत्स्नेहपरवशोऽहं वक्ष्ये श्रृणु महामते ।
धन्योस्म्यनुगृहीतोऽस्मि त्वद्वाक्यस्मारितो यतः ॥
त्वं हि धन्यतमः श्रेष्ठः त्वयाहं धन्यतां गतः ।

अनाद्यंतमनौपम्यमप्रतर्क्यमगोचरम् ।
अवेद्यमतिगुह्यश्च कार्यकारणवर्जितम् ॥

ब्रह्म यद्वस्तु परमं तद्भजे चित्तशुद्धये ।
यत्त्वया प्रश्नरूपेण प्राथितं तद्वदाम्यहम् ॥

जगत्येकार्णवीभूते नष्टे स्थावरजङ्गमे ।
सुधासंपूरितं कुम्भं जगत्कारणकारणम् ॥

चचार जलधौ तस्मिन्प्रलयोदकमध्यमे ।
तत्तु कालान्तरे दैवात्पुराणपुरुषोत्तमः ॥

त्रिधाभूतं द्विजश्रेष्ट त्रिस्थानेषु निपातितम् ।
पृष्ठं घोणं च मध्यञ्च प्रत्येकं लिङ्गसंज्ञितम् ॥

तन्मध्यंकुम्भमाहात्म्यं उक्तं पूर्वप्रसङ्गतः ।
पञ्चकोशप्रमाणे तु वन्हिदेशे महामते ॥

पतितं घोणसंज्ञं च कलशं च सुधामयम् ।
पश्चिमाभिमुखं लिङ्गं सुधाकुण्डस्य पूर्वतः ॥

तद्दृष्ट्वा मुच्यते पापैर्ब्रह्महत्यादिभिर्नरः ।
तं दृष्ट्वा घोणनाथाख्यं कुम्भेशं पश्यति स यः ॥

स याति नरकं घोरं भतिलङ्घनदोषतः ।
तस्मात् वारक्रमेणैव दर्शयेद्देवमीश्वरम् ॥

शौनकः

सन्देहस्तु महान्काश्चिद्वर्तते मम तद्वद ।
संशयच्छेदकः त्वं हि नान्योस्ति जगतीतले ॥

लिङ्गस्यादर्शनादोषात् जायते कथमद्य वै ।
न मया श्रुतपूर्वं तु वद दोषो भवेद्यदि ॥

सूतः

एतदेवपुरा विप्रं ब्राह्मणं परमेष्ठिनम् ।
सनत्कुमारः पप्रच्छ सन्देहस्य निवृत्तये ॥

ब्राह्मणाय तदा प्रोक्तमितिहासं पुरातनम् ।
तच्छृणुष्व महाभाग बह्वृचानाञ्च अग्रणीः ॥

पुरा कृतयुगे विप्र गौतमीतीरसंश्रुतः ।
पर्णाशनो महाप्रज्ञः तस्य पुत्रस्तृणाशनः ॥

स्वगुरुं पूजयामास मोक्षार्थं यत्नपूर्वकम् ।
संसारो द्विग्नचित्तस्सन् पुत्रदारादिचिन्तया ॥

कथं मोक्षो भवेन्मह्यमिति चिन्तापरस्तदा ।
रोमश्चितगुरुं प्राप्य तपसा दीप्ततेजसम् ॥

कोटिसूर्यप्रतीकाशं चन्द्रकोटिसुशीतलम् ।
रुद्राक्षमालाभरणं जटामकुटमण्डितम् ॥

भस्मोद्धूलितसर्वाङ्गं त्रिपुण्ड्रांकितमस्तकम् ।
व्याघ्रचर्मपरीधानं कुण्डिकामक्षमालिकम् ॥

गजचर्मपरीधानं द्वितीयमिव शङ्करम् ।
विष्टरे सुखमासीनं प्रणम्य भवभेषजम् ॥

तस्य दर्शनमात्रेण रोमाञ्चिततनुर्भृशम् ।
धन्योऽहमिति निश्चित्य गुरवे स व्यजिज्ञपत् ॥

स्वामिन्गुरो नमस्तुभ्यं कृपालो भक्तवत्सलम् ।
त्वद्दर्शनामृतास्वादघनरोमाञ्चकञ्चुकः ॥

यत् कृत्वा मोक्षमाप्नोति तद्विचार्य विधीयताम् ।
संसारसागरे नित्यं मग्नः पापेन कर्मणा ॥

पुत्रदारादिभिर्जुष्टे पापैकनिरतः सदा ।
न किञ्चिदत्र पश्यामि पुरुषार्थैकसाधनम् ॥

दारिद्र्यञ्च धनाढ्यत्वं विनियोगः त्वमेव च ।
पुनर्दुःखप्रवेशश्च सन्तोषातिशयः क्वचित् ॥

पुत्रप्राप्तिर्विपत्तिश्च मरणं व्याध्युपद्रवम् ।
आलस्यञ्चैव निद्राञ्च ह्यमङ्गलं तथैव च ॥

परसेवाविधानञ्च तदुपाश्रयमेव च ।
अनेकदुःखावर्त्तश्च सङ्कटे विषमे तथा ॥

क्लिष्टोऽस्मि बहुधा ब्रह्मन् ब्रूहि कोष्टं कथं मम ।
त्वमेव गतिरस्माकं त्वत्तोऽन्यं च नचाश्रये ॥

तपसा यज्ञदानैश्च व्रतैश्च विविधैर्विना ।
अस्ति चेत्तदिहोपायंसुलभेन मम प्रभो ॥

इतीरितं निशम्याशु गुरूं प्रति उवाच ह ।
तृणाशन महाभाग वक्ष्ये श्रृणु महामते ॥

सर्वे धर्माश्च सापाया लोके सृष्टाश्च मानवैः ।
निरपायं प्रवक्ष्यामि सर्वलोकैकसम्मतम् ॥

तीर्थयात्रां कुरु ब्रह्मन्मुक्तिर्भवति नान्यथा ।
यानि मुक्तिप्रदानानि स्थानानि द्विजपुङ्गवे ॥

तत्र गत्वा महाभाग स्नात्वा तीर्थे विधानतः ।
तत्रस्थमैश्वरं लिङ्गं दृष्ट्वा नत्वा च भक्तितः ॥

प्रदक्षिणादिकां कृत्वा दानानि च विशेषतः ।
कुरु शीघ्रं महाबुद्धे नोचेन्मुक्तिस्तु दुर्लभा ॥

अनुज्ञातस्त्विदानीं च कृपा त्वयि मया कृता ।
तत्र श्रुत्वा वचस्तस्य मधुरं रोमहर्षणम् ॥

तीर्थयात्रां समारेभे कर्तुं संसारभीषणम् ।
प्रथमं नैमिशारण्यं गत्वा तत्र महेश्वरम् ॥

नत्वा कृताञ्जलिर्भूत्वा स्तोत्रेणैव स्तुवन्हरम् ।
गयां गत्वा प्रयागं च पुष्करं रोमहर्षणम् ॥

क्षुरभाण्डेश्वरं चैव ततः कार्कोटकेश्वरम् ।
गोमुखं चैव गोकुण्डं राक्षसेश्वरमेव च ॥

पिशाचेश्वरसंज्ञं तद्गन्धर्वेश्वरमेव च ।
कालीश्वरं हैमवन्तं चक्रधारमतः परम् ॥

प्रभासं ज्ञानकुण्डं च कपिलातीर्थमेव च ।
खड्गतीर्थं गदातीर्थं गोकर्णेश्वरमेव च ॥

गोवर्धनं क्षिप्रसारं पापमोचनमेव च ।
कृष्णवेणीं ततः प्राप्य श्रीपर्वतमतः परम् ॥

श्रीकालहस्तीनगरं पुरुषोत्तममेव च ।
कृष्णतीर्थं ततः प्राप्य ततो ज्ञानेश्वराभिधम् ॥

कामं वेगवतीं चैव शेषतीर्थं ततः परम् ।
शोणाचले बिलाकेशं गोपर्वतमेव च ॥

कुबेरीश्च ततः प्राप्य तत्तीरस्थानि यानि च ।
जप्येश्वरं महापुण्यं प्रयाणेश्वरमेव च ॥

ततश्च राक्षसो भूत्वा भ्रान्तचित्तोऽविचक्षणः ।
पिशाचवत् चचारासौ कमलङ्कनशोषितः ॥

त्रिरात्रं क्षुत्पिपासार्तः कृत्याकृत्यविवर्जितः ।
अनेक पुण्यतीर्थेषु स्नातस्य च महात्मनः ॥

विपरीतात्मगमनादाशातीर्थस्य दर्शनात् ।
तस्मिन्नवसरे दैवान्नारदो विष्णुतत्परः ॥

वीणावादरतो भूत्वा द्वितीय इव भास्करः ।
प्रविवेश सुधाकुण्डं लोकोपकरणाय वैं ॥

ततस्त्वेनं ददशाग्रे भ्रान्तचित्तं शुचान्वितम् ।
दृष्ट्वा कृपालुः प्रोवाच सुधामधुरया गिरा ॥

सोपि तद्दर्शनाह्लादः शान्तचितः प्रसन्नधीः ।
नमस्कृत्वाऽञ्जलिं कुर्वन्स्वदुःखं समुवाच ह ॥

स्वामिन्नहं महाघोरे संसारे परिपीडितः ।
मोक्षार्थी तीर्थसेवी च नानातीर्थमवारिषम् ॥

अस्य स्नानस्य माहात्म्यं श्रुत्वा महदिति प्रभो ।
स्नानार्थमागतोऽहं वै संसारविनिवृत्तये ॥

क्षेत्रपालं नमस्कृत्य स्नानश्चामृतकुण्डके ।
कृतवान् भक्तिपूर्वेण निर्मलेऽस्मिन्सुधाजले ॥

तीरमारुरुक्षुस्तस्मिन् तत एवंमभून्मम ।
चित्तभ्रान्तिः मनस्तापः अज्ञानं दुष्टजं तथा ॥

क्रूरश्च हृदयं जातं न जाने कस्य वा फलम् ।
ईदृशस्य मम ब्रह्मन्ब्रूहि पापस्य कारणम् ॥

च्छायाग्निनश्च मत्तस्य तालमूलस्थितस्य च ।
तत्फलं पतितं यद्वा शिरोमध्येप्यतिष्ठितः ॥

तद्वेतं मम सञ्जातं यत्कृतं पापमुल्बणम् ।
तत्सर्वमद्य नष्टं मे त्वत्पादाम्बुजदर्शनात् ॥

इत्यूचमानं विप्रेन्द्रं नारदं प्रत्युवाच ह ।
तृणाशन महाभाग माभैषीः कारणं श्रृणु ॥

तव मुक्तिर्भवेत्सद्यो घोणेऽस्मिन्नात्र संशयः ।
पूर्वं घोणेश्वरं दृष्ट्वा सुधाकुण्डे निमज्य च ॥

सोमपुष्करणीं गत्वा स्नात्वा सम्यक् यथाविधि ।
पश्चात् कुम्भेश्वरं दृष्ट्वा मुक्तो भवति मानवः ॥

अन्यथा रौरवं याति श्वानयोनौ च जायते ।
तद्रहस्यमवाच्यञ्च कारणं यस्य कस्य चित् ॥

तस्य पुण्यवतां श्रेष्ठ तस्मादेतांदृशी स्थितिः ।
प्रायश्चित्तं प्रवक्ष्यामि तव पापविमुक्तये ॥

शिवस्योत्तरदिग्भागे धनुष्पञ्चशतोत्तरे ।
अग्निकुण्डमहातीर्थं पापबीजविदाहनम् ॥

ज्ञानाज्ञानकृतं पापं कर्मजं ज्ञानजं तथा ।
नश्यति स्नानमात्रेण नात्र कार्य विचारणा ॥

आचारं लङ्घनं दोषमस्वार्याणामस्ति लङ्घनम् ।
दर्शनं नाशमायाति शिवस्याज्ञाप्रभावतः ॥

कार्तिक्ये कृत्तिका योगे स्नानं कुरु महामते ।
तत्क्षणान्मुच्यसे विप्र नान्यथा जन्मकोटिभिः ॥

अस्य तीर्थस्य माहात्म्यं न भूतो न भविष्यति ।
घोणेशदर्शनं कृत्वा कुम्भेशं च प्रदर्शयेत् ॥

यदि यो मनुजस्तस्य दोषप्राप्ति न जायते ।
तस्मादेतद्विशिष्टं स्याच्छतो भाग्याधिगो भवेत् ॥

अत्र वासं कुरु त्वं च मुक्ता ये द्विजपुङ्गव ।
सर्वस्थानोत्तमं स्थानं घ्रोणं सत्यं वदाम्यहम् ॥

काश्यां कृतानां पापानां घोणस्थाने विमोचनम् ।
घोणे कृतस्य पापस्य घोण एव विमोचनम् ॥

गच्छामीति तमामन्त्र्य ययौ वैकुण्ठमन्दिरम् ।
नारदे च गते तत्र सोपि विप्रं सुदृष्टिभिः ॥

भक्त्याग्निकुण्डं सङ्गम्य स्नात्वा तत्र विधानतः ।
पैशाचान्मुक्तिमापन्नः सायुज्यं प्राप्ति तत्क्षणात् ॥

एवैतदंहःक्षयमाश्रयेत्सदा घोणं महापातकदाववन्हिम् ।
शृणोतिमाहात्म्यमिदं विचिन्त्य स एव धन्याः ॥

इति श्रीशैवे पुराणे कोटिरुद्रसंहितायां क्षेत्रवैभव खण्डे स्थानमाहात्म्ये शौनकसनत्कुमारसंवादे घोणेश्वरमाहात्म्ये स्थानोत्पत्तिकथने अग्निकुण्डमाहात्म्ये ब्रह्मराक्षसमोचनं नाम एकादशोऽध्यायः ॥

ॐ श्रीशौनकः ॥

सूत सूत महाबुद्धे श्रुत्वाख्यानमिदं महत् ।
तृप्तिर्न जायते भूयः श्रोतुमुत्कण्ठते मनः ॥

सुधाकुण्डस्य माहात्म्यं विस्तरेण कृपानिधे ।
आश्रमाणेचयातत्र वदं विस्तरशोऽधुना ॥

कस्मिन्काले नरैस्नात्वा अस्मिन्नमृतकुण्डके ।
आदारेणाहमिच्छामि श्रोतुं लोकोपकारकः ॥

द्विविधाः पुरुषव्याघ्रा लोकोपकृतिशालिनः ।
कुर्वन्ति लोके सञ्चारं तीर्थेन च विशेषतः ॥

आरण्यपर्वताग्रेषु वनेषु च नदीषु च ।
आश्रमान्तरभूमौ च चरन्ति पृथिवीतले ॥

मद्वचो बहुमन्ये त्वां रोमहर्षेणमेव च ।

सूतः —

त्वं हि धन्यतमो लोके ब्राह्मणेषु विशेषतः ।
एतत्स्थानस्य माहात्म्यं वक्तुं श्रोतुंश्च तत्वतः ॥

विष्णुशेषविरिञ्चाद्या न जानन्ति तु वै मुने ।
अस्माभिरुच्यते तत्तु मुखेनैकेन किं वद ॥

तथापि वक्ष्ये किञ्चित्तु यद्व्यासेन समीरितम् ।
गुरुणा बोधरूपेण कृपया परमात्मना ॥

घोणस्थानं मुखद्वारमिति संज्ञाऽभवत्विह ।
वर्तते पूर्वकालात्तु तदेकं सम्भविष्यति ॥

घोणे भेदेन काले तु सुधाधारा विनिस्सृता ।
गर्ते निपतिता तस्मात्सुधाकुण्डमितीरितम् ॥

तस्मिन्स्नाता मनुष्याश्च दुर्ल्लभे दैवयोगतः ।
प्रोक्ष्यन्तेऽमृते पश्चाद्दिवि ब्रह्मयुगावधिम् ॥

विष्णुर्विरिञ्चिः भगवान्सनकाद्याश्च योगिनः ।
ब्रह्मर्षयो नारदाद्याः कपिलाद्यास्सुरर्षयः ॥

विश्वे देवाश्च गन्धर्वदेवदेवेन्द्रपूर्वकाः ।
निवसन्ति सदा नित्यं सुधाकुण्डस्य सन्निधौ ॥

पश्चिमाभिमुखं लिङ्गं सुधाकुण्डस्य पूर्वतः ।
पश्यन्ति ये द्विजा विप्र तेन पश्यन्ति भास्करम् ॥

दृष्ट्वा सुधामयं कुण्डं स्पृष्ट्वा तज्जलमेव च ।
स्नात्वा विमुच्यते पापैकर्मबन्धाद्विमुच्यते ॥

दर्शनाद्ब्रह्महा मुच्येत्स्पर्शनाच्च सुधां पिबन् ।
मज्जनात्सर्वपापेभ्यो मुच्यते नात्र संशयः ॥

मातृद्रोहे कृतं पापं पितृद्रोहकृतं तथा ।
शिवद्रोहकृतं पापं परस्त्रीसङ्गजं तथा ॥

परापवादपैशून्यं जनितं पापमुल्बणम् ।
अभक्ष्यभक्ष्यजं पापं सदा क्रोधोद्भवं तथा ॥

अकर्मकरणञ्चैव वृद्धापत्यं तथैव च ।
परिवेत्रन्नजं दोषं परिवित्तान्नजं तथा ॥

तत्सर्वं नाशयत्येव घोणस्थानस्य दर्शनात् ।
कुलप्रमाणमपि वा यो दद्यात्स्वर्णमुत्तमम् ॥

ब्राह्मणाय दरिद्राय शिवस्थाननिवासिने ।
तस्य पुण्यफलं वक्ष्ये श‍ृणु तद्ब्रह्मनन्दन ॥

इह लोके सुखी भूत्वा पुत्र पौत्रादिसंयुतः ।
शतायुर्जीवसे प्राज्ञो धर्ममेवानुचिन्तयन् ॥

तदन्ते शिवसालोक्यं प्रायश्चित्तं विधीयते ।
गोप्रदानं तु यः कुर्याद्ब्राह्मणाय समाहितः ॥

कामधा कालस्य वशाद्भविष्यति न संशयः ।
गोलोकजनितं सौख्यं भुक्त्वाभोगान्समाहितः ॥

जायमानस्तुपुण्यान्ते चतुर्वेदधरो द्विजः ।
तत्रापि पुत्रपौत्रांश्च लब्ध्वा धनसमन्वितः ॥

पुनश्च कृत्वा दानानि शिवलोकं समेष्यति ।
अयनद्वयोपरागेषु व्यतीपाते तथैव च ॥

विषुद्वये च सङ्क्रामे षडशीतिमुखे तथा ।
दिनच्छिद्रे तथाष्टम्यां कृष्णपक्षे विशेषतः ॥

अमायां पौर्णमास्यां च द्वादश्यां भानुवासरे ।
दूर्वाक्षतफलैस्साधं अनुज्ञाप्य च भैरवम् ॥

सूर्यस्याभिमुखो भूत्वा स्नात्वा मन्त्रमिदं जपेत् ।
सुधारूप नमस्तुभ्यं सुधाकुण्डसमुद्भव ॥

सुधाकुण्डजलस्नानात् पापं नाशय मे प्रभो ।
इति संप्रार्थ्य देवेशं स्नात्वा तीर्थे द्विजोत्तम ॥
देवानांश्च पितृणाश्च ऋषीणां तर्पणानि च ।

कुर्यान्मन्त्रेण तेषाञ्च यस्तावद्द्विजपुङ्गवः ।
तस्य पुण्यफलं वक्ष्ये शृणु ब्रह्मविशारद ॥

ब्रह्मचर्येण ऋषीणां ऋणमुक्तिर्भवेद्यथा ।
तथा मुक्तो भवत्येव ब्रह्मचर्यरतो यथा ॥

सम्यक् गृहाश्रमी भूत्वा पञ्चयज्ञपरायणः ।
देवयज्ञपितृयज्ञनरयज्ञादितत्परः ॥

पुत्रानुत्पाद्य धर्मेण श्राद्धादिकरणेन च ।
मुक्तो ऋणात्पितृणाञ्च यथा स्वर्गं गमिष्यति ॥

एतेषु कर्मस्वासक्तः कुरुते तानि यो द्विजः ।
देवेभ्यो मुच्यते यद्वा ददद्दस्याः द्विमुच्यते ॥

दिनेऽत्र पापकरणं स्थानं नान्यत्र विद्यते ।
अतोऽधिकमिदं स्थानं दर्शनाद्भुक्तिमुक्तिदम् ॥

योऽत्र वासं प्रकुरुते क्षणं वानिमिषं तथा ।
ज्ञानतोऽज्ञानतो वापि स फलनयनो भवेत् ॥

पुष्पं पत्रं फलं वापि मन्त्रहीनमपि द्विज ।
अर्पयेद्द्रोणनाथस्य शिरस्यभिमतं नरः ॥

तस्य पापानि नश्यन्ति स तु मुक्तो भविष्यति ।
देशान्तरादागता मर्त्याः मरणार्थं वसन्ति ये ॥

तेषां तु दक्षिणे कर्णे पार्वत्या सह शङ्करः ।
आगत्य मरणोन्मत्तं प्राणोत्क्रमणपीडितम् ॥

समाश्वास्य शनैः पुत्रं पितेवा कृपया तव ।
उपेक्ष्यति तत्सत्यं स्वामिपादे शपाम्यहम् ॥

तस्मात्सर्वप्रयत्नेन वासमत्रैव कारयेत् ।
काश्यां बह्वयास्सन्ति शुद्धोदकफलोदकैः ॥

महाभिषेकं यः कुर्यान्मनोवाकायकर्मभिः ।
शिव एव न सन्देहः जानाति शिव एवतम् ।

श्राद्धं पितृविमुक्त्यर्थं पिण्डदानं तिलोदकम् ।
कुर्यादमृतकुण्डस्य तीरे च शिवसन्निधौ ॥

तेषांमुक्तिर्भवत्येव यावदाचन्द्रतारकम् ।
एवं पितृणामस्थीनि सुधाकुण्डे विनिक्षिपेत् ॥

दृश्यतेऽत्र वृषारूढो भवत्यस्मिन् क्षणे द्विज ।
पुत्रादिभिर्यैः पूर्वमस्थिन्यादाय भक्तितः ॥

निक्षिप्तव्यं यथा कुण्डे पितृणामुक्तिहेतवे ।
कश्चिज्जनः स्वमादाय ब्राह्मणस्यान्तिकं पुरा ॥

निपाते दैव योगेन मांसार्थी चान्यतो गतः ।
तत्क्षणेन विमुक्तिः चामृतकुण्डस्यवैभवात् ॥

अखिलनिगमसारं सर्वपापापहारम् ।
जननमरणरूपं व्याधिसंहाररूपम् ॥

कथितमिह मया ते कारणात्संग्रहेण ।
प्रगटयत च शिष्ये रूपयेत्तेषु नित्यम् ॥

इति श्रीशैवपुराणे कोटिरुद्रसंहितायां स्थानमाहात्म्येखण्डे सत्यवतीसुतात्मजशौनकसंवादे घोणेश्वरमाहात्म्ये सुधाकुण्डमहिमाकथनं नाम द्विशततमोऽध्यायः ।

கோணேஸ்வர மாஹாத்மியம்

(தமிழாக்கச் சுருக்கம்)

நல்ல ஒளியுள்ளவராயும் இந்திரன் முதலிய தேவர்களால் வணங்கப் பட்டவராயும் ஸ்ரீ பார்வதிதேவியின் மகனாயும் யானை முகத்தை உடைய வருமான ஸ்ரீ வினாயகப்பெருமானைத் துதித்து வணக்கத்துடன் இந்த கோணேஸ்வர மாஹாத்மியம் துவங்கப்படுகிறது.

எல்லோருக்கும் ஆச்சரியத்தை விளைவிப்பதும் எல்லா உலகங்களைக் காட்டிலும் மிகப் பரிசுத்தமானதும் எல்லா பாபங்களையும் போக்கடிக்கக் கூடியதும், எல்லா ஐஸ்வர்யங்களையும், கொடுக்கக்கூடியதும் மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதும், தவத்திற்கு பயனளிக்கக்கூடியதும் மூன்று விதமான தாபத்தையும் போக்கடிக்கக்கூடியதும் தேவர்களாலும், ரிஷிகளாலும் சேவிக்கக்கூடியதும், பல புண்ணிய தீர்த்தங்களால் சூழப்பட்டதுமான க்ஷேத்திரம் ஒன்று இருக்குமேயானால் அதை நீங்கள்தான் சொல்லவேண்டும். ஏனெனில் நீங்கள் பதினெண்புராணங்களையும் அறிந்தவர்கள் அன்றோ; கருணை நிறைந்த தாங்கள் என் மேல் கருணை வைத்துக் கும்பகோணம் என்று வேறொரு கதையின் நடுவில், சுருக்கமாகக் கும்பத்தினுடைய காரணத் தையும் விசேஷமாக கோணத்தின் மகிமையைப் பற்றியும் சொல்லப்பட்டதைத் தாங்கள் விஸ்தாரமாகக் கூறவேண்டும். ஏனெனில் எல்லாம் அறிந்த ரோமஹர்ஷணர் என்று பெயருள்ள தங்களுக்குச் சமமாக இந்த பூமியில் யாரும் இல்லை என்று சௌனக மகரிஷி சூதபுராணிகரைப் பார்த்துக் கேட்கின்றார் அதற்குச் சூதபுராணிகர் கூறுகின்றார்.

முன்பு பார்வதிதேவி புண்ணிய ஸ்தானங்களில் உயர்ந்த இந்த "அமிருதம்" என்ற புண்ணிய தீர்த்தத்தில் வாசம் செய்து, சிவபெருமானை அடைந்தாள். பிரம்மன் முதலிய தேவர்களும், எல்லா ரிஷிகளும், வைஷ்ணவர் களும், குபேரன் முதலிய யக்ஷர்களும், அப்ஸர ஸ்திரீகளும் இந்த க்ஷேத்திரத்தில் வாசம் செய்து சுகபோகங்களை அடைந்தார்கள். ஆகையினால், உன் அன்பினால் கட்டப்பட்ட நான், கோணேசருடைய கருணையால் அந்த புண்ணிய க்ஷேத்திரத்தைப் பற்றிக் கூறுகிறேன். நல்ல புத்தி உள்ள நீ கவனமாக கேட்பாயாக,

உன்னால் நினைவூட்டப்பட்ட நான் பாக்கியவானாக அனுகிரஹிக்கப் பட்டுள்ளேன். நீயும் மிகப் புண்ணியம் செய்தவர், மேலோனவர். நானும் அப்படியே ஆனேன்.

முடிவு இல்லாததும். ஒப்பற்றதும். ஊஹிக்கமுடியாததும், புலன்களுக்கு எட்டாததும், அறியமுடியாததும், காரிய காரணங்களுக்கு எட்டாததுமான பிரும்மத்தை சித்தசுத்தியின் பொருட்டு தியானிக்கிறேன், எது உன்னால் பிரார்த்தித்துக் கேட்கப்பட்டதோ அதைச் சொல்கிறேன்.

உலகமானது சமுத்திரத்தால் சூழப்பெற்று தாவரம், ஜங்கமம் முதலியவை அழிந்தபொழுது உலகத்திற்கு முக்கிய காரணமான அமிர்தம் நிறைந்த குடம் பிரளய காலத்தில் உண்டான ஜலத்தின் மத்தியில் மிதந்து வந்தது. அது தெய்வவசத்தால் மூன்று விதமாக ஆகி, மூன்று இடங்களில் அமைந்தது. அடிப்பாகம், நடுப்பாகம், மூக்கு என்றாகி, ஒவ்வொன்றும் லிங்க ரூபமாக அமைந்தது. கும்பத்தின் மத்திய பாகம் திருக்குடந்தை ஆயிற்று. பஞ்சகோச பிரமாணமான வன்னி தேசத்தில், அமிருதம் நிறைந்த அக்கும்பத்தின் மூக்கு பாகம் நிலைபெற்றது. அந்த க்ஷேத்திரந்தான் குடவாயில் எனத் தமிழில் வழங்கலாயிற்று அந்த மூக்குப்புரம் மேற்குப் பக்கமாகச் சாய்ந்ததால் சிவலிங்கமும் மேற்கு நோக்கி அமைந்தது எனக்கூறலாம். அந்த அமிர்தமான தீர்த்தத்தின் கிழக்குக் கரையில் அமைந்த மேற்கு முகமாக எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தைத் தரிசித்து. மனிதர்கள் பிரும்மஹத்தி முதலிய தோஷங்களினின்றும் விடுபடுகிறார்கள்.

எவன் கோணநாதர் என்னும் குடவாயில் பெருமானையும், கும்பேசப் பெருமானையும் தரிசிக்காமல் இருக்கிறானோ அவன் பயங்கரமான நரகத்தை அடைகிறான். ஆதலால் வாரக்கிரமமாக எம்பெருமானைத் தரிசிக்கவேண்டும்.

எனக்கு இப்பொழுது மிகப்பெரிய சந்தேஹம் ஒன்று உள்ளது. என் சந்தேஹத்தைப் போக்கக்கூடியவர் உங்களைத் தவிர இந்த பூமியில் வேறு ஒருவருமில்லை. ஆதலால் தாங்கள் லிங்கத்தைத் தரிசிக்காத தோஷத்தால் மனிதன் எப்படி ஆகிறான்? இதுபற்றி முன்பு கேட்டதில்லை. கருணை கூர்ந்து கூறுங்கள் என்று கேட்க, சூதபுராணிகர் கூறுகின்றார்.

முன்னொரு காலத்தில் தன் சந்தேகத்தின் நீக்கத்திற்காக சனத்குமாரர் பிரும்மாவைப் பார்த்துக் கேட்டார். அப்பொழுது பிரும்மாவால் சனத்குமாரருக்குச் சொல்லிய பழமையான இதிகாசத்தை உனக்குச் சொல்கிறேன். தலைசிறந்த நீயும் அதைக் கேட்பாயாக.

'பர்ணாசனர்' (இலையைத் தின்று வாழ்பவர்) என்ற பெரிய அறிவாளி இருந்தார். அவருக்கு 'த்ருணாசனர்' (புல்லைத் தின்று வாழுபவர்) என்ற ஒரு மகனும் இருந்தார். அவர், இல்வாழ்க்கையில் வெறுப்பு அடைந்த மனதை உடையவராய் மோக்ஷத்தை அடைய முயற்சி உடையவராய் தனக்கு மோக்ஷம் எவ்விதம் கிடைக்கும் என்ற நினைவிலேயே ஈடுபட்டவராய் தவ வலிமையால் பிரகாசிக்கின்ற ஒளியை உடையவரும், கோடி சூர்யன் போல் பிரகாசிக்கின்றவரும் கோடி சந்திரன் போல் குளிர்ந்த தன்மையுள்ளவரும் உருத்திராட்சங்களை ஆபரணமாக கொண்டவரும், ஜடைக் கூட்டங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், திருமேனி முழுவதும் திருநீறு பூசியவரும் விபூதியை நெற்றியில் மூன்று கோடாக அணிந்துள்ளவரும், புலித்தோல் முதலியவற்றை உடுத்தியவரும், கெண்டி ஜபமாலை உள்ளவரும், ஆஸனத்தில் அமர்ந்து இருப்பவரும், இரண்டாவது பரமேச்வரன் போல் உள்ள குருவை அடைந்து வணங்கி, அவரைப் பார்த்த மாத்திரத்தாலேயே புளகாங்கிதராய் நான் பாக்கியசாலியாக ஆனேன் என்று உறுதி செய்துகொண்டு குருவினிடம் விண்ணப்பித்துக் கொண்டார்.

ஹே சுவாமியே! கருணைக்கடலே! பக்தர்களிடத்தில் அன்புள்ள ஹே குருவே! உங்களுக்கு வணக்கம். தங்களைப் பார்த்ததால் உண்டான மகிழ்ச்சியால் நான் புளகாங்கிதமானேன். "மோக்ஷத்தை அடைய என்ன செய்யவேண்டும்" என்று யோசித்து அவ்வழியை எனக்குச் சொல்லவேண்டிக் கொள்கிறேன். ஏனெனில் பாப கர்மாவினால் மனைவி மக்களால் சூழப்பட்ட பாபமே நிறைந்த இந்த இல்வாழ்க்கை என்ற கடலில் மூழ்கியவனாக உள்ளேன். இங்கு புருஷார்த்தங்களுள் முக்கியமான மோக்ஷத்தை அடைவதற்கு வேண்டிய சாதனம் ஒன்றும் இல்லை. தரித்திரத்தன்மையும், செல்வம் நிறைந்த தன்மையும், அதன் செலவும், அதில் துக்கமும், அவர்களுக்கு நோயும், மரணமும் இவைகள் எல்லாம் இல்வாழ்க்கையில் உண்டாகும் கஷ்டங்கள், மேலும் சோம்பல், தூக்கம், பிறருக்குத் தொண்டு செய்தல், பிறரை அண்டி வாழ்தல், பல துக்கச் சூழல்கள் இவைகளில் நான் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறேன். ஹே பிரும்ம சாக்ஷாத்காரம் பெற்ற குருவே! இதைக் கடந்து, மோக்ஷம் அடைய வழியைச் சொல்லுங்கள். நான் உங்கள் அடைக்கலம். நீங்கள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும். தவம்,

யாகம், தானம் பலவிதமான விரதானுஷ்டானங்கள் இவைகளைத் தவிர வேறு ஏதாவது சுலபமான வழி இருக்குமேயானால் அதைக் கூறுங்கள் என்று திருணாசனர் கேட்க, குரு சொல்கிறார்.

மிக பாக்யவானான ஹே திருணாசனா! வழியைச் சொல்கிறேன் கவனமாகக் கேட்பாயாக.

உலகத்தில் எல்லா தர்மங்களும் நிலையற்றவை என்பது எல்லோராலும் அறியப்பட்டதே. ஆதலால் எல்லா உலகத்திற்கும் சம்மதமான அழிவில்லாத வழியைக் கூறுகின்றேன். தீர்த்தயாத்திரையைச் செய்வாயாக. மோக்ஷம் கிடைக்கும். வேறு எந்த வழியாலும் அது கிடைக்காது. மோக்ஷத்தைக் கொடுக்ககூடிய புண்ணிய தீர்த்தங்கள் எவைகள் உள்ளனவோ அங்கெல்லாம் சென்று தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம் செய்து, அங்கு ஈச்வர ரூபமாகவுள்ள இலிங்கத் திருமேனியைத் தரிசித்து, பக்தியுடன் வணங்கி வலம் வந்து விசேஷமான தானங்களையும் சீக்கிரம் செய்வாயாக. இவைகளைச் செய்யா விட்டால் மோக்ஷம் என்பது கிடைக்கக்கூடியதுஅன்று, என்று கூறினார்.

திருணாசனரும், இனிமையானதும், சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதுமான அவருடைய வார்த்தையைக் கேட்டுத் தீர்த்தயாத்திரையை செய்வதற்கு ஆரம்பித்தார்.

முதலில் நைமிசாரண்யத்தையும், அங்குள்ள சிவபெருமானையும் வணங்கி கைகூப்பி நின்று தோத்திரங்களால் துதித்து, பிறகு கயா, பிரயாகை புஷ்கரம், கார்க்கோடகேசுரம், காளீச்சரம், ஸ்ரீபர்வதம், ஸ்ரீகாளஹஸ்தி முதலிய க்ஷேத்திரங்களுக்கும்; பிரப தீர்த்தம், கபிலா தீர்த்தம், கிருஷ்ணா தீர்த்தம், வேகவதி முதலிய தீர்த்தங்களுக்குச் சென்று நீராடி இறைவனை வணங்கி வடக்கு திக்கில் உள்ள ஐப்பேச்வரம், பிரயாணேச்சரம் சென்று அங்கு பேய் போலச் சஞ்சரித்தான். மூன்று இரவுகள் பசி-தாகம் இவைகளால் பீடிக்கப்பட்டு செய்யவேண்டியது எது, செய்யவேண்டாதது எது என்பது இல்லாதவனாய் பல புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும், விபரீதமாக உள்ளதை நினைத்து வருந்திய சமயம், இரண்டாவது சூரியன்போல் பிரகாசிக்கின்ற நாரதர், வீணையை வாசித்துக்கொண்டு, உலகின் நன்மைக்காக "ஸீதாகுண்டம்" என்று சொல்லப்படுகின்ற அமிருத தீர்த்தத்தை அடைந்தார். அப்பொழுது புத்தி மயங்கி நிற்கின்ற திருணாசனரைப் பார்த்து, தயவு உண்டானவராய் இனிமையான வார்த்தையைச் சொன்னார். திருணாசனரும் நாரதரைப் பார்த்து ஆனந்தத்தால் அமைதியடைந்த உள்ளம் உடையவராய் தெளிவான புத்தியை உடையவராய் நாரதரை வணங்கி கைகூப்பி தன் துக்கத்தைச் சொன்னார்.

பெரியோரே நான் மிகப் பயங்கரமான இல்வாழ்க்கையால் பீடிக்கப் பட்டு மோக்ஷத்தை விரும்பி புண்ணிய தீர்த்தங்களை சேவிக்க வேண்டி, பல புண்ணிய தீர்த்தங்களுக்குச் சென்றேன். இந்த சுதா தீர்த்தத்தின் பெருமை மிகுந்த மகிமையைக் கேட்டு இல் வாழ்க்கையிலிருந்து விடுபட, ஸ்நானத்திற்காக இங்கு வந்துள்ளேன். க்ஷேத்ரபாலகரை வணங்கி மிகப் பக்தியோடு இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து கரை ஏறிய பொழுது எனக்கு மனக்கலக்கமும், அறிவில்லாத தன்மையும், கொடூர ஹிருதயமும் உண்டாயிற்று. இது எதன் பயன் ? இப்படிப்பட்ட பாபத்திற்குக் காரணம் என்ன ? என்பதைத் தாங்கள் எனக்குச் சொல்லுங்கள் நிழலைத் தேடிச் சென்று பனைமரத்தின் அடியில் தங்கியவனுக்கு பனையின் பழம் விழுந்து தலை நொறுங்கியது போல மோக்ஷம் வேண்டிச் சென்ற எனக்கு இக்கதி ஏற்பட்டுள்ளது. இப்பொழுது தங்கள் திருவடியின் மகிமையால் அவை எல்லாம் அழிந்தன என்று அங்கு வந்த நாரதரிடம் திருணாசனர் கூறினார், அதைக் கேட்ட நாரதர் 'திருணாசனா' மனங்கலங்காதே ! காரணத்தைக் கேட்பாயாக. இந்த 'கோணேச்வர க்ஷேத்திரத்தில்' உனக்கு மோக்ஷம் ஏற்படப் போகிறது. இதில் சிறிதும் ஐயமில்லை.

முதலில் சுதரகுண்டத்தில் ஸ்நானம் செய்து கோணேச்வரரைத் தரிசித்து, பிறகு கும்பேசப்பெருமானையும் தரிசித்த மனிதன் இல்வாழ்க்கை யிலிருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைகிறான். அப்படி இல்லாவிடில் நரகத்தை அடைகிறான்; நாய்ப் பிறப்பையும் எடுக்கிறான். யாருக்கும் இந்த ரஹஸ்யத்தைச் சொல்லக்கூடாது

புண்ணியம் செய்தவர்களுக்குள் சிறந்தவரே! உனக்கு இப்படிப்பட்ட நிலை உண்டானதற்கும், உன்னுடைய பாவம் போவதற்கும் பிராயச்சித்தம் சொல்கிறேன், கோணேச்வரப் பெருமானின் வடக்கு திக்கில் பாபத்தின் மூலகாரணத்தை அழிக்கக்கூடிய அக்னிகுண்டம் என்ற மகிமை வாய்ந்த புண்ணிய தீர்த்தம் உள்ளது. அதில் ஸ்நானம் செய்தமாத்திரத்தில் அறிந்தும் அறியாமலும் செய்யப்பட்ட எல்லா பாபங்களும் அழிந்துவிடுகின்றன. இதில் சந்தேஹமில்லை.

மேலும் சிவபெருமானின் அருட்திறத்தால் எல்லா பாபங்களும் அழிந்து விடுகிறது கார்த்திகை மாதம் கிருத்திகா நட்சத்திரத்தில் அக்னி குண்டத்தில் ஸ்நானம் செய். அந்த க்ஷணத்திலேயே எல்லா பாபங்களில் இருந்தும் விடுபட முடியும். அப்படி இல்லாவிடில் எத்தனை பிறப்பு எடுத்தாலும

விடுபட முடியாது. இந்த தீர்த்தத்தின் மகிமை எதற்கும் இருந்ததில்லை. இருக்கப்போவதும் இல்லை. கோணேசப் பெருமானையும், கும்பேசப் பெருமானையும் தரிசிக்க வேண்டும். பாபமில்லாத மனிதன் தரிசித்ததால் உண்டான பாக்கியத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகம் பாக்கியம் செய்தவனாக ஆவான். இங்கு வாசம் செய்து முனிபுங்கவர்கள் மோக்ஷம் அடைந்துள்ளார்கள். ஆகையால் எல்லா புண்ணிய க்ஷேத்திரங்களைக் காட்டிலும் கோணேஸ்வர க்ஷேத்திரம் மிக மேலானது. ஸ்ரீ காசியில் செய்யப் பட்ட பாபங்கள் இந்த கோணேஸ்வர க்ஷேத்திரத்தில் விடுபடுகின்றன. கோணேஸ்வர க்ஷேத்திரத்தில் செய்யப்பட்ட பாபங்கள் அந்த க்ஷேத்திரத்தி லேயே விடுபடுகின்றன. என்பதாகக் கூறி திருணாசனரிடம் விடைப் பெற்ற வராய் வைகுண்டம் போய்ச் சேர்ந்தார்.

நாரதர் சென்றவுடன் 'திருணாசனரும்' அக்னிகுண்டம் அடைந்து பக்தி யுடன் முறைப்படி ஸ்நானம் செய்து பேய்த் தன்மையிலிருந்து விடுபட்டு ஸாயுஜ்யத்தை அடைந்தார். இவ்வாறு எவன் எல்லா பாபங்களையும் போக்கக்கூடிய, மஹாபாபம் என்ற காட்டிற்கு காட்டுத் தீயாக உள்ள கோணேசப் பெருமானின் க்ஷேத்திர மாஹாத்மியத்தை கேட்கிறானோ அவன் பாக்கியவானாக ஆகி சிவலோகத்தை அடைகிறான்.

இவ்வாறு சிவபுராணத்தில் ருத்ரஸம்ஹிதையில் ஸ்தான மாஹாத்மிய காண்டத்தில் சௌனக சனத்குமார ஸம்வாதமான கோணேஸ்வர மாஹாத் மியத்தின் திருணாசனத்தின் ராக்ஷஸ மோசனம் என்ற நூற்றொன்றாவது அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீசௌனகர் கூறுகின்றார் :

ஹே சூத புராணிகரே! இந்த வரலாற்றைக் கேட்டு போதுமென்ற எண்ணம் வரவில்லை. மேலும் இதுபற்றி கேட்க மனது ஆவல்படுகிறது. சுதா குண்டத்தின் மகிமையை விஸ்தாரமாகக் கூறுங்கள்.

சூத புராணிகர் கூறுகின்றார்

இந்த உலகத்தில் நீ மிகவும் புண்ணியம் செய்தவன். இந்த ஸ்தானத் தின் மகிமையைச் சொல்வதற்கோ, கேட்பதற்கோ விஷ்ணு, ஆதிசேஷன், பிரும்மா முதலியவர்களும் சக்தி உள்ளவர்கள் இல்லை. அப்படி இருக்கும்

பொழுது நான் எப்படி சொல்லமுடியும்? இருப்பினும் அறிவு வடிவமான குருவான வியாழபகவானால் சொல்லப்பட்டதைக் கொஞ்சம் சொல்கிறேன்.

கோணேஸ்வரம் மோக்ஷத்திற்கு முகத்துவாரமாகும். கால பேதத்தால் குடமூக்கிலிருந்து அமுதம் வெளிப்பட்டது. அது பள்ளத்தில் விழுந்தது. அதுதான் "ஸுதாகுண்டம்" என்று சொல்லப்படுகிறது. அதில் ஸ்நானம் செய்தவர்கள் மேனிலையை அடைகிறார்கள். இந்த ஸுதா குண்டத்தின் ஸந்நிதியில் விஷ்ணு, பிரும்மா, சனகாதி மஹாயோகிகள், நாரதர், கபிலர் முதலிய தேவரிஷிகள், இந்திரன் முதலிய தேவர்கள் வசிக்கிறார்கள். இந்த சுதா குண்டத்தில் கீழ்க்கரையில் உள்ள மேற்கு முகமாக அமைந்துள்ள சிவபெருமானை எவர்கள் தரிசிக்கிறார்களோ, அவர்கள் பல நன்மைகளை அடைகிறார்கள். சுதா குண்டத்தைப் பார்த்தவர்கள், அதன் ஜலத்தைத் தொட்டவர்கள், அதில் ஸ்நானம் செய்தவர்கள் பாபங்களில் இருந்தும், எல்லா தர்ம கர்ம பந்தங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். சுதா குண்டத்தைப் பார்த்தால் பிரும்மஹத்தி தோஷத்திலிருந்து விடுபடுகிறான். பார்ப்பதால் 'சுராபானம்' செய்த தோஷத்திலிருந்து விடுபடுகிறான். ஸ்நானம் செய்வதால் எல்லா பாபங்களில் இருந்தும் விடுபடுகிறான். தாய்க்குச் செய்த துரோகம தந்தைக்குச் செய்த துரோகம், சிவத்ரோகம் முதலிய பாபங்களும் அழிகின்றன.

சிவக்ஷேத்திரத்தில் வசிக்கின்ற ஏழையான பிராம்மணனுக்கு சுவர்ண தானம் பண்ணின பயனைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

இந்த உலகில் பிள்ளை பேரன்களோடு கூடியவனாய் சுகத்துடன் நூறு வருஷ காலம் வாழ்ந்து சிவலோகப்பிராப்தியை அடைகிறான். தக்ஷிணாயனம், உத்தராயணம், கிரஹண காலம், வியதீபாதம், விஷு புண்ய காலங்கள், ஷடசீதி புண்ய காலங்கள், கிருஷ்ணபக்ஷ அஷ்டமி பர்வ காலங்கள், துவாதசி ஞாயிற்றுக்கிழமை இவைகளில் அருகு, அக்ஷதை, பழம் முதலியவைகளுடன், பைரவ சுவாமியினிடம் அனுக்ஞைப் பெற்று சூரியனுக்கு நேர்முக ஸ்நானம் செய்து கீழ்வரும் மந்திரத்தை ஜபிக்க வேண்டும். "அமிர்தமயமான தீர்த்தமே உனக்கு வணக்கம். இந்த சுதா குண்டத்தில் ஸ்நானம் செய்வதால் என் பாபத்தைப் போக்கி அருளுக" என்று கோணேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தித்து எவன் ஸ்நானம் செய்து, தேவர், பித்ருக்கள், ரிஷிகள் இவர் களுக்கு தர்ப்பணம் செய்கிறானோ அவன் மோக்ஷம் அடைகிறான். தேவ கடன், பித்ரு கடன், ரிஷிக்கடன் இவைகளில் இருந்து விடுபட்டு முக்த னாகிறான். இந்த க்ஷேத்ர தர்சனத்தாலேயே முக்தி கிடைக்கிறது.

ஆகையால் முழு முயற்சி எடுத்து இங்கு வாசம் செய்ய வேண்டும். பித்ருக்களின் முக்திக்காக எவர்கள் அமிருத குண்டத்தின் கரையில் கோணேசப் பெருமானுக்கு எதிரில் சிரார்த்தபிண்டதானம், திலோதக தானம், செய்கிறானோ அவர்களும் மோட்சம் அடைகிறார்கள். எல்லா வேதங்களின் சாரமாயும், எல்லா பாபத்தையும் போக்கக்கூடியதும் பிறப்பு, இறப்பு என்னும் நோயை அழிக்கக் கூடியதுமாகிய உயர்ந்த விஷயத்தை நான் உனக்கு சுருக்கமாகச் சொன்னேன் நீயும் உன் சிஷ்யர்களுக்குச் சொல்வாயாக.

சைவ புராணம் ருத்திர சம்ஹிதை ஸ்தான மாஹாத்மிய காண்டத்தில் நூற்றி இரண்டாவது அத்தியாயம் முற்றும்.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
25—7—97.

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

A CATALOGUE

OF

SANSKRIT MANUSCRIPTS OF

JAINISM

IN THE

SARASVATI MAHAL LIBRARY, THANJAVUR

தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்திலுள்ள

ஜைன சமய சம்ஸ்கிருதச் சுவடிகளின்

அகரவரிசைப் பட்டியல்

பதிப்பாசிரியர் :

வேதாந்த சிரோமணி, தமிழ் வித்வான்,

என். ஸ்ரீநிவாஸன்

ஸம்ஸ்கிருத பண்டிதர்,

சரசுவதி மஹால் நூலகம். தஞ்சாவூர்.

முன்னுரை

இந்தியத் துணைக் கண்டத்தில் தோன்றிய மதங்கள் பல. இவற்றுள் மிகத் தொன்மையான மதங்களில் ஜைன மதமுமொன்று. இம்மதத்தை சமணம், ஜைனம், அர்ஹமதம், நிகண்ட மதம், என்ற பல்வேறு பெயர்களால் அழைப்பார்கள். இம்மதத்திற்கு நிகண்ட (निगण्ठ) என்று பாலி மொழியில் பெயர். இச்சொல்லுக்கு 'பவபந்தங்களை அறுப்பது' என்று பொருள். விருப்பு, வெறுப்பு ஆகியவற்றைத் துறந்த துறவிகளையே 'அர்ஹத்' என்ற சொல் உணர்த்துகிறது.* இத்தன்மை வாய்ந்த துறவிகள் இம்மதத்தை மக்களிடம் பிரசாரம் செய்து பரப்பியதால் இம்மதத்திற்கு 'அர்ஹ மதம்' என்ற பெயருண்டாயிற்று.

சமண மதம் இந்தியா முழுதுமே பரவி இருந்தது. இம் மதத்தைச் சார்ந்த துறவிகள், இலக்கியம், கலை, கலாச்சாரங்களைப் பேணிக்காத்தவர்கள் எனில் மிகையில்லை. ஆயினும், இந்நாளில் சமண மதத்தைப் பின்பற்றுகின்றவர்கள் மிகக் குறைந்த அளவிலேயே வாழ்கின்றனர். என்றாலும், இம் மதத்தைச் சார்ந்த இலக்கியவாதிகள், சாஸ்திர அறிஞர்கள், இயற்றிய நூல்கள் இன்றும் காணக்கிடைக்கின்றன. இம்மதத்தினர் வழிபாடு புரிந்த-புரிகின்ற கோவில்களும், சமணத் துறவிகள் வாழ்ந்த பாழிகளும் இந்தியாவின் பல பகுதிகளில் காணமுடிகின்றன.

இத்தகைய தொன்மை வாய்ந்த சமண சமயத் தொடர்புடைய காகிதச் சுவடிகளும், ஓலைச் சுவடிகளும் சரஸ்வதி மஹால் நூலகத்தில் பேணிப்பாது காக்கப்படுகின்றன. இதனால் சமண சமயம் பற்றியும், இந்நூலகத்தில் காணப்படும் சுவடிகளைப் பற்றியும் அறிமுக விளக்கமே இக்கட்டுரையின் நோக்கம்.

தீர்த்தங்கரர் :

தீர்த்தங்கரர் என்பதிலுள்ள தீர்த்த என்னும் சொல் 'தானும் புனிதமாக இருந்து, தன்னைச் சார்ந்தவர்களையும் புனிதம் பெறச் செய்கின்றவர்களை 'தீர்த்த' என்ற சொல் குறிக்கும். இதனால் ஜைன சமய குருமார்கள்

---

* सर्वज्ञो जितरागादिदोषस्त्रैलोक्यपूजितः ।
यथास्थितार्थवादी च देवोऽर्हन् परमेश्वरः ॥

தீர்த்தங்கரர் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். இத்தகைய தீர்த்தங்கரர்கள் தெய்வத்தன்மை பொருந்தியவர்களாயும், மெய்யுணர்வு வாய்ந்தவராயும், உலகப் பற்றை அறவே ஒழித்தவராயும், ஐம்புலன்களை அடக்கியாளும் ஆற்றல் மிக்கவராயும், அஞ்ஞான இருளைப் போக்கி ஆன்மீக ஒளியை உருவாக்குகின்றவராயும், பிற உயிரினங்கள் படும் துன்பங்கண்டு இரங்கி, அத்துன்பங்களைப் போக்கும் தயாள குணம் கொண்டவராயும், அஹிம்ஸையே உருக்கொண்டு விளங்குபவராயும், திகழ்ந்தவர்கள் தீர்த்தங்கரர்கள்.

இத்தகைய தீர்த்தங்கரர்களால் தோற்றுவிக்கப்பட்டதே சமணமதம். இம் மதத்தை மக்களிடையே பிரசாரம் செய்து இந்தியா முழுதும் பரப்பியவர்களே தீர்த்தங்கரர்கள். இவர்கள் 24 பேர்கள். அவர்கள் வருமாறு;

1. விருஷப தீர்த்தங்கரர், 2. அஜிநாதர், 3. சாம்பவநாதர், 4. அபிநந்தனர், 5. சுமதிநாதர், 6. பதுமநாபர், 7. சுபார்சுவநாதர், 8. சந்திரப்பிரபர், 9. புஷ்பதந்தர் (ஸுவிதிநாதர்). 10. சீதளநாதர் (ஸித்திபட்டாரகர்) 11. ஸ்ரீயாம்சநாதர், 12. வஸுபூஜ்யர், 13. விமலநாதர். 14. அநந்தநாதர் (அநந்தஜித பட்டாரகர்) 15. தர்மநாதர், 16. சாந்திநாதர், 17. குந்துநாதர் (குந்து பட்டாரகர்) 18. அரநாதர், 19. மல்லிகாநாதர், 20. முனிஸுவர்த்தர், 21, நமிநாதர் (நமிபட்டாரகர்) (22) நேமிநாதர் (அரிஷ்ட நேமி) 23. பார்ஸ்வ நாதர், 24. வர்த்தமான மஹாவீரர் ஆகியோர்.

ஜைன மதத்தின் கடைசீ தீர்த்தங்கரராக விளங்கிய வர்த்தமானர், ராக-த்வேஷங்களைக் களைந்த காரணத்தால் 'ஜினர்' என்று மக்கள் அழைத்தனர். ஜினரால் பிரசாரம் செய்யப்பட்ட காரணத்தால் இம் மதத்தை 'ஜைன மதம்' என்றே அழைக்கலாயினர்.

ஜைன மதத்தின் முதல் தீர்த்தங்கரரான விருஷப தேவர் பிரசாரம் செய்த கொள்கைகளையே, விருஷப தேவருக்குப் பின்வந்த தீர்த்தங்கரர்களும் பின்பற்றியதுடன் அவற்றை பிரசாரம் செய்யலானார்கள். இருபத்துமூன்றாவது தீர்த்தங்கரரான பார்ஸ்வநாதர், விருஷப தீர்த்தங்கரரின் கொள்கைகளில் சில மாற்றங்களைச் செய்து பிரசாரம் செய்தார். பார்ஸ்வநாதருக்குப்பின் வந்த வர்த்தமான மஹாவீரர், பார்ஸ்வநாதர் திருத்தியமைத்த கொள்கைகளை மேலும் சீர்திருத்தம் செய்து பிரசாரம் செய்தார்.

இதனால், பார்ஸ்வநாதரே சமண சமயத்தை உருவாக்கினாரென்றும், இதில் சீர்திருத்தம் செய்தவர் மஹாவீரர் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில் பார்ஸ்வநாதருக்கு முன்பிருந்த தீர்த்தங்கரர்களுடைய காலங்களை ஆராய்ந்தறிய முடியாமையாலும், பார்ஸ்வநாதருக்கு முன்

மற்ற இருபத்திரண்டு தீர்த்தங்கரர்களும் இயற்கைக்கு மாறான உருவத்துடன், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் உயிர்வாழ்ந்தனர் என்றும் கூறப்படுகிறது. ஆகவே, 2-22 தீர்த்தங்கரர்களும் கற்பனையே என்று கூறுகின்றனர்.

ஆனால், வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவது போல 2 - 22 தீர்த்தங்கரர்களையும் கற்பனையாகக் கருதி ஒதுக்க முடியாது என்றும், பழங்காலத்தில் வாழ்ந்த பெரியோர்களுக்குப் பிற்காலத்தில் தோன்றிய அடியார்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட அமானுஷ்ய இயல்புகளைப் பொருத்திக் கூறுவது நம் நாட்டவர் வழக்கம் என்றும், இவர்கள் வாழ்ந்த காலங்களை அறிய முடியாமையால் இவர்கள் கற்பனையாகக் கற்பிக்கப் பட்டவர்கள் என்றும் கூற இயலாது" என்றும் டாக்டர் தா. எ. ஞானமூர்த்தி அவர்கள் 'சமணம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

23-வது தீர்த்தங்கரராகிய பார்ஸ்வநாதர் கி. மு. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும், 24-வது தீர்த்தங்கரராகிய வர்த்தமான மஹாவீரர் கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென்றும் அறிய முடிகிறது.

விருஷபதேவர் :

ஜைன சமயத்தின் முதலாவது தீர்த்தங்கரரான விருஷப தேவர், நாபிராஜா - மருதேவி தம்பதிகளுக்குத் தோன்றினார். இவர் வாழ்ந்த காலத்தில் சமுதாயம் சீர்குலைந்து இருந்ததால் எங்கும் துன்பமும், சோம்பலும், அறியாமையுமாகக் காணப்பட்டது. இதனால் வருந்திய விருஷபதேவர், மக்களுக்கு நன்னெறி புகட்டி, சிற்பம், ஓவியம், போன்ற கலைகளையும், கல்வியையும் புகட்டினார். மொழிக்குரிய வரிவடிவை (எழுத்தை) விருஷப தேவரே ஏற்படுத்தியவர் என்றும், இவரால் தோற்றுவிக்கப்பட்ட வரிவடிவமே 'ப்ராம்மி லிபி' என்றும் வரலாற்று ஆய்வாளர் N. N. பாசு அவர்கள் விசுவகோசம் என்ற நூலில் கூறியுள்ளார். இதனையே வலியுறுத்துமாப்போல சூடாமணி நிகண்டு, ஆதிநாதர் பிள்ளைத்தமிழ் போன்ற நூல்களில் கீழே காணும் வரிகளும் காணப்படுகின்றன.

"வரைவொடு தொழிலே வித்தை
வாணிக முழுவே சிற்பம்" — சூடாமணி நிகண்டு

"இசையினா லெண்ணெழுத் தியம்பு வித்தாயு நீ"
— ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்.

விருஷப தேவர் இல்லறத்தையும் துறவறத்தையும் சமமாகவே கருதியவர். மனித வாழ்விற்கு இவ்விரண்டுமே இன்றியமையாதவை. இல்லறம், மக்கள் உள்ளத்தைப் பண்படுத்தவல்லது என்றும், துறவறம் ஆன்மீக நெறியில் சென்று வீடுபேற்றை நல்கவல்லதென்றும் கூறினார். இவர்

போதித்த நெறிகளாவன : 1. கொல்லாமை, 2. பொய்யாமை, 3. கள்ளுண்ணாமை, 4. பிறன்மனை நயவாமை. 5. மிகு பொருள்வெஃகாமை ஆகிய ஒழுக்க நெறிகளை போதித்தார். இவருக்குப் பின்வந்த 22 தீர்த்தங்கரர் வரையுள்ளவர்களுக்கான வரலாற்றுச்செய்திகள் அகப்படவில்லை. இருப்பினும் 23வது தீர்த்தங்கரரான பார்சுநாதரைப் பற்றிய செய்திகளே அகப்படுகின்றன.

பார்ச்சுவநாதர் :

பார்சுவநாதர் இந்தியா முழுவதும் யாத்திரை செய்து நான்கு உண்மைகளை போதித்தார். 1. பிற உயிர்களுக்கு இன்னல் புரியாமை, 2. உண்மையே பேசுதல், 3. களவின்மை, 4. பொருட்பற்றில்லாமை ஆகியன. இத்துடன் "கர்மயோக மார்க்கமே முக்திக்குச் சிறந்த வழி" என்றுகூறி முதல் தீர்த்தங்கரரான விருஷபதேவரின் கொள்கையிலிருந்து சில மாற்றங்களைச் செய்தார். பார்ஸ்வநாத தீர்த்தங்கரர் கி. மு. 777 ஆம் ஆண்டில் 'சம்மேதம்' என்ற பெயருடைய குன்றையடைந்து வீடு பேற்றைப் பெற்றார்.

மஹாவீரர் :

பார்ஸ்வநாத தீர்த்தங்கரர் வீடு பெற்ற பின்னர் 250 ஆண்டுகளுக்குப் பின் கி. மு. 559 ஆம் ஆண்டில் மன்னன் சித்தார்தன் – திரிசலா என்ற தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார் மஹாவீரர். இளமையிலேயே கல்வி கேள்விகளில் வல்லவராகத் திகழ்ந்தார். ஆன்மீகத்தில் மிகுந்த நாட்டங் கொண்டிருந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் தெய்வத்தின் பெயரால் நரபலி, மிருக பலிகளைக் கொடுப்பதையும், பாவச் செயல்களில் மக்களீடுபடுவதையும் கண்டு மனம் வருந்தினார். பெற்றோரின் வற்புறுத்தலுக்காகக் கட்டுப்பட்டு திருமணம் செய்துகொண்டார். தந்தைக்குப் பின் தங்களது அரசிற்கு முடிசூட்டிக்கொள்ளுமாறு மஹாவீரரின் தமையனார் கேட்டுக்கொண்டார். அரசு முடியை ஏற்றுக்கொள்ள மறுத்த மஹாவீரர், ஆன்மீகத்திற்கு 'அரசுமுடி' தடையாக இருக்கும் என்று கூறியதுடன் தனது தலைமுடியையும், ஆடை-அணிகலன்களையும் துறந்து துறவியானார்.

மஹாவீரர், பார்ஸ்வநாதரின் கொள்கைகளையே ஆரம்பத்தில் தழுவினாலும், மஹாவீரருக்குத் திருப்தி ஏற்படவில்லை. இதனால் சில கடுமையான சமயக் கொள்கைகளை ஆதரித்தார். அவற்றிலொன்றுதான் "துறவிகள் அறவே ஆசையற்றவராக இருத்தல் வேண்டும்" என்பது. ஆனால், பார்ச்வநாதரின் கொள்கைகளில் வெள்ளையாடை யணிதலைக் குற்றமாகக் கொள்ளவில்லை இதனால் சமண சமயத்தில் இருவேறு நெறிகள் தோன்றின. . இந்த இரு நெறிகளையும் கைக்கொண்டு மக்கள் ஒழுகியதால் இரண்டு பிரிவாயிற்று. வெள்ளையாடை அணிந்த துறவிகளை "ஸ்வேதாம்பர

சமணர்" என்றும், திசைகளையே ஆடையாகக்கொண்ட (நிர்வாணமாக — ஆடையின்றி) சமணத் துறவிகளை "திகம்பர சமணர்" என்றும் இருவிதப் பிரிவுகள் ஏற்பட்டன.

சமணர்களில் இருவித பிரிவினர்களாக இருந்தபோதிலும் உருவ வழிபாட்டை ஏற்றுக்கொண்டிருந்தனர். சமணர்களின் ஆலயங்களில் மூலவர், உத்ஸவர் மற்றும் ஆலயங்களிலுள்ள பரிவார தேவதைகள் ஆகிய அனைத்துமுண்டு. ஸ்வேதாம்பர சமணர்களின் ஆலயங்களில் அங்குள்ள சிலா விக்ரகங்களுக்கு "வெள்ளை ஆடை" அணிவிக்கப்பெற்றிருக்கும். திகம்பர சமணர்களின் ஆலய விக்ரஹங்களுக்கு ஆடை இருக்காது. இவையே ஆலயங்களிலுள்ள வேறுபாடுகள்.

ஆயின், சமண சமயத்தினருக்கு உருவ வழிபாட்டில் நம்பிக்கையிருந்த போதிலும், உருவ வழிபாட்டையே ஏற்காத சமணத் துறவிகளுமுண்டு. இவர்களை "ஸ்தானவாசி சமணர்" என்று கூறுவர். ஸ்தானவாசி சமணர்களின் ஆலயங்களில் சிலா விக்ரஹங்களுக்குப் பதில் சமண சமய ஆகம நூல்களையே தீர்த்தங்கரர்களாகவும், அருகக்கடவுளாகவும் வழிபாடு புரிகின்றனர். இத்தகைய ஆலயங்களில் சமண சமயத் தொடர்புடைய நூல்களுக்கே வழிபாடுகள் நடைபெறுகின்றன.

ஆக, சமண சமயத்தில் மூன்று உட்பிரிவுகள் உண்டு. இம்மூன்று நெறிமுறைகளையும் கடைபிடித்துவந்த ஜைனத் துறவிகள் மலைகளிலும், குன்றுகளிலுமே வாழ்ந்துள்ளனர். இத்துறவிகள் வாழ்ந்த இடங்களை "பாழிகள்" என்றும், "பள்ளிகள்" என்றும் அழைத்தனர். இத்துறவிகள் வாழ்ந்த பாழிகளில் சமண சமயம் போற்றும் தீர்த்தங்கரர்களின் உருவச் சிலைகளும், "ஸல்லேகனம்" என்னும், கற்பாறைகளில் அமைக்கப்பட்ட முனிவர்களின் படுக்கைகளும், அதில் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

'ஸல்லேகனம்' என்றால், ஜைன சமயத் துறவிகள் இவ்வுடலை விட்டு வீடுப் பேற்றையடைய நிச்சயம் செய்து விட்டார் என்றால் உயிர் உடலை விட்டு நீங்கும் வரையில் உண்ணாநோன்பு இருந்து உடலை வருத்திக் கொள்வர், உணவின்மையால் உடல் சோர்வுற்றுத் தளர்ந்து போகும். அப்போது படுத்துக்கொள்ள வசதியாக இருக்கும் பொருட்டு கருங்கல்லால் செய்யப்பட்ட படுக்கையில் படுத்துக்கொண்டே இவ்வுடலைத் துறந்துவிடுவர். இத்தகைய படுக்கைக்கு 'ஸல்லேகனம்' என்று பெயர். இதில் உயிர் துறந்த அத்துறவியின் பெயர் கல்லில் எழுதப்பட்டு அப்படுக்கை பூஜிக்கும் நிலையை அடையும்.

சமண சமயக் கொள்கை :

"ஆத்மா" என்பது பல. அந்த ஆத்மாக்கள் ஒவ்வொன்றும் ஆற்றல் மிக்கவை. எல்லையற்ற அறிவையுடையவை. அந்த ஆத்மாக்கள் ஒவ்வொன்றும் எந்த உடலில் உறைகின்றதோ அந்தந்த உடலுக்கேற்றபடி அது சிறியதாகவோ, அல்லது பெரியதாகவோ தன்னை உருவாக்கிக்கொள்கிறது. ஒவ்வொருவனுடைய ஆத்மாவும் அவனவன் நியதிக்கேற்ற வண்ணம், அந்த ஆத்மாவே உருவாக்கிக் கொள்கிறது, இதனால் இன்ப—துன்பங்களுக்கு அவனவனே காரணமாகிறான். ஆத்மா வீடுப்பேற்றையடைந்த பிறகு பிறவியெடுப்பதில்லை என்பவை சமணரின் முக்கிய கொள்கைகளாகும்.

சமண சமயத்தின் முக்கியமான தொண்டுகள் :

அன்னதானம், அபயதானம் (அடைக்கலம் கொடுத்தல்), ஔடத தானம் (வைத்தியம்), சாஸ்திர தானம் (கல்வி), என்பவை சமணர்களால் பொதுத் தொண்டாகக் கடைபிடித்துவந்த நெறிகள். இந்த நெறிகள் மஹாவீரர் காலந்தொடங்கியே வலியுறுத்தப் பெற்றுள்ளன. பின்னர் இது வளர்ச்சிபெற்று உயிர்களுக்குச் செய்யும் தொண்டாக ஆற்றிவந்தனர் சமணர்கள். இத்தகைய பொதுத்தொண்டுகளால் மக்களிடையே பிரசாரமானதுடன், சமணம் மக்களிடையே வளரலாயிற்று. சமண சமயத்தினரின் கல்விப்பணி வரலாற்றில் அழியாத நிலையடைந்தது எனில் மிகையில்லை.

சமணரின் கல்விப் பணி :

ஜைன மதத்தைத் தோற்றுவித்த 'விருஷபதேவர்' வாழ்ந்த காலத்தில் சமுதாயம் சீர்குலைந்து இருந்ததால் எங்கும் துன்பமும், நோய்களும், அறியாமையும் தாண்டவமாடின. "சமுதாயத்தில் காணப்படும் துன்பங்கள் நீங்கவேண்டுமாயின் மக்களின் அறியாமையை அகற்ற வேண்டும். ஆதலால் மக்களுக்குக் கல்வியறிவை போதிக்கவேண்டும்" என்று எண்ணினார் விருஷபதேவர்.

இதன் காரணமாக, சிற்பம், ஓவியம் போன்ற கலைகளையும். சாஸ்திரக் கல்வியையும் கற்றுக்கொடுத்தார். கல்வி கற்கவேண்டுமாயின் எழுத்தறிவு மிகவும் அவசியம் என்பதால் 'ப்ராம்மீ' என்ற எழுத்தை முதன் முதலில் கண்டுபிடித்து அதனை எழுத மக்களுக்குப் பயிற்சியும் கொடுத்தார் என்று ஆராய்ச்சியாளர் N. N பாசு அவர்கள் 'இந்திய விசுவகோசம்' என்னும் நூலில் கூறியுள்ளார். 'ப்ராம்மீ' எழுத்தே தற்காலத்தின் மொழியியலில் காணப்படும் மிகத் தொன்மையான எழுத்து என்பது அறிஞர்களின் கருத்து. மக்களுக்குக் கல்வியறிவைப் புகட்டுவதுடன், ஆன்மீகத் தொடர்புடைய மதக் கல்வியையும் புகட்டினர். இவ்வழக்கம் சமணர்களின் காலந் தொடங்கியே

இன்றுவரை (இம்மரபே) தொடர்ந்து வருகிறது. சமணர்களுக்குப் பின்வந்த பிற சமயவாதிகளும் இந்த நெறியையே பின்பற்றி வந்துள்ளனர் என்பதும் சிந்திக்கத் தக்கது.

விருஷப தேவருக்குப் பின்வந்த தீர்த்தங்கரர்களும், சமணத் துறவிகளும், கல்வி பயிலும் மாணவர்களுக்கு உணவு, உறையுள் ஆகியவற்றையும் அளித்து அங்கேயே கல்விக் கூடத்தையும் அமைத்து போதித்து வந்தனர். (இன்றைய நாட்களில் கல்லூரிகளில் மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதி வசதியைப் போல) ஆரம்ப காலத்தில் சமணர்கள் பெரும்பாலும் மலைகளிலும், குன்றுகளிலும் அங்குள்ள குகைகளிலுமே வாழ்ந்துவந்தனர். பிற்காலத்தில் மன்னர்களால் நிலவந்தமாக அளிக்கப்பட்ட கிராமங்களில் கல்விப் பணியைச் செய்துவந்தனர்.

உதாரணமாக, தமிழகத்தில் கி. பி. 9ஆம் நூற்றாண்டில் கன்யாகுமரி மாவட்டத்தில் சித்தரால் என்ற இடத்திலுள்ள திருச்சாரனாத்து மலையில் மிகச்சிறந்த சமணப் பல்கலைக்கழகம் இருந்ததாகவும், இதில் ஆசார்யர்களாகப் பணியாற்றியவர்கள் சமண சமயக் கோட்பாடுகளைப் போதித்தது மட்டுமின்றி எண்ணற்ற குருமார்களுக்கும் (துறவிகள்), பெண் துறவிகளுக்கும் சமயப் பயிற்சியளித்து அவர்களை நாடெங்கும் அனுப்பி சமண சமயத்தைப் பரவச் செய்தனர் என்றும் குடவாயில் பாலசுப்ரமணியம் "குடவாயிற் கோட்டம்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோலவே 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமணத் துறவியும், சம்ஸ்கிருத ஜைன சமய நூலாசிரியருமான அகலங்கபட்டர் என்பவர் கர்நாடக மாநிலத்திலுள்ள "ச்ரவண பௌஹொளா"வில் வாழ்ந்தவர். இவர் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள "பெண்ணாகடம்" என்ற ஊரில் புகழுடன் விளங்கிய புத்தமதப் பள்ளியில் படிப்பதற்காகப் பெண்ணாகடம் வந்து கல்வி பயின்றார். பின்னர் வட ஆர்க்காட்டிலேயே தங்கி சமணத்தைப் பரப்பியுள்ளார்.

ஆகவே மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய பள்ளிகள் அந்நாளிலேயே இருந்தன சமணர்களின் பொதுத் தொண்டை கருத்தில் கொண்டிருந்த மன்னர்கள் நிலங்களையும், கிராமங்களையும் கொடையாகக் கொடுத்துள்ளனர். இவற்றுக்கு பள்ளிவாரியம், பள்ளிச் சந்தங்கள், பள்ளி விளாகம் என்ற பெயர்களில் கொடைகள் கொடுத்ததற்கான கல்வெட்டுச் சான்றுகளும் காணப்படுகின்றன.

சமணர்களின் சம்ஸ்க்ருத நூல்கள் :

சமணர்கள் அவரவர்கள் வாழ்ந்த பகுதிகளில் மக்கள் பேசிவந்த மொழிகளிலேயே கல்விப்பணியை ஆற்றிவந்தனர். இதனால் பல நூல்களை வட்டார மொழிகளிலேயே இயற்றி வந்துள்ளனர். குறிப்பாக மஹாவீரர் வாழ்ந்த காலத்தில் பொது மக்களுக்கே ஜைன மதத்தை முதலில் பரப்பினார். இதனால் மக்கள் அறிந்த மொழியாகிய அர்த்தமாகதி (अर्धमागधि ப்ராகிருத மொழி) யிலேயே மஹாவீரரும், அவருடைய சீடர்களும் பிரசாரம் செய்தனர். இதன் காரணமாக ஜைன மதத்தின் முதல் நூல்கள் யாவும் अर्धमागधि ப்ராகிருத மொழியிலேயே இயற்றப் பெற்றுள்ளன. கி. பி.க்குப் பின்னர் இயற்றப் பெற்ற நூல்கள் யாவும் ஸம்ஸ்கிருத மொழியிலேயே இயற்றப் பெற்றன. இவ்வாறு ஸம்ஸ்கிருத மொழியில் இயற்றப் பெற்ற நூல்களை ஆரம்ப கால நூல்களாகவும், இடைக்கால நூல்களாகவும் பிரிக்க முடியும். ஆரம்ப கால நூல்களில் முதன் முதல் எழுந்த ஸம்ஸ்கிருத நூல் கி. பி. முதலாம் நூற்றாண்டில் 'உமாஸ்வாதி' என்பவரால் இயற்றப் பெற்ற '**தத்வார்த்த சூத்திரம்**' என்பதாகும்.

ஜைன சமயத்தின் தொடக்க கால நூல்களை இயற்றிப் புகழ்பெற்ற பண்டிதர்களில் உமாஸ்வாதி, குந்தகுந்தாச்சாரியார், ஸாமந்தபத்ரர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடைய ஸம்ஸ்கிருத நூல்களே ஜைன சமயத்திற்கு அஸ்திவார நூல்களாகும்.

உமாஸ்வாதி என்னும் புலவர் உமாஸ்வாமி, திகம்பராச்சாரியார் என்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறார். "இவரியற்றிய தத்வார்த்த சூத்திரம்" என்ற நூல் "தத்வார்த்தாதிகமா" என்ற பெயராலும் அழைக்கப் படுகிறது. இந்த நூலுக்குப் பல புலவர்கள் விரிவுரை, குறிப்புரை, விருத்தியுரை போன்ற பல உரைநூல்களை இயற்றியுள்ளனர் என்று குறிப்பிடுகின்றார் ஸம்ஸ்கிருத இலக்கிய ஆராய்ச்சியாளர் திரு த்விஜேந்த்ரநாத் ஜா அவர்கள்.

இங்ஙனம் தோன்றிய பாஷ்யங்களில் (விரிவுரைகளில்) "ஸமபத்ரர்" இயற்றிய "கந்தஹஸ்தி பாஷ்யமே" முதல் பாஷ்ய நூலாகும். இந்த நூல் முற்றும் கிடைக்கவில்லை. ஆயினும் சில பகுதி—ஸ்லோகங்களே இப்போது கிடைக்கின்றன. "தேவநந்தி" என்னும் "பூஜ்யபாதர்" எழுதிய "ஸர்வார்த்த ஸித்தி" என்பது மற்றொரு பாஷ்யமாகும். இதே சூத்திரங்களுக்கு 8-ஆம் நூற்றாண்டில் கர்நாடக மாநிலத்திலுள்ள "ஸ்ரவணபெளஹொளா என்னும் இடத்தில் வாழ்ந்த சமண சமயப் புலவர் அகளங்கபட்டர் என்பவர் "ராஜ வார்த்திகம்" என்ற பெயரில் குறிப்புரை இயற்றியுள்ளார். வித்யாநாதர் என்ற சமணப் புலவர் தத்வார்த்தாதிகமா என்ற நூலுக்கு "ஸ்லோக வார்த்திகம்" என்ற குறிப்புரையை இயற்றியுள்ளார். இந்த நூல்கள் அனைத்துமே ஜைன மதத்தின் தத்துவங்களையும், ஜைன தர்மங்களையும் ஆராயும் நூல்களாகும்.

புராணங்கள்

ஜைனர்கள் ஸம்ஸ்க்ருத மொழியில் பல புராணங்களையும், பல ஸ்தோத்திர நூல்களையும் இயற்றியுள்ளனர். புராண நூல்களில் தலையாயது மஹாபுராணம். இது இரண்டு பிரிவுகளைக் கொண்டது. ஆதிபுராணம் என்றும், உத்தர புராணம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆதிபுராணத்தை 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜினஸேனரும், உத்தர புராணத்தை 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குணபத்ரரும் இயற்றியுள்ளனர். இவ்விரண்டு நூல்களிலும் ஜைன சமயாச்சாரியார்களான அறுபத்துமூன்று மஹாபுருஷர்களைப் பற்றிக் கூறுகிறது. இந்த மஹாபுருஷர்களைப் பற்றிய வேறு புராணங்களுமுண்டு. தீர்த்தங்கரர்களைப் பற்றிக் கூறும் சிறிய சிறிய புராணங்களுமுண்டு.

இவற்றைத் தவிர கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் தோன்றியது பத்ம புராணம். இதில் ஸ்ரீராமனுடைய சரித்திரத்தைக் காணலாம். இதனை ஜைன ராமாயணம் என்ற பெயரில் அழைப்பதுமுண்டு. வால்மீகி ராமாயணக் கதைகளுக்கும் இதில் கூறப்பட்டுள்ள கதைகளுக்கும் வேறுபாடுகள் பலவுண்டு. ராமன் கதையைப் போலவே கண்ணனுடைய சரித்திரத்தைக் கூறும் 'ஹரி வம்சம்' போன்ற புராண நூல்களும் ஜைனர்களின் நூல் வரிசைகளில் காணப் படுகின்றன.

காவியங்கள் :

மல்லிசேனர் இயற்றியது நாககுமாரகாவியம் என்ற நூல். 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாககுமாரனைப் பற்றி காவியமாகப் படைக்கப் பட்டுள்ளது. இந்த நாககுமாரன் மகததநாட்டு மன்னராகத் திகழ்ந்தவர். இந்த நூல் "ஸ்ருதபஞ்சமிகதை" என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. இக்கதையை அடிப்படையாகக் கொண்டு தமிழில் எழுந்த சிறுகாப்பியமே நாககுமார காவியமாகும்.

மற்றும், தன்ய குமார சரித்திரம், பத்ரபாஹு சரித்திரம், க்ஷத்ர சூடாமணி போன்ற காவியங்களும் ஜைனர்களால் படைக்கப்பட்டுள்ளன. ஒரு சில காவியங்களுக்குத் தமிழில் உரைநூல்களும் (சுவடிகளாக) தஞ்சை சரஸ்வதிமஹால் நூலகத்திலுள்ளன.

ஸ்தோத்திரங்கள் ;

ஜைன மதத்தின் ஆசாரிய புருஷர்களான தீர்த்தங்கரர்களை வழிபாடு புரியும் போழ்து அந்த தீர்த்தங்கரர்களின் புகழ்பாடும் ஸ்தோத்திரங்களையும் இயற்றும் மரபு ஜைனர்களிடம் இருந்துள்ளது. இத்தகைய ஸ்தோத்திரங்கள் பலவுண்டு. பாஹுபலிநாதாஷ்டகம் (बाहुबलिनाथाष्टकम्) சந்த்ரநாதாஷ்டகம் (चन्द्रनाथाष्टकम्) பார்ச்வநாதாஷ்டகம் (पार्श्वनाथाष्टकम्) சமந்தபத்ர ஸ்தோத்ரம் (समन्तभद्रस्तोत्रम्) ஆகியவற்றை உதாரணமாகக் கூறலாம்.

ஆகவே, ஜைன சமயத்தைச் சார்ந்த ஸம்ஸ்கிருதப் புலவர்கள் சாஸ்திரங்கள் தொடங்கி சிறுசிறு ஸ்தோத்திரங்கள் வரை பல்வேறு நூல்களை இயற்றி ஸம்ஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கும் ஜைன மதத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளனர் எனில் மிகையில்லை.

தென்னிந்தியாவில் சமணம்

மஹாவீரர் ஜைன சமயத்தை வடஇந்தியா முழுதும் பரப்பியதால் ஜைன சமயம் வடஇந்தியா முழுதும் பரவியது. சந்திரகுப்த மௌரியரின் ஆட்சி காலத்தில் (கி. பி. 3, 4) வட இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்டது. சந்திரகுப்தர் ஜைன சமயத்தைச் சார்ந்தவராதலால், சந்திரகுப்தரின் குருவான "பத்ரபாஹு" என்பவருடன் ஏராளமான ஜைனர்கள் தெற்கு நோக்கி வந்து மைசூரில் "சிரவணபெள்குள" என்னும் ஊரில் தங்கினார்கள். பின்னர், இங்கிருந்து ஜைனமதத் தலைவர்கள் தக்காணம் மற்றும் தென்னிந்தியா முழுதும் பரவி ஜைன மதத்தைப் பரப்பினார்கள். இவர்களில் "பத்மநந்தி" என்பவர் துறவுபூண்டு "குந்தகுந்தம்" என்ற குன்றில் வாழ்ந்து வந்தார். இவர் முன் கூறிய பத்ரபாஹு என்பவரின் சீடராவார். ஸம்ஸ்கிருத மொழியில் புலமை மிக்கவர். இவர் குந்தகுந்தம் என்ற குன்றிலேயே வாழ்ந்து வந்தமையால் "குந்தகுந்தாச்சாரியார்" என்றே அழைக்கப்பட்டார். இவருக்கு ஏலாச்சாரியார், க்ரத்ரபிச்ச (Grdhrapiccha) வக்ரக்ரீவர் என்ற வேறு பெயர்களும் உண்டு. இவரே த்ராவிட தேசத்தில் (தென்னிந்தியாவில்) ஜைன சங்கம் தோற்றுவித்த மூலபுருஷராகக் கருதப்படுகிறார். குந்தகுந்தாச்சாரியார் ஸம்ஸ்க்ருத மொழியில் 84 நூல்கள் இயற்றியுள்ளதாகவும், சில நூல்கள் மட்டுமே தற்போது கிடைப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். (இவர்மீது இயற்றப்பட்ட "குந்தநாதாஷ்டகம்" என்ற பெயரில் ஒரு ஸ்தோத்திரச்சுவடி சரஸ்வதி மஹால் நூலகத்தில் S. No. 37 உள்ளது.)

தக்காணம் முழுவதும் பரவிய ஜைன சமயத்திற்கு, ஆட்சி புரிந்த மன்னர்கள் ஆதரவளித்தனர். இவர்களில் கங்கர், கதம்பர், சாளுக்கியர், ராஷ்டிரகூடர் ஆகிய மன்னர் பரம்பரையினர் குறிப்பிடத்தக்கவர்கள், தமிழ்நாட்டில் பல்லவர்களும், சோழ, சேர, பாண்டிய மன்னர்களும் இம்மதத்திற்கு ஆதரவளித்தனர். பல்லவ மன்னன் மகேந்திர பல்லவன் சமண சமயத்தைச் சார்ந்து பின்னர் சைவத்திற்கு மாறியவன் என்பது அனைவரும் அறிந்ததே இவன் சமணத்தைச் சார்ந்திருந்தமையால் அவனது ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் சமணம் மேலோங்கியிருந்தது. பல்லவர்களின் ஆட்சிக்குப் பின்னர் சோழர்களும் சமண மதத்திற்கு ஆதரவளித்துள்ளனர்.

கண்டராதித்த சோழரால் ஆதரவுபெற்ற "கண்டராதித்தப் பெரும் பள்ளி", சுந்தரசோழரின் ஆதரவுபெற்ற "சுந்தரசோழப் பெரும்பள்ளி", குலோத்துங்கனால் அளிக்கப்பெற்ற கொடையால் கூகூரில் இருந்த "குலோத்துங்கப் பெரும்பள்ளி". குந்தவை ஜினாலயம் போன்ற ஜைனர்களின் வாழ்விடம் பற்றிய செய்திகள் அறியமுடிகிறது.

முதலாம் ராஜராஜன் காலத்தில் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோவில் விமானத்தின் தென்புறச் சுவரில் உள்ள கல்வெட்டின்படி குடவாயி லுடன் இணைந்துள்ள கிராமங்களான ஆரப்பாழ், கீரன்தேவன்குடி, பாளையூர் போன்ற ஊர்களிலிருந்த பள்ளிகள் பற்றியும், அப்பள்ளிகளுக்குரிய பள்ளிச் சந்த நிலங்கள் நீக்கியும், மற்ற நில வருவாயைத் தஞ்சைப் பெருவுடையார் கோவிலுக்கு அளிக்கவேண்டும் என்னும் செய்திகள் காணப்படுவதாகக் குடவாயில் M. பாலசுப்ரமண்யம் "குடவாயிற்கோட்டம்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் சோழ நாட்டில் சமணம் தழைத்தோங்கியிருந்தது என்பது தெளிவு.

இதைப்போலவே பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும் சமணம் தழைத்தோங்கி இருந்துள்ளது. பின்னர், சைவ சமய குருமார்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் சைவ சமயத்தின் பெருமையைக் கூறியும், தலங்கள்தோறும் சென்று தேவாரப் பாடல்களைப் பாடியும் சைவ சமயத்தை மேலோங்கச் செய்தனர். அனல்வாதம், புனல்வாதம் கல்லைத் தெப்பமாகச் செய்தது போன்றவற்றால் சைவ சமயம் மேலோங்கி சமணம் வலுவிழந்தது.

சமண சமயத்தைப் பின்பற்றுகின்றவர்களின் எண்ணிக்கை நாளடைவில் குறைந்தது, ஆனால் சமணர்களின் கொள்கைகளான கொல்லாமை, புலால் உண்ணாமை முதலிய பழக்கங்கள் தமிழகத்தில் வேரூன்றிவிட்டன.

இன்றளவும், ஜைனர்களின் எண்ணிக்கை குறைந்த அளவிலேயே இருந்துவருகிறது. வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, தஞ்சாவூர், மைசூர், தென் கன்னடம் முதலிய இடங்களில் இன்றும் ஜைன மதத்தினர் வாழ்ந்து வருகின்றனர்.

சரஸ்வதி மஹாலிலுள்ள ஜைனமதச் சுவடிகள் :

தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தின் ஸம்ஸ்கிருதப் பிரிவில் காணப்படும் சுவடிகளின் அகரவரிசைப் பட்டியல் தற்போது முதன்முதலாக வெளிவருகிறது.

இரண்டாம் சரபோஜி மன்னரின் காலத்திலோ, அதற்கு முன்போ இந்நூலகத்தில் ஜைன மதச் சுவடிகளில் இரண்டு சுவடிகள் மட்டுமே பாதுகாக்கப்பெற்றுள்ளன. 8-1-1921 ஆம் ஆண்டு J. L. தொகுதி என்று அழைக்கப்படும் ஜம்புநாத பட்லாண்டகே என்பவரால் தொகுக்கப்பட்ட சுவடிகள் அன்பளிப்பாக இந்நூலகத்திற்கு வந்து, தனித் தொகுதியாக வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. (J. L. Colection) இச் சுவடித் தொகுப்பிலுள்ள சுவடிகளில் 3 தலைப்புக்கள் ஜைன சமயத் தொடர்புடைய சுவடிகளாகும். ஆக 5 சுவடிகளைப் பற்றிய குறிப்புக்களுடன் 1932 ஆம் ஆண்டில் வெளிவந்த சுவடி விவரப் பட்டியலில்(Descriptive Catalogue Vol. XIVல்) எண். 8239 முதல் 8243 வரையுள்ள எண்களில் விளக்கமாக அறியலாம். இவை அனைத்துமே காகிதச் சுவடிகளாகும்.

1973, 74 ஆம் ஆண்டுகளில் இந்நூலகத்தில் ஸம்ஸ்க்ருத பண்டிதர்களாகப் பணியாற்றிய திரு N. K. ராமானுஜ தாத்தாசாரியார் அவர்களும், திரு K. E. கோவிந்தன் அவர்களும் அரிதின் முயன்று ஜைன மதத் தொடர்புடைய ஓலைச் சுவடிகளை இந்நூலகத்தில் சேர்த்துள்ளனர். இச் சுவடிக் கட்டுகளில் பல்வேறு தலைப்புக்குரிய நூல்களும், ஸ்தோத்திரங்களும் புராணங்களும் காணப்படுகின்றன. இச்சுவடிகள் திருச்சேறை, நெல்லியாங்குளம், சாத்தமங்கலம், கீழ்ச்சாத்தமங்கலம், இளங்காடு, திருவாய்ப்பாடி, பொன்னூர், முகலூர் ஆகிய ஊர்களிலிருந்து பெறப்பட்டவை.

இச்சுவடிகளைப் பரிசீலிக்கும்போது 297 தலைப்புக்களில் நூல்கள் காணப்படுகின்றன. இச்சுவடிகளில் காணப்பெறும் நூல்களை இயற்றிய ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் :— தன்யஸூரி, ஸ்நஸேநாசார்யர்,

மானதுங்காச்சாரியார். வாதிராஜஸூரி. பட்டிதீக்ஷித தேவதத்த. வாதீபஸிம்ஹர், ஆசாதரஸூரி, மல்லிஷேதேவர். ஸமந்தபத்ரஸ்வாமி, அகலங்கபட்டர், ஸித்ததேவ திவாகரர் (धन्यसूरी. श्रसेनाचार्यः. मानतुङ्गाचार्यः, वादिराजसूरी, भट्टीदीक्षितदेवदत्तः, वादीभसिंहः, आशाधरसूरी, मल्लिषदेवः, समन्तभद्रस्वामि, अकलङ्कभट्टः, सिद्धदेवदिवाकरः) போன்ற ஆசிரியர்களைக் குறிப்பிடலாம். இத்தொகுப்புக்களில் குறிப்பிடத்தக்க வேறுபல ஆசிரியர்களின் நூல்களும் இடம்பெற்றுள்ளன.

கி. பி. 3. 4-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவரான ஸமந்தபத்ரர் இயற்றியுள்ள நூல்களில் ஸ்வயம்பூ ஸ்தோத்ரம், ரத்னகரண்டகம் (स्वयम्भूस्तोत्रम्, रत्नकरण्डकम्), கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸித்ததேவ திவாகரர் இயற்றிய கல்யாணமந்த்ர ஸ்தோத்ரம், கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அகளங்கபட்டரின் தத்வார்த்தஸூத்ரம், அகளங்க ஸ்தோத்ரம் ஆகிய நூல்கள் இத்தொகுதிகளில் காணப்படுகின்றன.

வேறு எந்த நூலகத்திலும் காணப்படாத பல ஸ்தோத்திரங்கள் இத்தொகுதிகளில் காணப்படுவதும் சிறப்புக்குறியது. கி. பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான குந்தகுந்தாச்சாரியார் பெயரில் இயற்றப்பெற்ற குந்தகுந்தாஷ்டகம் போன்ற ஸ்தோத்திரங்களும், பல்வேறு பெயர்களில் காணப்படும் வேறுபல ஸ்தோத்திரங்களும் இத் தொகுதியில் காணலாம். இவற்றில் ஒருசில நூல்களுக்கு தமிழுரைகளும் ஸம்ஸ்கிருத உரை நூல்களும் காணப்படுகின்றன.

ஜைன சமயத் தொடர்புடைய இந்தச் சுவடிகளின் அகர வரிசைப் பட்டியல் தனி நூலாக வெளிவருவது ஜைன சமயம் பற்றி ஆராயும் ஆய்வாளர்களுக்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

ந. ஸ்ரீனிவாஸன்,
(ஸம்ஸ்கிருத பண்டிதர்)
ஸரஸ்வதி மஹால் நூலகம்.

Sl. No.	Title (Devanagari)	Title (Roman)	Author
1	अकलङ्कस्तोत्रम्[1]	Akalanka Stotram	
2	अकलङ्काष्टकव्याख्या	Akalankashtaka Vyakhya	
3	अनन्तनाथाष्टकम्	Anantanathastakam	
4	अपराजितमन्त्रः	Aparajita Mantrah	
5	अर्हपरमेश्वरार्चनाविधानम्	Arhaparamesvara Archana Vidanam	
6	अर्हस्तोत्रव्याख्या	Arhastotra Vyakhya	
7	अष्टोत्तरशतसहस्रनामस्तोत्रम्	Astotrasata Sahasra-nama Stotram	
8	"	"	
9	"	"	
10	"	"	Jinasenacarya
11	अष्टोत्तरशतसहस्रनामम्	Astotrasata Sahasranamam	Snasenacarya
12	आचार्यभक्तिः	Acharya Bhaktihi	
13	"	"	
14	"	"	
15	आचार्यविधानम्	Aacharya Vidhanam	

1. The stotra also called Akalankastaka. The information in M.D. 9424 that this a stotra in praise of Akalanka himself, the logician, and that in India Office Library, and 7600 that is on Siva are both wrong. The stotra is on Arhan who is said to

Subject	Complete or Incomlete	Script	Condition	Greem No.	Leaves
Stotram	Complete	Grantha	Fairly good	870	6
,, Comen	,,	,,	V. Decaying	879	15
Stotram	,,	,,	Fairly good	883	1
Mantra	,,	,,	,,	911	1
Kalpa	,,	,,	Decaying	931	14
Stotra	,,	G. & Ta	Fair	920	12
,,	,,	G	Good	952	15
,,	,,	,,	,,	874	8
,,	,,	,,	Fair	890	8
,,	,,	,,	,,	888	8
Kalpa	,,	,,	Decaying	874	8
Stotra	,,	,,	Fair	871	4
,,	,,	,,	,,	883	4
,,	,,	,,	,,	1593	3
,,	,,	,,	Good	901	1

be the real Siva (Mangala), the real Vishnu (Vyapaka) and so on. There are a Siva stotra and on Akalanka stotra, is also wrong. (Refer N. C. C. Vol. I).

Sl. No.	Title (Devanagari)	Title (Roman)	Author
16	आद्याष्टकम्	Adyastakam	
17	ईर्यापथम्	Eeryapatham	
18	"	"	
19	उपदेशग्रन्थम्	Upadesagrantham	
20	उपाध्यायविधानम्	Upadhyaya Vidhanam	
21	कर्मदहनमन्त्रः	Karmadahana-mandrah	
22	कल्याणमन्दिरम्[1]	Kalyanamandiram	Siddha deva devakarah
23	"	"	also known as Kumuda candra
24	"	"	"
25	"	"	"
26	"	"	"
27	कल्याणस्तवः	Kalyanastavah	Vadiraja Suri
28	"	"	"
29	"	"	"
30	"	"	"
31	"	"	"
32	"	"	"

1. Stotra on Parswanatha.

Subject	Complete or Incomplete	Script	Condition	Green No.	Leaves
Stotram	Complete	Grantha	Fair	883	1
,,	,,	,,	,,	877	1
,,	,,	,,	,,	918	3
,,	,,	,,	,,	883	4
Sastra	,,	,,	Fairly Good	901	1
Mantra	,,	,,	,,	877	4
Stotram	,,	,,	,,	884	6
,,	,,	,,	,,	888	5
,,	,,	,,	,,	890	5
,,	,,	,,	,,	927	6
,,	,,	,,	,,	927	9
,,	,,	,,	,,	929	6
,,	,,	,,	,,	930	6
,,	,,	,,	,,	890	6
,,	,,	,,	,,	888	4
,,	,,	,,	,,	884	4
,,	,,	,,	,,	873	4

Sl. No.	Title (Devanagari)	Title (Roman)	Author
33	कल्याणमन्दिरस्तोत्रम्	Kalyanamandira Stotram	
34	,,	,,	
35	कलशाभिषेकविधानम्	Kalasabhisheka Vidhanam	
36	कलिकुण्डाराधनम् — मृत्युञ्जयाराधना	Kalikundaradhanam Mrutunjayaradhana	
37	कुण्डोदकमन्त्रः	Kundodakamantrah	
38	कुन्दुनाथाष्टकम्	Kundunathastakam	
39	क्रियापुस्तकम्	Kryapustakam	
40	,,	,,	
41	क्षत्रचूडामणिः (द्राविडार्थर्पिता)	Kstracudamanih (with Tamil Tika)	Vadibhasimhah
42	गणधरः	Ganadharah	
43	,,	,,	
44	गणधरवलयम्	Ganadhara Valayam	
45	गणधरवलयमन्त्रः	Ganadhara Valaya Mantrah	
46	गन्धोदकप्रोक्षणम्	Gandhodaka prokshanam	
47	गरुडदण्डकम्	Garudadandakam	
48	गुणभद्रशान्त्यष्टकम्	Gunabhadra-santyastakam	
49	गोमठेश्वरगद्यम्	Gomathesvara gadyam	

Subject	Complete or Incomlete	Script	Condition	Green No.	Leaves
Stotram	Complete	Grantha	Fairly Good	874	4
,,	,,	,,	,,	874	4
Kalpa	,,	,,	,,	899	10
,,	,,	,,	Good	898	4
Mantra	,,	,,	,,	898	12
Stotram	,,	,,	Fairly Good	883	2
Kalpa	,,	,,	,,	865	39
,,	,,	,,	,,	871	3
Kavya	,,	G. & Ta.	,,	857	174
—	,,	Grantha	,,	939	14
—	,,	,,	,,	883	8
—	,,	,,	,,	899	30
Mantra	,,	,,	Decaying	861	4
Kalpa	,,	,,	Fairly Good	952	1
Stotram	,,	,,	,,	904	2
,,	,,	,,	,,	928	2
Kavya	,,	,,	,,	883	2

Sl. No.	Title (Devanagari)	Title (Roman)	Author
50	घोरप्रक्षालनमन्त्रः	Ghoraprakshalana mantrah	
51	चतुर्दशिप्रक्रिया	Caturdasiprakriya	
52	,, विधानम्	,, Vidhanam	
53	चन्तारिमङ्गलम्	Cantari Mangalam	
54	चन्तारिमङ्गलम्	Cantarimangalam	
55	चन्द्रनाथाष्टकम्	Cantranathastakam	
56	चारित्रभक्तिः	Caritrabhaktihi	
57	,,	,,	
58	,,	,,	
59	चित्तवल्लभम्	Cittavallabham	
60	चैत्यभक्तिः	Caityabhakthihi	
61	,,	,,	
62	,,	,,	
63	चैत्यालयवन्दना	Caityalaya Vandana	
64	चैत्यालयवर्णना	Caityalaya Varnana	
65	जपलक्षणम्	Japalaksanam	
66	जयमाला	Jayamala	

Subject	Complete or Incomplete	Script	Condition	Green No.	Leaves
Mantra	Complete	Grantha	Fairly good	901	4
Kalpa	,,	,,	,,	901	15
,,	,,	,,	,,	933	34
Stotram	,,	,,	,,	877	2
,,	,,	,,	Fair	883	2
,,	,,	,,	,,	883	1
,,	,,	,,	,,	883	5
,,	,,	,,	,,	918	5
,,	,,	,,	,,	1593	4
,,	,,	,,	,,	883	5
,,	,,	,,	,,	871	2
,,	,,	,,	,,	883	6
,,	,,	,,	,,	918	9
,,	,,	,,	,,	883	2
,,	,,	,,	,,	889	5
Kalpa	,,	,,	,,	883	1
Stotram	,,	,,	,,	883	4

Sl. No.	Title (Devanagari)	Title (Roman)	Author
67	जयमाला	Jayamala	
68	जलयन्त्रम्	Jalayantram	
69	जिनगुणसुभक्तिः	Jinagunasubhakti	
70	जिनगुणसम्पत्तिः	Jinagunasampathi	
71	जिनगुणसम्पत्तिः	Jinagunasampathihi	
72	जिनगुणसम्पत्तिविधानम्	Jinagunasampatthi Vidhanam	
73	जिनचैत्यम्	Jinacaityam	
74	जिनचैत्यालयम्	Jinacaityalayam	
75	जिनधर्मः	Jinadharmah	
76	जिनप्रशस्ति	Jinaprasasti	
77	जिनभक्तयः (क्तिः)	Jinabhaktayah (ktihi)	
78	जिनविषयः	Jinavishayah	
79	जिनश्रुतम्	Jinasrutam	
80	जिनसंहिता	Jinasamhita	
81	जिनस्तोत्रम्	Jinastotram	
82	जिनसुप्रभातम्	Jinasuprabhatam	
83	जिनाष्टोत्तरसहस्रनामस्तोत्रम्	Jina Astotrasahasra-namastotram	

Subject	Complete or Incomlete	Script	Condition	Green No.	Leaves
Stotram	Complete	Grantha	Fair	901	2
Silpa	,,	G. & Ta.	,,	918	1
Bhakthi	,,	Grantha	,,	862	50
,,	,,	,,	,,	877	3½
,,	,,	,,	,,	947	11
,,	,,	,,	,,	901	7
Stotram	,,	,,	Fairly Good	901	1
,,	,,	,,	,,	901	1
Sastra	,,	,,	,,	901	1
Stotram	,,	,,	Good	903	10
,,	,,	,,	Decaying[1]	854	89
Dharma	,,	,,	Good	891	9
,,	,,	,,	,,	901	1
Samhita	,,	,,	,,	907	273
Stotram	,,	,,	,,	883	2
,,	,,	,,	,,	889	2
,,	,,	,,	,,	888	8

1. Very old and decaying condition.

Sl. No.	Title (Devanagari)	Title (Roman)	Author
84	जिनाष्टोत्तरसहस्रनामस्तोत्रम्	Jina Astotrasahasra-namastotram	
85	जिनेन्द्रयज्ञविधि:	Jinandrayagna Vidhihi	
86	जिनेश्वरपूजा	Jinesvarapuja	
87	जिनगुरुनामानि	Jinagurunamani	
88	जैनपरंपरा	Jainaparampara	
89	जैनमन्त्रा:	Jaina Mantrah	
90	,,	,,	
91	,,	,,	
92	,,	,,	
93	,,	,,	
94	जैनविषय:	Jaina Vishayah	
95	,,	,,	
96	,,	,,	
97	,,	,,	
98	,,	,,	
99	,,	,,	
100	,,	,,	

Subject	Complete or Incomplete	Script	Condition	Green No.	Leaves
Stotram	Complete	Grantha	Good	1592	28
Prayoga	,,	,,	,,	903	31
Kalpa	,,	,,	,,	892	27
Katha	,,	,,	,,	883	2
,,	,,	,,	,,	912	4
Mantra	,,	,,	,,	855	46
,,	,,	,,	,,	860	24
,,	,,	,,	,,	863	66
,,	,,	,,	Decaying	894	25
,,	,,	,,	Fair	912	4
—	,,	,,	,,	871	3
—	,,	,,	,,	873	4
—	,,	,,	,,	877	3
—	,,	,,	,,	880	3
—	,,	,,	,,	883	5
—	,,	,,	,,	883	2
—	,,	,,	,,	883	2

Sl. No.	Title (Devanagari)	Title (Roman)	Author
101	जैनस्तोत्रम्	Jaina Stotram	
102	,,	,,	
103	,,	,,	
104	जैनसुप्रभातम्	Jaina Suprabhatam	
105	जैनाह्निकम्	Jainahnikam	
106	ज्वालामालिनिमन्त्रः	Jvalamalini mantrah	
107	ज्वालामालिनि विधानम्	Jvalamalini Vidhanam	
108	छतुश्लोकः	Chatuslokah	
109	तत्त्वार्थसूत्रम्	Tatvartha Sutram [1]	Akalankabhatta
110	,,	,,	
111	,,	,,	
112	तत्त्वार्थाधिगमसूत्रव्याख्या	Tatvarthadhigama Sutra Vyakhya[2]	Umasvativacaka
113	तर्पणविधिः	Tarpana Vidhihi	
114	तीर्थङ्करदण्डकम्	Tirthankara dandakam	
115	तीर्थङ्करपुराणम्	Tirtankarapuranam	

1. Unspecified.

2. तत्त्वार्थरत्नप्रदीपिकाख्य टीकोपेता in 10 chs. in Sutra style at Pataliputra; on Jaina religion and philosaphy, accepted as authorty both by S'vet and Dig. Jains by Umasvativacaka (NCC. PP. 77)

Subject	Complete or Incomlete	Script	Condition	Green No.	Leaves
Stotram	Complete	Grantha	Fair	918	3
,,	,,	,,	,,	948	4
,,	,,	,,	,,	883	2
,,	,,	,,	,,	873	2
Kalpa	,,	,,	,,	883	5
Mantra	,,	,,	,,	898	4
,,	,,	,,	,,	898	18
Padya	,,	,,	,,	880	1
Sutram	,,	,,	Good	864	17
,,	,,	,,	Fair	879	17
,,	,,	,,	Good	917	31
Vyakhya	Incomplete	,,	Decaying	853	111
Dharma	Complete	,,	Fair	883	1
Stotram	,,	,,	Good	886	13
Puranam	,,	,,	Fair	882	50

Sl. No.	Title (Devanagari)	Title (Roman)	Author
116	त्रिकालतीर्थङ्कर विधानम्	Trikalateerthankara Vidhanam	
117	त्रैवर्णिकचर्या (द्राविडार्थोपेता)	Trivarnikacarya with Tamil meaning	
118	थोसामिदण्डकम्	Thosami dandakam	
119	,,	,,	
120	,,	,,	
